பக்கங்கள்: இருபத்திரண்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 17 ஞாயிற்றுக்கிழமை (02.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 249

# கிளிநொச்சி அரசாங்க அதிபர் புலனாய்வுப் பொலிஸாரால் கைது!

## காரணம் எதுவும் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை



கொழும்பு, ஓகஸ்ட் 2

கிளிநொச்சி அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் வியாழக்கிழமை இரவு வவுனியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்புக்கு அழைத்து வரப்பட்ட அரச அதிபர் தடுத்துவைத்து விசாரிக்கப் படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகரா தெரிவித்தார்.

அரசஅதிபர்மீதுவிசாரணைகள்நடைபெற்றுவருவதால்காரணங்களையோகருத்துக்களையோ தெரிவிக்க முடியாது என்றும் அவர் சொன்னார். (22ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களில் தங்கியுள்ள 70 பேர் வாக்களிக்க அரியாலையில் நிலையம்

யாழ்ப்பாணம், ஓக. 2

எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ்.மாநகர சபைத் தேர்தலில், இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ளவர்கள் வாக்களிக்க தனியான வாக்களிப்பு நிலையம் ஒன்று அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் அமைக்கப்படும.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் முகாம்களில் தங்கியுள்ளவர்களில் மாநகர சபை தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள 70 பேருக்கு வாய்ப்பளிக்க இந்த வாக்களிப்பு நிலையம் அமையவுள்ளது.

வாக்களிக்கத் தகுதியுடையவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் வாக்களிக்க செல்வதற்கான போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது என்று தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி பொ. குகநாதன் தெரி வித்தார்.

அதேவேளை -

யாழ்ப்பாணத்துக்கு வெளியே தங்கியுள்ளவர்களில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள 5,930 பேர் வாக்களிக்க கம்பஹா, கொழும்பு, அநுராதபுரம், புத்தளம், களுத்துறை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் பதினாறு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ-1)

## பொட்டு அம்மான் கொழும்பிலிருந்து தப்பினாரா....?

கொழும்பு, ஓக. 2

தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைத் தலைவர் பொட்டு அம்மான் கொழும்பில் தங்கியிருந்த பின்னர் அங்கிருந்தும் தப்பிச் சென்றுவிட்டார் என்று கருதப்படுவதாக இணையத்தளம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

கொழும்புப் பிரபா என்று அழைக்கப்படும் கைதான விடுதலைப்புலி உறுப்பினர் (22ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி போன்றே அதிகாரப் பகிர்வும் இலங்கையில் காணாமற் போய்விடும்!

### எதிர்வு கூறுகிறார் கேணல் ஹரிகரன்

புதுடில்லி, ஓக.2

சிறிலங்கா அரசியல்வாதிகள் எப்போதும் இரட்டை நிலைப்பாடு கொண்டவர்கள். வேண்டும்போது எல்லாம் அவர்கள் எதனை வேண்டுமானாலும் பேசுவார்கள்; செய்வார்கள். அவர்கள் முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்டி பற்றிப் பேசினார்கள். இப்போது அதனைத் தூக்கி வீசிவிட்டு அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுகிறார்கள். சமஷ்டி போன்றே எதிர்காலத்தில் அதுவும் அரசியல் அரங்கில் இருந்து காணாமல் போய்விடும்.

இந்தியாவின் அரசியல் ஆய்வாளரும் இலங்கை அரசியல் பற்றி தொடர்ந்து எழுதி வருபவருமான கேணல் ஹரிகரன் (22ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கைச் சேர்ந்த 1,445 பேர் புதனன்று முகாம்களிலிருந்து தமது சொந்தப் பகுதிகளுக்கு

வவுனியா, ஓக. 2

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கியுள்ளவர்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 1,445 பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட வுள்ளனர்.

மீள்குடியமர்வு அமைச்சர் ரிசாட் பதியுதீன் இத்தகவலைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 5ஆம் திகதி இவர்கள் பஸ்கள் மூலம் அவர்களின் சொந்த இடங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர் என்று அவர் கூறினார்.

## இன்று தொடக்கம் ஏ-9 வீதியூடாக நாளாந்தம் 5 பஸ்கள் மதவாச்சிக்கு

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் சேவையில் இன்று தொடக்கம் போக்குவரத்துச் சபையின் ஐந்து பஸ்கள் நாள்தோறும் சேவையில் ஈடுபடவுள்ளன. ஒரு சில நாள்களில் சொகுசு பஸ் சேவையும் ஆரம்பமாகும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தத் தகவலை நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் நடத்திய தொடர் கலந்துரையாடல்களின் பிரகாரம் இச் சேவை ஆரம் பிக்கப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

இந்தச் சேவை தொடர்பான விவரங்களை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்திற்கும், மதவாச்சிக்கும் இடையிலான பேருந்து சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை (02.08.2009) தொடக்கம் ஒவ்வொரு நாளும் 5 பேருந்துகளில் இடம்பெறவுள்ளது.

மதவாச்சியில் இருந்து கொழும்பு மத்திய பேருந்து நிலையத்திற்கு இணைப்பு (22ஆம் பக்கம் பார்க்க)

## தடயங்கள் இல்லாது நுட்பமாக நடத்தப்பட்ட மூளாய்ப் பிள்ளையார் ஆலயப் பெருங் கொள்ளை

### பெரும் எடுப்பில் தேடுதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.2

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ள மூளாய்ப் பிள்ளையார் கோயிலில் நடத்தப்பட்ட பெரும்கொள் ளைச் சம்பவத்தின் சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க பெரும் எடுப்பில் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

பொலிஸாரும் இராணுவத்தினரும் ஆலயச் சுற்றாடல் பகுதியில் சல்லடை போட்டு நடத்திவரும் தேடுதல்களில் சில தடயப் பொருள்கள் கிடைத்துள்ளன.

ஆலயத்துக்கு விசேட பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு ஊரங்கு நேரத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து வெள்ளிக்கிழமை பிராயச்சித்த மற்றும் விசேட பூசைகள் நடத்தப்பட்டன என்றும், இப்போது வழமையான பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி உள்ளன (22ஆம் பக்கம் பார்க்க)



வெளிச்செல்லும் அழைப்புக்களில் 1800 நிமிடங்கள் இலவசம் !

CDMA பிற்கொடுப்பனவு பக்கேஜில் செலுத்தும் தொகைக்கு உயர் இலாபம் !

1. எந்தவொரு தொலைபேசி வலையமைப்பிற்குமான வெளிச்செல்லும்அழைப்புக்கள் ரூ. 2/-. செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்.
2. தெளிவான டிஜிடல் ஒலி. உரையாடலின் போது இணைப்பு துண்டிக்கப்படமாட்டாது.
3. மாதாந்தக் கட்டணம் ரூ. 300/-.

Fixed Line

வாடிக்கையாளர் சேவை இலக்கம் 011 7 100 100

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்முருகன் திருமணப் பணியகம்

இங்கு பதிவுகளுக்குள்ளாகும் மணமக்கள் விவரங்களில், தினமும் பொருத்தமானவர்களை தெரிவுசெய்து, உடனுக்குடன் அறிவித்தும் அறிமுகப்படுத்தியும் வருகின்றோம். பேருந்து, சிற்றூர்திகளில் பருத்தித்துறை வீதியாலும் யாழ்.பஸ்நிலையத்தில் இருந்து ஸ்ரான்லி வீதியாலும் பதிவுகளை மேற்கொள்ள விரும்பி வருவோர், ஆரியகுளம் சந்தியடியில் இறங்கி வரலாம். நல்லூர்க் கந்தனிடம் வரும் நாள்களிலும் வரலாம். 03.யாழ் வீதி, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். (87497)

T.P 021 222 9334 (COSY RESTAURANT சமீபம்)

## Printing Machine for Sale

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

★ Heidel Berg Kord grey - (18'' - 25¼'')

★ Heidel Berg Kord Black - (18'' - 22½'')

Long Box

முழுமையாகப் புதுப்பிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட மெஷின்கள் ஆறு (06) மாத கால உத்தரவாதத்துடன் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0777 519766
294 3250

(சி/560008)

## வாழ்த்துகின்றோம்



70 ஆவது பிறந்த தினத்தையும், 40ஆவது திருமண நாளையும் இன்று (02.08.2009) கொண்டாடும் P.சண்முகநாதன் (முன்னாள் பொறியியலாளர், தற்போதைய மும்மொழி பெயர்ப்பாளர், சமாதான நீதிவான்) உருத்திராதேவி தம்பதியினரை பல்லாண்டு வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

இல. 12, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (சி/560114)

ராணி, ஸ்ரீநிதி, ஸ்ரீகஜன், லோகன், சுரேஷ், கேதீஷ் குடும்பத்தினர்.

## திருமண சேவை

மணமக்களே! www.thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக் கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், பூிகைப் படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619. Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15. (சி/560006)

## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற ஒருவரும் மற்றும் விற்பனையாளரும், சிட்டை எழுதுநரும் தேவை ஆண், பெண் இருபாலரும் நேரில் வரவும்.

**யாழ் போன் ஷொப்**

இல.: 9, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (87503)

-கணனிப் பயிற்சி நெறிகள்-
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**Diploma in Desktop Publishing -**
Adobe Page Maker
Adobe Photo Shop } 03 Months
Coral Draw

**Diploma in Accounting Packages -**
Quick Books
Tally } 03 Months
Acc Pack

பயிற்சிநெறியின் பின்னர் தனியார் நிறுவனங்களில் தொழில்வாய்ப்பினை பெறுவதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**Chamber of Commerce and Industries of Yarlpanam, 175, Point Pedro Road, Anaipanthi, Jaffna.**

## WORK PERMIT

NORWAY, ITALY, AUSTRALIA, CANADA

ஆகிய நாடுகளிற்கான வேலைவாய்ப்பு சம்பந்தமான ஆலோசனைகளுக்கு.

Ram - 071 4353000

## Printing Machinery தேவை

★ NEBULA Cylinder Letter Press

★ Heidel Berg Cylinder Letter Press

உடன் தொடர்பு கொள்ளவும்:

077 751 9766
294 3250

(சி/56008)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 2

கைதடி, கரவிடை அண்ணமார் ஆலயத்தின் மகேஸ்வர பூசை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

* * *

சாவகச்சேரி, கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாய நவநாள் உற்சவம் கடந்த 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் பாடப் பலிப்பூசை இடம்பெற்று திருச்சொரூப பவனி இடம்பெறும். (204-207)

* * *

உடுப்பிட்டி, ஓக. 2

அல்வாய், வேவிலந்தை முத்து மாரியம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் சப்பரத் திருவிழா நாளை திங்கட்கிழமையும் தேர்த் திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன் கிழமையும் நடைபெறும். (204-155)

* * *

நீர்வேலி வாய்க்காற்ரவைப்பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. திருவிழாக் காலங்களில் தினமும் இரவு 7 மணியளலில் ''விநாயகர் பரத்துவமும் வழிபாடும்'' எனும் தலைப்பில் சைவப் புலவர் கந்த சத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெற்று வருகின் றது. நாளை மறுதி னம் செவ்வாய்க் கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த் தத்திருவிழாவும் இடம்பெறும். (9)

* * *

உரும்பிராய் காமாட்சியம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமையும் தீர்த் தத்திருவிழா மறுநாள் புதன் கிழமையும் நடைபெறும். (204)

* * *

குப்பிழான், கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த் திருவிழா மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கும் நடைபெறும். (204)

## இறுதியாட்டம்

வலி.வடக்கு, ஓக.2

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம் முதல் தடவையாக யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு தெல்லிப்பழை பூமா விளையாட்டுக்கழக மைதானத்தில் உமா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும், சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி கு.விஸ்வலிங்கம், எஸ்.பாலசிங்கம், விளையாட்டு அலுவலர் கே.முகுந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (1-86)




## மிருசுவில் படித்த மகளிர் திட்டம் - துர்க்காபுரம்
## ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

ஞானதுர்க்கா அம்பாள் அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களை காலம் தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் துர்க்காபுரம் என்னும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ துர்க்கை அம்பாளுக்கு இவ்வருடம் 10 ஆம் திங்கள் அலங்கார உற்சவம் நடத்த எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈய்ந்துள்ளாள்.

அலங்கார உற்சவம் நிகழும் விரோதி வருடம் ஆடி மாதம் 12 ஆம் திகதி (28.07.2009) செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஆடிமாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை (06.08.2009) இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் 10 ஆம் திருவிழா நிறைவுபெறுகின்றது.

9 ஆம் நாள் விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்கை தேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறிநின்று துர்க்கா தேவியின் வீதி உலாவுடன் சேர்ந்து வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். தினந்தோறும் காலை 9 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூசை திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலாவும் நடைபெறும்.

குறிப்பு:- அம்மன் அடியார்களின் நன்மைகருதி இ.போ.ச. பஸ் வண்டிகள் யாழ்.மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து காலை 7.30, 9.30, 11.30 மணியளவில் புறப்பட்டு தேவஸ்தானத்தை சென்றடையும்.

*இறைபணியே இன்பப்பணி!*

பரிபாலன சபை,
துர்க்காபுரம் ப.ம.திட்டம்,
மிருசுவில்.

- ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு சி.நவரத்தின ஐயா.

(87513)

## தரமான கைக் கடிகாரங்கள் மிகவும் மலிவு விலையில் .......

ஆண், பெண் இருபாலருக்குமுரிய தரமான கைக் கடிகாரங்கள் மலிவு விலையில் தெரிவு செய்து கொள்ள.

இல.: 148, கோயில் வீதி (புனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம் என்னும் முகவரியை நாடி வாருங்கள்.

தெரிவுகட்கு முந்துங்கள்

தொடர்பு : 021 222 3818
077 452 8818

(சி/560109)

## டான் தமிழ்ஒளி Lanka

ஐரோப்பாவின் முதல் தமிழ் தொலைக்காட்சி

# டான் தமிழ்ஒளி
# தேவை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒளிபரப்பை ஆரம்பித்துள்ள டான் தமிழ்ஒளி தொலைக்காட்சியின் யாழ். கலையகத்தில் பணியாற்ற ஒலி-ஒளிபரப்புத்துறையில் ஆர்வமுள்ள அறிவிப்பாளர்கள், நிகழ்ச்சித்தயாரிப்பாளர்கள், மற்றும் அலுவலக பணியாளர்கள் தேவை.

விண்ணப்பியுங்கள்:
mail@dantv.tv

விபரங்களுக்கு: 060 2700283

(சி/560009)


## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா குணரத்தினம்

(யாழ்.குணரத்தினம் ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை ஸ்ரீமுருகன் அரிசி ஆலை)

அன்னாரின் பிரிவினால் துயருற்று இருக்கும் மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர், அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (சி/560120)

இராசா சண்முகலிங்கம்
குடும்பம் (சகோதரர்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மக்களுக்கும் ஏற்புடைய அரசியல் தீர்வு இலங்கையில் எந்தக் காலத்தில் சாத்தியம்......?

## கோழியைக் குழம்பு வைத்துச் சாப்பிடலாமா அல்லது பொரித்துச் சாப்பிடலாமா என்ற "சண்"ணின் கேள்வி நீடிக்கிறது!

**ந.பரமேஸ்வரன்**

பிரபாகரனின் உடலைத் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த நண்பர் ஒருவர் ''இனி என்ன, எல்லாம் முடிந்து விட்டது, தமிழர்களின் சரித்திரமும் சரி'' என்றார். நண்பர் உணர்வு பூர்வமாகப் புலிகளின் போராட்டத்தை ஏற்றுக்கொண்டவர். நண்பரின் கூற்றை அப்போது முற்று முழுதாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தாலும் அவரது கருத்தை ஆமோதிப்பது போல் தலையை ஆட்டினேன். பிரபாகரன் கொல்லப்பட்ட பின்னர் நடைபெற்றுவரும் சம்பவங்களைப் பார்க்கும் போது நண்பர் கூறியது சரிதானோ என்று எண்ணத் தோன்றுகின்றது.




2007ஆம் ஆண்டு முற்போக்குச் சிந்தனையுள்ள சிங்கள விரிவுரையாளர் ஒருவர் ''பிரபாகரன் ஒரு ஆளுக்குத்தான் சிங்கள அரசாங்கம் பயப்படுகிறது. மற்றைய அரசியல்வா திகள் ஒருவரையும் கணக்கி லேயே எடுக்கவில்லை சிங்கள அரசுகள். செல்வநாயகம், பொன்னம்பலம் எவரையும் கணக்கிலெடுக் கவில்லை'' என்று சொன்னார். அத்துடன் தமிழர்களின் உரிமைகள் பற்றி சிங்கள அரசியல்வாதிகள் எவருமே நியாய பூர்வமாகச் சிந்திக்கவில்லை என்றார்.

''எங்கடை ஆக்கள் அந்தநேரம் பிழை விட்டிட்டினம், இலங்கை சுதந்திரமடைந்தபோதே நாட்டைப் பிரித்திருக்க வேண்டும். என்ன செய்வது? இனி ஒன்றும் செய்ய முடியாது'' என யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் அண்மையில் கூறினார். பேராசிரியர் கடும்புலி எதிர்ப்பாளர்.

பிரபாகரனுடன் தமிழர்களின் உரிமைகளும் சவப்பெட்டியில் வைத்து ஆணியடிக்கப்பட்டு விட்டதாகவே சிங்கள தேசம் இறுமாப்படைந்துள்ளது. தென்னிலங்கை அரசியலில் அரங்கேறும் சம்பவங்களைப் பார்த்தால் இவ்வாறுதான் எண்ணத் தோன்றுகின்றது. பிரபாகரன் பயங்கரவாதி என்று கருதப்பட்டு அவரை அழிப்பதற்கு முழு உலகமுமே ஒன்றுபட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தம்மாலான பங்களிப்பை வழங்கின.

### தமிழர்களின் நிலைமையை மறந்து விட்டனர்

பிரபாகரனை அழிப்பதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிய சர்வதேச சமூகம் இலங்கையில் தமிழர்கள் என்ற ஓர் இனம் உள்ளது. அவர்கள் தமது உரிமைகளுக்காகக் கடந்த அறுபது ஆண்டு காலமாகப் போராடி வருகின்றனர் என்ற உண்மையை மறந்து விட்டது. கடந்த அறுபது ஆண்டுகளில் மாறி மாறிப் பதவிக்கு வந்த கட்சிகளிரண்டும் போட்டி போட்டுக் கொண்டு தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதிலும், தமிழர்களை அழிப்பதிலுமே தமது கவனத்தைச் செலுத்தி வந்தன என்பது உலகறிந்த ஒன்று.



காலஞ்சென்ற கம்யூனியஸ்ட் கட்சித் தலைவர் சண்முகதாசன் ஒருமுறை தேர்தலின் போது கூறிய கூற்றை இங்கு நினைவு கூருவது பொருத்தமானது. ஐ.தே.கட்சியா, அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியா, யார் பதவிக்கு வந்தால் தமிழர்களுக்கு நன்மை என பத்திரிகையாளர் ஒருவர் சண்முகதாசனிடம் வினவினார். அதற்குச் சண்முகதாசன் ஒரு கோழியைப் பிடித்து வைத்துக் கொண்டு உன்னைக் குழம்பு வைத்துச் சாப்பிட்டால் நன்றாக இருக்குமா? பொரித்துச் சாப்பிட்டால் நன்றாக இருக்குமா? என்று கேட்பது போல் உள்ளது உங்களது கேள்வி என்றார்.



துட்ட கைமுனுவின் கனவை நனவாக்கும் விதத்திலேயே சிங்கள அரசுகள் செயற்பட்டு வருகின்றன. துட்டகைமுனு தூங்கும் போது உடலை முட[illegible] தூங்குவதை [illegible] மகனே கால்களை நீட்டித் தூங்கு என்றாராம். அதற்கு துட்டகைமுனு அம்மா ஒருபுறம் கடல், மறுபுறம் தமிழர்கள் நான் எவ்வாறு நிம்மதியாகத் தூங்குவது என்றானாம். கடலை இல்லாமல் செய்ய படைத்தவனாலும் முடியாது. தமிழனை இல்லாமல் செய்து விட்டால் சிங்களவர்கள் நிம்மதியாகத் தூங்கலாம் என்ற சிந்தனையுடனேயே இலங்கையின் பிரதான கட்சிகளிரண்டும் செயற்பட்டு வருகின்றன. கடந்தகால வரலாற்றை எடுத்துப் பார்க்கும் போது காலத்திற்குக்காலம் சட்டங்களை இயற்றி, அரசியல் யாப்பைத் திருத்தி தமிழர்களை ஒடுக்கும் கைங்கரியத்தையே பிரதான கட்சிகளிரண்டும் மேற்கொண்டு வந்துள்ளன. தமிழர்களை ஒடுக்குவதற்கு இடது சாரிகள் எனத் தம்மைக் கூறிக்கொண்டோரும் ஒத்தாசை வழங்கியுள்ளனர் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

தனிச்சிங்களச் சட்டத்தை அமுல்படுத்தி இனக்கலவரத்தை உருவாக்கிய எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, காலி முகத்திடலில் தமிழ்த் தலைவர்கள்

## அரசியல் கண்ணாடி

காடையர்களால் தாக்கப்பட்டுக் கொண்டிருந்த போது நாடாளுமன்றத்திற்கு காரில் வந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஓடிச்சென்று தமிழ்த் தலைவர்களின் மண்டை உடைந்து இரத்தம் பீறிடுகிறது என்றாராம். பண்டாரநாயக்கா புன்னகை புரிந்தவாறே நையாண்டியாகக் கூறினாராம்.

1956, 58, 77, 83 ஆகிய இனக் கலவரங்கள் காரணமாக ஆண்டுகளில் தமிழர்கள் கப்பலேறியுள்ளனர்.

1972ம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மையினங்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகளை இரத்துச் செய்தது அப்போது பதவியிலிருந்த அரசு. 1987ம் ஆண்டு இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போதும் மாகாண சபைகளிடமிருந்து அதிகாரங்களைப் பறிக்கும் முயற்சியிலேயே இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வந்துள்ளது.புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டதும் ஜனாதிபதி சமஷ்டியை விடக் கூடுதலான அதிகாரம் கொண்ட ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பார் என்ற எதிர்பார்ப்பு பலரிடமும் இருந்தது.

ஆனால் ஜனாதிபதி சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறி விட்டார்.

இப்போது பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் செல்லத் தயாராகவுள்ளதாக அரசு கூறுகின்றது. அதே வேளை அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு எனவும் இரு பிரதான கட்சிகளும் கூறி வருகின்றன.

அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு என்ற பதம் ஒரு பம்மாத்து. முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டால் அதேயளவு உரிமைகள் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே முஸ்லிம்களின் நிலைப்பாடு. தமிழர்களுக்கு எதுவித உரிமைகளும் வழங்காவிட்டால் முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழலாம் என்ற கருத்துநிலை அவர்களிடமும் நிலவுகிறது. 13வது திருத்தத்தை நடைமுறைப் படுத்தினால் தாம் அரசிலிருந்து வெளியேறுவோம் என அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் எச்சரித்துள்ளன. அத்துடன் தமிழ் மக்கள் உரிமைகள் கேட்கவில்லை, உணவும் மருந்துமே கேட்கிறார்கள் எனவும் இக் கட்சிகள் பிரசாரம் செய்து வருகின்றன. உண்மையில் தமிழர்களின் நிலையும் அதுதான். மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வைத் தாம் ஏற்றுக்கொள்வதாகக் கூறுகின்றது.

அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு என்பது இலங்கையைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மைச் சிங்களவர்கள் விரும்புவதே. இலங்கையில் வாழும் சிங்களவர்கள் விரும்புவது என்ன என்பது அனைவருக்கும் தெரியும், ஆக மொத்தத்தில் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம்? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் பிரச்சினைகளை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.ஆனந்தசங்கரி மட்டுமே




வன்னிமக்களின் பிரச்சினைகளை உள்நாட்டிலும் உலக நாடுகளுக்கும் உடனுக்குடன் எடுத்துக்கூறி அறியச் செய்தவர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.ஆனந்தசங்கரி அவர்கள் மட்டுமே. ஐந்து ஆண்டுகளாக ஆனந்தசங்கரி என்ன செய்தார் என்ற கேள்விக்கும் அக்கேள்வியை கேட்போர்க்கும் விடை மேலே கூறப்பட்டதேயாகும்.

விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தையும் சரிசமமாகவே கருதி அவர்களின் குற்றங்குறைகளையும், அவர்களால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பச் சுமைகளையும் சுட்டிக்காட்டவும், அவற்றைக் கண்டிக்கவும் தயங்கவுமில்லை தவறியதுமில்லை. குறிப்பாக இவ்வாண்டு தைமாதம் தொடங்கி இன்றுவரை அரசாங்கத்தினால் மறைக்கப்பட்டு வந்த, மறைக்கப்பட்டு வரும் விடயங்கள் பலவற்றை உலகுக்குத் துணிவுடன் எடுத்துக்காட்டியவரும், காட்டிவருபவரும் திரு.ஆனந்தசங்கரி மட்டுமே.

“அமைச்சர்” என்னும் பதவியை ஆயுதமாகக் கொண்டு “சூழ்ச்சியிலே சுவர் எழுப்பி, சுயநலத்தால் கோட்டை கட்டி சாட்சிகள் வேண்டாம் இங்கு சகலமும் நாமே” என்று பல அக்கிரமங்களையும், அநியாயங்களையும் செய்துகொண்டு தங்கள் குற்றங்குறைகளை மறைப்பதற்கும், தொடர்ந்து இவ்வமைச்சர் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் இத்தேர்தல் அவருக்கு மிக முக்கியமானதொன்றாக அமைகின்றது. இங்கே நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை போன்ற அநியாயங்களுக்கும் இத்தேர்தல் மூலமாக “அங்கீகாரம்” பெறுவதே இவர்களுக்கும், இவர்களைச் சார்ந்தோருக்கும் உள்ள உன்னத நோக்கமாகும்.

விடுதலைப்புலிகள் கிளிநொச்சி நகரை இழந்தபோது இந்த 22 பேர் கொண்ட “தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர்” விடுதலைப் புலிகளுடன் பேசி அறிவுரை வழங்கியிருந்தால் மூன்று லட்சத்து 30 ஆயிரம் மக்களின் உடைமைகளும் இருபதாயிரம் மக்களின் உயிர்களும் காப்பாற்றப்பட்டு பல்லாயிரக் கணக்கானோர் அங்கவீனர்களாகவும், அநாதைகளாகவும், அகதிகளாகவும், விதவைகளாகவும் ஆகியிருப்பதை தடுத்திருக்கலாம். 22 பேரில் ஒருவரேனும் கொழும்பில் தங்கியிருந்து இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகளை உடனுக்குடன் நாடாளுமன்ற மூலம் உலகறியச் செய்திருக்கலாம். அதைவிடுத்து அத்தனை பேரும் திக்கொன்றாக திசைக்கொன்றாக புதுடெல்லியிலும் சென்னையிலும், லண்டன், கனடா போன்ற நாடுகளிலும் தங்கியிருந்து என்ன செய்தார்கள் என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

மோசடி மூலம் நாடாளுமன்றம் சென்ற இந்த 22 உறுப்பினர்கள் அனைவருமே தங்களுக்குரிய கடமைகளைச் செய்யத்தவறிய பின் மக்களிடம் வாக்குக் கேட்டு வருவதற்கு எந்தவிதமான தார்மீக உரிமையும் இல்லை.

இதுபற்றி தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் கூட்டமைப்பினருக்கு விடுத்த பகிரங்க வேண்டுகோள் கடிதத்தில் “தமிழ் தேசிய கூட்டமைப்பு வன்னியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை உடன் விடுவிக்க வேண்டும் அன்றேல் நாடாளுமன்ற பதவியை துறக்க வேண்டும்” த.வி. கூட்டணி கோருகிறது.

11.01.2009 அன்று எழுதிய அக்கடிதத்தின் இறுதிப் பந்தியினை உங்கள் பார்வைக்கு தருகிறோம்.

“விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவார்களேயானால், அவர்கள் அவ்வாறு செய்து அரசுடன் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வைக் காணலாம். அத் தீர்வானது சகல இன மக்களும் சமமாக எதுவித பாகுபாடுமின்றி சகல உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய ஒரு தீர்வாக அமைய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின், “கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட ” கதைபோல், பழி பாவங்களுக்கு அஞ்சாத கொள்கையில்லாத சிலர் அதிகாரத்தைக் கைப்பற்ற வழி வகுத்துக் கொடுத்ததாக அமையும். இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழ் மக்கள் எண்ணெய் சட்டியிலிருந்து நெருப்புக்குள் விழ விடாது பாதுகாக்க வேண்டிய தார்மீகக் கடமை உண்டு. த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய தமது கடமையில் இருந்து தவறிவிட்டார்கள் என நான் விசுவாசமாக நம்புவதால் அவர்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு எதுவித பதவியிலும் அக்கறையில்லை என்பதையும், எனது முழு அக்கறையும் கடந்த கால்நூற்றாண்டு காலமாக துன்பத்தின் மத்தியில் வாழ்ந்து வரும் எம் மக்களுக்கு பணியாற்றுவது என்பதே!”

## ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதங்களும் அவற்றின் தேதிகளும்

01) 09.02.2009 - உள்ளூர் இடம் பெயர்ந்தோர் சார்பாக வேண்டுகோள்
02) 16.02.2009 - வன்னி வாழ் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல்
03) 05.03.2009 - பெருந்துயரில் வன்னி மக்கள்
04) 09.03.2009 - மிக்க அவதானத்துடன் செயற்பட வேண்டிய அவசியம்
05) 30.03.2009 - உணர்வைத் தூண்டும் விடயங்களில் அரசு பாராமுகமாக இருக்க முடியாது
06) 10.04.2009 - பதற்றத்துடன் வாழும் இடம்பெயர்ந்த மக்களைக் காப்பாற்றுங்கள்
07) 01.05.2009 - வன்னியில் எஞ்சியுள்ள இடம்பெயர்ந்தோரைக் காப்பாற்றுங்கள்
08) 02.05.2009 - “எம் உயிரைக் காப்பாற்றுங்கள்” என வன்னியில் இருந்து இடம் பெயர்ந்தோர் குரல்
09) 11.05.2009 - பாதுகாப்பு வலயத்திற்குள் நடப்பவை உலகை அதிர வைக்கும்
10) 11.05.2009 - யுத்த சூனியப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி (அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்)
11) 12.05.2009 - முள்ளிவாய்க்கால் அரச வைத்தியசாலையில் ஏற்பட்ட அனர்த்தம்
12) 14.05.2009 - என்ன விலை கொடுத்தேனும் முள்ளிவாய்க்கால் மக்களைக் காப்பாற்ற வேண்டும்
13) 15.05.2009- இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலில் அவதியுறும் மக்களின் சார்பில் விடப்படும் அபயக்குரல் (கண்டன அறிக்கை)
14) 17.05.2009 - முள்ளிவாய்க்காலுக்கு உணவும் மருந்தும் விரைந்து அனுப்புங்கள்
15) 19.05.2009 - முள்ளிவாய்க்காலில் உணவு, மருந்து நெருக்கடி
16) 24.05.2009 - கர்ப்பிணித்தாய்மார்களினதும், குழந்தைபெற்ற தாய்மார்களினதும் பரிதாபநிலை (மேஜர் ஜெனரல் சந்திரசிறி)
17) 24.05.2009 -வன்னிக்கு பொதி ஏற்றிச் சென்ற வாகனங்கள் சம்பந்தமாகவும் 'விடுதலைப்புலி' போராளிகள் எனச் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோரின் கோரிக்கை
18) 25.05.2009- மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டிருந்த வைத்தியர்களை விடுதலை செய்யவும்
19) 29.05.2009 - அரச உத்தியோகத்தர்களுக்கு கௌரவமளித்தல்
20) 29.05.2009 - பராமரிப்பின்றி தனிமையில் வாடும் முதியோர்கள்
21) 21.06.2009 - வடபகுதி மக்கள் வேண்டுவது உண்மையான வசந்தமே அன்றி முகவராட்சியல்ல
22) 05.07.2009 - இடம்பெயர்ந்த மக்களின் பரிதாபநிலை

## விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.பிரபாகரனுக்கு எழுதிய கடிதங்கள் சிலவற்றின் தலைப்புக்களும் அவற்றின் தேதிகளும்

01) 03.05.2006- இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு
02) 10.09.2006- நாம் எங்கே செல்கிறோம்?
03) 22.06.2007- தீர்வுக்கு ஒரே வழி
04) 25.10.2007- கொலைகளை நிறுத்திப் பேச்சு வார்த்தைக்குச் செல்லவும்
05) 18.02.2008- ஒரு மனிதாபிமான வேண்டுகோள்
06) 26.07.2008- மீண்டும் ஓர் பொன்னான வாய்ப்பு
07) 12.03.2009- எம்மக்களைக் காப்பாற்ற இறுதிச் சந்தர்ப்பம்

மேலே தலைப்பிட்டுள்ள கடைசிக் கடிதத்தின் இறுதிப்பந்தியினை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கின்றோம்.

இக்கட்டத்திலேனும் துப்பாக்கிகளை கைவிட்டு, யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவும். சர்வதேச ஆதரவுடன் கண்ணிவெடிகளை அகற்ற அதிககாலம் எடுக்காது, விரைவில் வன்னிப்பகுதிமக்கள் தமது இல்லங்களுக்குத் திரும்பி, எஞ்சியுள்ள தமது பொருள்களையும் மீட்டெடுக்க முடியும்.இப்போது கூட நீர் எனது புத்திமதியை கேட்கத்தவறின், ஏற்கனவே மக்கள் இழந்தது போக அவர்களின் எஞ்சியுள்ள பல்லாயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களை அவர்கள் இழப்பதற்கு நீரே பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப நீண்ட காலமெடுக்குமாயின் அவர்களின் சொத்துக்கள் எதுவும் அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். இதுவே நான், உமக்கு நம்பிக்கை அத்தனையையும் இழந்தநிலையில் விடுக்கும், இறுதி வேண்டுகோளாகும். மிகத் தாழ்மையுடன் விடுக்கும் வேண்டுகோள். நாம் அனைவரும் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர், மலாயர்கள் உடன் ஏனைய இன மக்களும் சமாதானமாகவும் அமைதியாகவும் ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதே. இந்த நாட்டின் அமைதியை குலைத்த நீரே நிரந்தர சமாதானத்தையும் தரக்கூடிய தனி நபராகும்.

**உங்களுக்குக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்களிப்பீர் உதய சூரியனுக்கே! அகிம்சையின் அடையாளம் உதயசூரியன்.**

**இதுபோன்ற ஏதாவது கோரிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ அல்லது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ எவரிடமாவது முன்வைத்தனரா? மக்களே தீர்மானியுங்கள்.**

**வீ.ஆனந்தசங்கரி,**
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி.

# தமிழர் விடுதலைக் கூட்டணி

# வீ.ஆனந்தசங்கரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் பின்வாங்கல் ஏற்படுத்திய பரபரப்பு...

தமிழகத்தின் நடைபெறவுள்ள 5 சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலைப் புறக்கணிக்க பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தோழமைக் கட்சிகளான பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவையும் முடிவுசெய்தது. தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இடைத்தேர்தலில் தி.மு.க வெல்வது நிச்சயம் என்பது எவருக்கும் தெரிந்த விஷயமே. ஆனாலும் இப்படி ஒரு முடிவை அ.தி.மு.க எடுக்குமென எவரும் எதிர்பார்க்கவில்லை. அதுவும்' போராட்டகுணம் மிக்கவர் என அறியப்பட்ட ஜெயலலிதாவா இவ்வாறு தோல்வியை ஒத்துக் கொண்டது போல்



முடிவு செய்தது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

தோல்வியை ஒப்புக் கொண்டதை விட இங்கு பிரதான விடயமாக இருப்பது தி.மு.க பணபலத்தை பிரயோகம் செய்து இந்த தேர்தலில் வெற்றி பெற்று விடும் என்பதே

இந்திய தேர்தல் சட்டப்படி தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்ட பின்பு எந்த அரசும் சலுகைகளை அறிவிக்க முடியாது. எந்தக் கட்சியும் பணம் - உள்ளிட்ட பரிசுப் பொருட்களை வழங்கவும் இயலாது. இருப்பதும் இந்தச் சட்டத்தை அமுல் செய்யும் தேர்தல் அதிகாரிகளின் கண்ணில் மண்ணைத்துவி விட்டு தி.மு.க தனது தேவைகளை நிறைவேற்றியே வந்துள்ளது. கடந்த காலத்தில் நடந்த திருமங்கலம் சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தலிலும் தி.மு.க. இவ்வாறு பணத்தை வாரி இறைத்து வெற்றியை தனதாக்கிக் கொண்டது நினைவிருக்கலாம். தமிழகத்தில் இடைத்தேர்தல் வந்தால் ஆளும் கட்சியே வெல்லும் என்பது எவருக்கும் தெரியும். காரணம் ஆளும் கட்சியின் அமைச்சின் பட்டாளம் ஒன்று திரண்டுவந்தது பணத்தை மழையாகக் கொட்டி வெற்றி ஈட்டிக் கொள்வதே.

அ.தி.மு.க ஆட்சியில் இருந்த காலத்திலும் இவ்வாறே இடைத்தேர்தல் வந்ததால் குறுக்கு வழியால் வெற்றியைத் தனதாக்கிக் கொள்வதே வழக்கம். இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் தி.மு.கவை குற்றஞ்சாட்டினாலும் தாம் ஆட்சியில் இருந்தபோது நடந்த சைதாப்பேட்டை, ராணிப்பேட்டை, சாத்தான்குளம் சட்டசபை இடைத்தேர்தல்களில் இதே பாணியில் வெற்றிகளை குவித்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். வழக்கமாக மற்ற இந்திய மாநிலங்களில் மட்டும் விசித்தரமான இந்த வழக்கம் இருந்து வருகிறது. இது ஜனநாயகத்தைக் கோலிக் கூத்தாக்கும் நிகழ்வு.

இந்தளவு தூரம் ஜனநாயகத்தை முற்றாக கேலிக்கூத்தாக்கும் கைங்கரியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க தேர்தல் ஆணையத்தால் இயலாது போனமை மிகவும் துரதிஷ்டவசமான விடயமாகும். தமிழக தேர்தல் ஆணையாளர் நாரேஷ் குப்தா தி.மு.கவுக்கு சார்பானவர் அல்ல என்பதுடன் கடுமையான விதிமுறைகளை பின்பற்றுபவர் ஆவார். அதையும் மிஞ்சி ஆளும் கட்சி சாதித்துவிழுவது கவலைக்குரியதே.

சட்டசபை இடைத்தேர்தல் என்பது ஒரு சில தொகுதிகளுக்கு மட்டுமே நடப்பதால் ஆளும் கட்சி அரச யந்திரத்தின் சகல பிரிவுகளையும் சகல வசதிகளையும் பிரயோகித்து அந்த தொகுதி மக்களை குஷிப்படுத்துவது இலகுவாகும். இடைத்தேர்தலில் ஆளும் கட்சி வெல்வதன் ரகசியம் இதுவே என இதுவரை கருதப்பட்டது. லோக்சபாத் தேர்தலில் 40 தொகுதிகளில் நடைபெறுவதால் மாநில அளவில் ஒரே சமயத்தில் குறுகிய காலத்தில் பிரசாரம் செய்வது கடினமாகும். எனவே மக்களின் உண்மையான அபிப்ராயத்தையும் மீறி இடைத்தேர்தலில் ஆளும் கட்சி வென்றாலும் லோக்சபாத் தேர்தலில் அவ்வாறு செய்யமுடியாது எனக் கருதப்பட்டது.

ஆனால் இந்த ஊகத்தைக் கூட தவிடு பொடியாக்கி விட்டு தி.மு.க கடந்த லோக்சபாத் தேர்தலை வென்றது. லோக்சபாத் தேர்தலையே இவ்வாறு வெல்லமுடியுமாயின் இடைத்தேர்தல் எம்மாத்திரம் தி.மு.கவுக்கு எந்த எண்ணம் பலதரப்பிலிருப்பதும் பிரதிபலிக்கப்படுகிறது. அ.தி.மு.க தலைமையின் முடிவும் இதை ஒட்டியே உள்ளது. இதுதவிர தொடர் தோல்விகளால் ஜெயலலிதா மிகுந்த விரக்தியில் வந்துள்ளதும் இதற்குக் காரணமாகும்.

1999, 2004, 2009 என கடந்த மூன்று லோக்சபாத் தேர்தல்களிலும் தொடர்ச்சியாக ஜெயலலிதா தோல்வியையே கண்டுள்ளார். இடையில் 2001இல் ஒருமுறை சட்டசபைத் தேர்தலில் வென்று ஆட்சி அமைத்தார். ஆகவே கடந்த எட்டு ஆண்டுகளாக ஜெயலலிதா எந்தப் பெரிய தேர்தலிலும் வெல்லவில்லை. இவ்வாறு விரக்திகளின் ஒட்டுமொத்த உருவமாகவே ஜெயலலிதா இன்று உள்ளார்.

தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணிபெரு வெற்றி பெறும் என்றும் பிரதமர் பதவிக்கு ஜெயலலிதா தயாராகி வருகிறார் என்றும் லோக்சபா தேர்தலுக்கு முன் பரபரப்பாக அ.தி.மு.க வட்டாரத்தில் பேசப்பட்டது எல்லாமே புஸ்வாணமாகிப் போனதுதான் மிச்சம். ஜெயலலிதா சத்தமின்றி கொடநாடு எஸ்டேப்பில் தங்கி உள்ளார்.

குன்னூருக்கு கட்சி நிர்வாகிகளை அழைத்துக் கூட்டம் வைத்து தனது முடிவை தெரிவித்து விட்டு மீண்டும்

**எஸ்.சுரேந்திரஜித்**

கொடநாடு எஸ்டேப்புக்குப் போய்விட்டார். தனது முடிவுப்படியே கூட்டணிக் கட்சிகளும் முடிவெடுக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ம.தி.மு.க. போட்டியிடுவதில் ஆர்வம் காட்டியபோதும் அ.தி.மு.க தலைவியின் உத்தரவுக்கு பணிந்து பின்வங்கி விட்டதாகத் தெரிகிறது. ஐந்து தொகுதிகளில் கம்பம், தொண்டாமுத்துள் இரண்டும் ம.தி.மு.க போட்டியிட்டு வென்ற தொகுதிகள். ஆனால் இந்த இரு எம்.எல்.ஏக்களும் கட்சியிலிருந்து விலகி தி.மு.கவில் சங்கமமாகி விட்டதால் எம்.ஏல்.ஏ ஆசனம் காலியாகி விட்டது. இவர்களின் துரோகத்துக்கு பதிலடியாக மீண்டும் ம.தி.மு.க தானே போட்டியிட்டு பாடம் கற்பிக்க நினைத்திருந்தது. அம்மாவின் முடிவு இதை மாற்றிவிட்டது.

பாட்டாளிமக்கள் கட்சியைப் பொறுத்த வரை அக்கட்சிக்கு இந்த 5 தொகுதிகளில் தர்மபுரி மாவட்டம் பர்கூரில் மட்டும் ஓரளவு செல்வாக்கு உண்டு. ஆனால் பர்கூர் பாரம்பரியமான அ.தி.மு.க வென்ற தொகுதி. 1996இல் மட்டும் அதிர்ச்சி தரும் விதமாக ஜெயலலிதா இத்தொகுதியில் தோற்றார். பா.ம.கவுக்கும் அம்மாவுக்கும் இப்போது உறவில் சிறு நெருடல் இருந்தாலும அம்மாவின் முடிவின் படி போட்டியிடப் போவதில்லை என நல்லபிள்ளையாக அறிவித்துள்ளது. தொகுதி எம்.எல்.ஏயான மூத்த தலைவர் தம்பிதுரை லோக்சபாத் தேர்தலில் வென்றதால் அவரது தொகுதி வெற்றிடமாகியுள்ளது. இப்போது இடைத்தேர்தலில் தி.மு.க வெல்லக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. காரணம் அ.தி.மு.க போட்டியிடாததே.

இளையான் குடி தொகுதி தி.மு.க சார்பில் வென்ற ராஜ கண்ணப்பன் அ.தி.மு.கவில் சேர்ந்ததால் வெற்றிடமானது. இவரே அ.தி.மு.க சார்பில் மீண்டும் போட்டியிடுவார் எனக் கருதப்பட்டது. இவர் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தும் ஜெயலலிதா முடிவில் அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இதேவேளை இளையான் குடி தொகுதியில் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் போட்டியிட முயற்சித்ததாகவும் கூறப்படுகிறது. ஏற்கனவே கடந்த தேர்தலில் தொண்டாமுத்தூர் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் முத்த தலைவர் எஸ்.ஆர். பாயகப்பி, மணியம் போட்டியிட்டு ம.தி.மு.க சார்பில் போட்டியிட ராஜகண்ணப்பனுக்கு சந்தர்ப்பம் கிடையதுவிட்டால் அவர் தே.மு.கவில் அல்லது பி.ஜே.பியில் சேர்ந்து போட்டியிடவும் வாய்பகள் உள்ளன.

ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் காங்கிரஸ் எம்.எல்.ஏ இறந்து போனதால் தான் இடைத்தேர்தல் வந்துள்ளது. மீண்டும் கங்கிரஸுக்குத்தான் இத்தொகுதி கிடைக்கவுள்ளது. அ.தி.மு.க தேர்தலை புறக்கணித்ததால் தி.மு.கவுக்கு ஒருவகையில் பூரண மகிழ்ச்சி. பணச் செலவின்றி தேர்தலில் வெல்லமுடியும். அதுமட்டுமன்றி 94 ஆக உள்ள தி.மு.க., எம்.எல்.ஏ எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இதேவேளை தேர்தல் ஒத்திப் போடப்படலாம் என்ற நப்பசையும் எதிர்தரப்பிடம் உள்ளது. தேர்தல் சட்டப்படி தேர்தல் நியாயமாக நடக்கமுடியாது என தேர்தல் ஆணையம் கருதினால் இவ்வாறு தேர்தலை தள்ளிப்போடலாம்.

இதேவேளை தேர்தலை பகிஷ்கரிக்கும் முடிவை தே.மு.தி.கவும் ஆதரிக்குமென அ.தி.மு.க தலைவி நப்பரறு கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட் கட்சிகளுடனான அவரது உறவில்



ஏற்கனவே விரிசல் ஏற்பட்டுள்ளது. எனவே அவர்கள் ஜெ'வின் முடிவை மீறி போட்டியிடுகின்றனர். தே.மு.தி.க, பி.ஜே.பி இரண்டும் அ.தி.மு.க வாக்கு வங்கியை கைப்பற்றுவதற்குள் முன்னுக்கு வரலாமென நம்பி போட்டியிடுகின்றன. ஆக ஜெ'வின் பகிஷ்கரிப்பை 3 முக்கிய எதிர்க்கட்சிகள் புறக்கணித்தே உள்ளன. இது தி.மு.கவுக்கு தார்மீக வெற்றியாகும். ஆயினும் அண்மைக் கால தேர்தல்களில் வாக்களிப்பின் கடைசி ஒரு மணி நேரத்தில் ஒரேயடியாக 30 சதவீத வாக்குகள் பதிவானது எப்படி? அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் வாக்களிப்பு இயந்திரம் சரியான முடிவை தராது என புறக்கணித்தள்ள விஷய்ம்; வாக்களித்த பின் தான் விரும்பிய வேட்பாளருக்கே வாக்களித்தோமென உறுதிப்படுத்த முடியாமை (இது வாக்கு சீட்டு விஷயத்தில் உறுதிப்படுத்தப் படலாம்.) என 'ஜெ' எழுப்பிய பலகேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய கடமை தி.மு.கவுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் உண்டே. புதிய யந்திரர்களை வாங்க தேர்தல் ஆணையம் ஏற்கனவே முடிவெடுத் துள்ளதும் குறிப்பிடத்தக்கது. ★

## எம்மிடம் இருப்பவற்றை அடுத்தவருடன் பகிர்ந்து வாழ்வோம்

பகிர்வு என்பது ஒருவர் தன்னிடம் மேலதிகமாக அல்லது தேவையற்றதாய் இருப்பவற்றை மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவது அல்ல மாறாகத் தனக்குத் தேவையானவற்றையும் அடுத்தவருடன் பகிர்ந்து உதவுவதேயாகும்.

எமக்கென ஏதாவது இருக்கும்வரை எம்மால் அதனைப் பகிரமுடியும். எமது பொருள்கள், உணவு, உடை, பணம் மற்றும் ஆற்றல், அறிவு, அனுபவம், கல்வி என எல்லாவற்றையுமே தேவையுள்ளவர்களுடன் பகிரலாம்.

எனவே ''என்னிடம் பகிர்வதற்கு ஒன்றுமில்லை'' என்று உண்மையாகக் கூறக் கூடியவர்கள் எவருமே இல்லை. பணிவும், தாராள மனமும் இருக்குமானால் பகிர்ந்து வாழ்வதற்குத் தடையேதுமில்லை. அதுமட்டுமல்லாம் நாம் தியாகம் செய்வது அல்லது பகிர்வது இறைவனால் பல மடங்காக மீண்டும் வழங்கப்படும் அல்லது சேர்த்துவைக்கப்படும்.




இறைவாக்கினர் எலிசாவுக்கு ஓர் அன்பர் கொடுத்த இருபது அப்பங்களையும் அவர் நூறு மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கின்றதையும் அவர்கள் உண்டபின் புதுமையாக மிகுதியும் இருப்பதை நாம் அறிந்துகொள்கின்றோம். *(2அர 4:42-44)*

அதேபோன்று ஒரு சிறுவன் தனக்கென வைத்திருந்த ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் ஏனையோரின் பசிபோக்க இயேசுவிடம் கையளித்ததன் வழியாக அங்கிருந்த ஐயாயிரம் ஆண்கள் உட்பட திரளான மக்களுக்கு வயிறாற உண்ணப் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் மிகுதியாகப் பன்னிரண்டு கூடைகள் நிரம்ப அப்பமும், மீனும் இருந்ததையும் நாம் அறிந்துகொள்கின்றோம். *(யோவா 6:1-15)*

எனவே நாம் வரும்போது எதையும் கொண்டுவரவுமில்லை. செல்லும்போது எதையும் கொண்டு செல்லப்போவதுமில்லை. எம்மிடம் உள்ளதெல்லாம் இறைவனாலே தரப்பட்டவை அல்லது பெற்றுக்கொள்ள வழிவகுக்கப்பட்டவை. அத்துடன் அவராலே நாம் பராமரிக்கப்படுகின்றோம் என்பதை உணர்ந்தவர்களாய் பரிவுடனும் மகிழ்ச்சியுடனும் எமக்குள்ளவற்றைத் தேவைகளில் உள்ளோருடன் பகிர்ந்து வாழ்வோமாக.

க.அருள்நேசன்,
புதுமை மாதா ஆலயம், குருநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின்

## ஓய்வூதியத் திட்டம் 2008 - 2009

## யாழ்.மாவட்டம்

**சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

அவர்களின் துரித நடவடிக்கைக்கு அமைவாக அமைச்சின் அங்கமாகத் தொழிற்படும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மூலம் ஒய்வூதியம் வழங்க ஏற்பாடு.

(1996 ஆம் ஆண்டின் சமூக பாதுகாப்புச் சபையின் 17 ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைவானது)

யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாகச் சுயதொழிலில் ஈடுபடும் 25000 பயனாளிகள் இவ் ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் இவ் ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளவர்களுக்கு

**எதிர்வரும் 06.08.2009 முற்பகல் 10 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் கௌரவ அமைச்சர் அவர்களால் ஓய்வூதிய உறுதிப்படுத்தற் பத்திரங்கள் வழங்கும் வைபவம் இடம்பெறும்**

அரச உத்தரவாதமளிக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் தம்மைப் புதிதாக இணைத்துக்கொள்ள விரும்பும் பயனாளிகள்

அன்றைய தினம் இணைய விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு:

**நா. சந்திரமோகன்,**
(செயற்பாட்டுப் பணிப்பாளர்)
இலங்கை சமூக பாதுகாப்புச் சபை,
இல, 150 ஏ, நாவல வீதி,
நுகேகொட.
தொலைபேசி- 011-2823614,
011-2823634, 011-2852958.

**பா. பிரதீபன்,**
(மாவட்ட ஒருங்கிணைப்பாளர்)
இலங்கை சமூக பாதுகாப்புச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 021-222 6163

(87500)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 109

# பருந்துகள் பறந்து கொண்டிருக்கின்றன

மதியம் கடந்துவிட்டது. அப்படியிருந்தும் வெயில் தணியவில்லை. சவரிமுத்தர் ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்தார். அவருடைய கையில் ஒன்று வழுக்கை விழுந்த தலையில் இருந்தது. முன்னோக்கிப் பெருத்திருந்த தொந்தி பெருஞ்சுமையாகக் கனக்க மூச்சு இரைக்க இரைக்க பிரதான ஒழுங்கையில் திரும்பினார். எதிரே 'ஜீப்' வண்டியொன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. ஜீப்பைக் கண்டதும் மரநிழலில் ஒதுங்கும் பாவனையில் கானோரத்தில் நின்ற பூவரச மரத்தடியில் நின்றுகொண்டார்.

ஜீப் வண்டி அவரைக் கடந்து எதிர்த் திசையை நோக்கி வேகமாக விரைந்து கொண்டிருந்தது. கடந்து செல்லும் வேகத்திலும் கூட சவிரிமுத்தர் அவனைப் பார்த்துவிட்டார். இரு பொலிஸ்காரர்களுக்கிடையில் பெருமாள் இருந்து கொண்டிருந்தான். அவனுடைய பெரிய கண்கள் சவிரிமுத்தரைக் கண்டு கொண்டதும் எதையோ அவசரத்துடன் கேட்க எத்தனிக்கும் வேளையில் வண்டி வெகுதூரம் சென்றுவிட்டது.

அவனுடைய கண்கள். அவை பார்த்த பார்வை; சவிரிமுத்தரின் மனதில் ஏதோ ஒரு உறுத்தல். உடலில் ஒரு கணசிலிர்ப்பு. இனம் புரியாத இரைச்சல்கள். சோர்வுடன் நடந்தார்.

ஒழுங்கை நிறையச் சனங்கள். படலை வாசல்களிலும் வேலிகளுக்கு மேலாலும் இன்னும் பலர். 'ஜீப்' வண்டி சென்ற திசையை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். தங்களுக்குள் எதையோ பேசி விமர்சித்துக்கொண்டு அனுதாபப்பட்டுக் கொண்டிருந்தனர். எதையுமே கண்டு கொள்ளாதவராகச் சவிரிமுத்தர் நடந்து கொண்டேயிருந்தார்.

வெய்யிலில் நடந்துவந்த களைப்பில் உடம்பு வேர்வையால் நனைந்திருந்தது. அணிந்திருந்த மேற்சட்டையைக் களைந்து போட்டுவிட்டு கருகருவென சடைத்து, ரோமங்கள் வளர்ந்திருந்த வெறும் உடம்பை ஆசுவாசத்துடன் அங்கிருந்த ஈசிச்செயரில் சாய்த்துக்கொண்டார். கழுத்தில் இரட்டை வடம் சங்கிலி கனத்தது. விரல்களில் கற்கள் பதித்த மோதிரங்கள், கருங்காலித் தடிக்குப் பூண் போட்டது போல் மினுமினுத்துக் கொண்டிருந்தன.

"ஆனாசி... ஆனாசி... இவன் செல்லையா வந்தவனோ..."

சவிரிமுத்தர் போட்ட சத்தத்தில் குசினிக்குள் இருந்தவள் வெளியே வந்தாள்.

"ஏன் இப்பிடிச் சத்தம் போடிறீங்க. இப்பதான் அவன் கொண்டுவந்து வைச்சிட்டுப் போறான். சாருக்குள்ள தான் இருக்கு..."

"அதை எடுத்துக் கொண்டு வா..."

ஆனாசி விசுக்கென்று சாருக்குள் சென்றாள். வரும்போது அவள் கையில் இருந்த போத்தல்களில் 'கள்' நிரம்பியிருந்தது. சவிரிமுத்தரின் காலடியில் வைத்துவிட்டு அவள் மறுபடியும் குசினிக்குள் போய் விட்டாள்.

சவிரிமுத்தர் கோப்பையில் சிறிது கள்ளை வார்த்துப் பக்கத்தில் வைத்து விட்டுப் புகையிலையைக் கிழித்து சுருட்டத் தொடங்கினார். அவருடைய சிந்தனை எதிலோ லயித்திருந்தது.

"என்ன ஒரு விடயம் கேள்விப்பட்டீங்களோ. நம்மளோட தொழிலுக்கு நிண்ட பெருமாளை யல்லோ பொலிஸ்காரங்கள் பிடிச்சுக் கொண்டு போறாங்க." குசினிக்குள் இருந்து ஆனாசியின் சத்தம் கேட்டது.

"நானும் வழியில பார்த்துக் கொண்டுதான் வாறன். என்ன நடந்ததாம்..." சவிரிமுத்தர் உணர்ச்சியின்றிப் பேசினார்.

"அவன் கள்ளத்தோணியெண்டு ஆரோ பொலிஸுக்கு பெட்டிசம் போட்டிட்டாங்களாம். அதுதான் அவனை வந்து இழுத்துக்கொண்டு போறாங்கள். ஏனெணை...அவனை இனிமேல் விட மாட்டாங்களா..."

ஆனாசி வெளியே வந்து சவரி முத்தருக்குப் பக்கத்தில் நின்று கொண்டாள். சவிரிமுத்தர் மனைவியை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தார். மௌனமாகக் கோப்பையிலிருந்த கள்ளை எடுத்து ஒரு தடவை உறிஞ்சினார். அந்த மூச்சிலே கோப்பை முழுவதும் காலியாகிவிட்டது.

ஆனாசிக்கு அதிசயமாக இருந்தது. இவ்வளவு பெரிய செய்தியைச் சொல்லியும் புருஷன் அக்கறைப் படுவதாகத் தெரியவில்லை.

"ஏனெணை உங்களுக்குப் பொலிஸில் இருக்கிற பெரியவங்களைத் தெரியுந்தானே. ஒருக்காப் போய் என்னெண்டு தான் பார்த்துக் கொண்டு வாங்கோவன்...."

சவிரிமுத்தர் மறுபடியும் கள்ளை வார்த்து ஒரு முறடை உறிஞ்சிவிட்டுக் கள்ளில் தோய்ந்துவிட்ட பெரிய மீசையைத் தடவி விட்டுக் கொண்டார்.

"பேச்சி... இதுகள் ஒண்டும் உனக்கு விளங்காது. என்ன மாதிரித்தான் தெரிஞ்சவங்களெண்டாலும், லேசில இந்த மாதிரி விடயங்களை விடமாட்டாங்கள்.

ஆனாசி அதற்கு மேல் எதுவும் பேசாமல் போய் விட்டாள். சவிரிமுத்தர் சுற்றி வைத்திருந்த சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தார். ஆனாசி கேட்டதற்காக ஏதோ சொல்லி வைத்தார். ஆனால் அவருடைய மனதில் பெருமாளின் விடயம் உறுத்திக் கொண்டிருந்தது. கண்களை மூடிக்கொண்டார்.

சவிரிமுத்தருக்கு நன்றாக நினைவிருந்தது. பத்து வருடங்களுக்கு முன் ஒரு வெள்ளிக்கிழமையாய் இருக்க வேண்டும்.... தோணிக்காசுக்குக் கொழும்புத்துறைக்குப் போவதற்காக யாழ்ப்பாண பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தார். அப்பொழுதுதான் பெருமாளைச் சந்தித்தார்.

அவனுக்கு அப்போது பத்து வயது இருக்கும். கறுத்த மேனி; ஊதி மினு மினுப்புடன் இருந்த வயிறு; சிக்குப் பிடித்த தலை மயிர்; காவி படிந்து முன்னோக்கி மிதந்து கொண்டிருந்த பற்கள்; பெரிய கண்கள்; பீத்தல் விழுந்த துண்டை இடுப்பில் சுற்றிக் கொண்டு பஸ்கியூவில் நின்றவர்களிடம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் சவிரிமுத்துவுக்கு ஆனாசியின் நினைவு வந்தது. வெகு நாள்களாகவே வீட்டுக்கு வேலைக்கு

(14 ஆம் பக்கம் பார்க்க....)



இலங்கைத் தமிழ்ப் புனைகதைத்துறையில் 1970 – 80 க்கும் இடைப்பட்ட காலத்தில் பல சிறுகதைகளை எழுதியுள்ள டானியல் அன்ரனி யாழ்ப்பாணம் நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

பல ஆண்டுகளாக சிறுகதை, கவிதை, விமர்சனம் ஆகிய ஆக்க இலக்கியத் துறைகளில் தனது ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தியவர்.

'சமர்' என்ற காலாண்டுச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தும் கலை இலக்கியப் பணி ஆற்றியவர்.

இவரது சிறுகதைகள் வீரகேசரி, சிந்தாமணி போன்ற பிரபல பத்திரிகைகளிலும், மல்லிகை, கணையாழி, தாயகம், மாற்று மற்றும் சமர் போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியிருந்தன.

'வலை', இவரது முதல் சிறுகதைத் தொகுதியாகும்.

வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகத் தொழில் பார்த்தவர். அமரராகிவிட்டார்.

இவரது "பருந்துகள் பறந்து கொண்டிருக்கின்றன" சிறுகதை இங்கு பிரசுரமாகின்றது.

---

## சூடாதாட்டின்

சோரம் போன
விபசாரி போல் நான்
எனக்கு ஆடை தந்து
கை தர ஒருவன்
வருவானென்று
வருத்தும் வெயிலில்
தவமாய்த் தவமிருந்தேன்.
ஒன்றல்ல.......
பலர் வந்தார்கள்.....
தீ மூட்டிக் கரும்பானை
அதிலேற்றிச் சூடாக்கும் போது
கல்யாண வேள்வியென எண்ணிக்
காத்துக் கிடந்தேன்.
தன் கை கால்கள் எல்லாம்
சோடித்தான் ஒருவன்;
எதற்காக என்றெனக்குச்
சரியாகத் தெரியவில்லை
மாப்பிள்ளை அலங்காரமென
எண்ணி மகிழ்ந்தேன்.
சீக்கிரம் சீக்கிரம் என்றென்
உள்மனது கிடந்தழுக்க
பலர் பார்த்திருக்க(க்)
கையில் ஏதோ கரிய பலைமாய்க்
கொண்டு வந்தான்.
ஓ! கண்ணன்
பாஞ்சாலிக்குப் போர்த்தியது போல்
என்மேனி முழுதாக
மறையத் தருவான் ஆடையென
அங்கலாய்த்தது எனது மனம்
என்ன அலங்கோலம்....
திட்டுத் திட்டாய்
ஏற்படுத்திய தழும்பும் மறையாமல்
ஆடையைக் காட்டி
நான் கை நீட்டிக் கிடக்க
ஓடினான்; ஓடினான்
வேகமாய் ஓடினான்
ஐயோ! அழ வேண்டும்,
வாய் விட்டு அழ வேண்டும்
என எண்ணிக் குரல் எழுப்பு முன்
என் குரலை மட்டுமல்ல
என்னையும் பிணமாக்கி
மண்ணள்ளிப் போட்டான் பாதகன்
என்ன இது?
இனியும் நான் பூரிப்பாய்ப்
புதுப்பொலிவாய்
உயிர் வாழ எனக்கு
வாய்ப்பேதும் உண்டோ?
விடைதான் இயலாத விரைவிது;

சின்மயி
கோப்பாய்.

---

# சொல் நயமும் ஓசை நயமும் ஒன்றிணைந்த கவிதைகள் காலத்தால் அழியாது சிரஞ்சீவியாய் வாழ்பவை

## இலக்கியக் காட்சி

சிறந்த கவிதைகள் கற்போரின் கருத்திற்கு நல்விருந்தாகும். கவிநயத்தைப் பெற்று சுவைக்க வேண்டுமானால் கவிதைகளில் ஈடுபாடு கொண்டு கற்க வேண்டும். கவிதையைப் புனைந்த கவிஞனாக மாறி நின்று அவன் கண்கொண்டு கவிதைகளைக் காண்போமானால் அங்கே சொல் நயத்தைக் கணலாம்; ஓசை நயத்தை அனுபவிக்கலாம்; கற்பனை வளத்தையும், பொருள் நயத்தையும் கண்டுகளிக்கலாம்; விழுமிய உணர்ச்சி, இயற்கை நிகழ்ச்சி என்பவற்றில் ஈடுபாடு கொண்டு தெவிட்டாத கவியின்பத்தைப் பெற்று மகிழலாம். இவ்வகைக் கவிநயத்தினை கவிதைகளிலே காண்பாம். கவிதையில் வரும் சொற்கள் தமக்குரிய நேரடியான பொருளை மட்டுமல்லாமல் வேறு சில பொருள்களையும் கொண்டுள்ளன. கவிஞன் தன் கவிதையில் இரண்டு பொருள்களைக் கூறுகின்றான். ஒன்றைச் சொற்களின் ஓசையாலும், மற்றொன்றைச் சொற்களின் நேரடியான பொருளாலும் அறிவிக்கின்றான். இதனைக் கம்பன் கவிதையொன்றிலே காண்பாம்.

கும்பகர்ணன் உறங்கிக் கொண்டிருக்கிறான். இராவணன் ஏவலால் அங்கு வந்த நூற்றுக்கணக்கான வீரர்கள், உறங்குகின்ற கும்பகர்ணனைத் துயில் எழுப்புகின்றனர். இரும்பு உலக்கைகளால் இடித்து இடித்து அவன் தூக்கத்தைக் கலைக்கின்றனர். அவ்வாறு அவர்கள் இடிக்கும் ஓசையை- மாறி மாறி இடிக்கும் ஓசையைக்- கவிஞன் நமக்குப் பாடலில் ஓசை மூலம் காட்டுகின்றான்:

"உறங்குகின்ற [illegible]
வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்றுகாண் எழுந்திராய்
எழுந்திராய்
கறங்கு போல விற்பிடித்த காலதூதர் கையிலே
உறங்குவாய் உறங்குவாய் இனிக் கிடந்து
உறங்குவாய்"

பாடலை மனதுள் படித்துப் பார்த்தால் சொற்களின் பொருள் தெரிகின்றது. செய்யுளை உரக்கப் படித்தால் ஒரு புதிய தன்மை வெளிப்படுவதை உணர்கின்றோம். சொல் நயமும், ஓசைநயமும் கவிதையில் காணப்படுவதை நாம் காண்கின்றோம்.

கவிஞர்கள் உணர்ச்சி நிறைந்தவர்கள். எனவே உணர்ச்சிக்கு உடந்தையாகி உச்ச

## உணர்ச்சிக்கு உடந்தையாகி உச்சநிலை நின்று கவிதை புனைந்தோர் சங்ககாலப் புலவர்கள்

நிலைக்குச் சென்று தம்மை மறந்து அலறியோ, குழறியோ, கவிதைகளைப் புனைந்து விடுகின்றனர். அத்தகைய கவிதைகளில் ஈடுபாடுகொள்ளும் பொழுது நாமும் கவிஞனைப்போல் வாய்விட்டு குழறி விடுவோம் என்பது திண்ணம்.

தந்தையின் கட்டளையைத் தலைமேற்கொண்ட தனையன் நாட்டைவிட்டுக் காட்டிற்குச் செல்கின்றான். சீதையும் இலக்குவனும் தன் பின்னே வர, இராமன் முன்னே செல்கின்றான். இராமனின் அழகிய மேனியைக் கற்பனைக் கண்களால் கண்டு வியப்படைகின்றான் கவிஞன். இராமனின் அழியாத அழகில் ஈடுபாடு கொண்டு உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோட அழியா அழகிற்கு உவமைகளை ஒன்றின்பின் ஒன்றாக அடுக்கிக் கவிதையைப் புனைகின்றான்.

"மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
ஐயோ!இவன்வடிவென்பதோர்அழியாஅழகுடையான்"

இராமனின் அழகிற்கு மையையும், மரகதத்தையும், மறிகடலையும், மழை முகிலையும் உவமையாக எடுத்துரைக்கின்றான் கம்பன். ஆனால் அவன் கவிதையுள்ளம் அவ்வுவமைகளை ஏற்க மறுத்து விடுகின்றது. மையென்றால் அது அவன் வண்ணத்திற்கு ஒப்பாகவில்லை; மரகதம் என்றால் அது அவன் திறமைக்கு உவமையாகவில்லை; மறிகடல் அவன் வடிவுக்கு ஈடாகவில்லை; ஏன்? மழைமுகில் தானும் இராமனின் அழகை உள்ளவாறு புலப்படுத்தவில்லையே? கம்பன் கவிதையுள்ளம் குமுறியது. உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடத் தன்னையே மறந்து உச்சநிலைக்குச் சென்று ஐயோ! என்று அலறிக் கவிதையைக் கம்பன் புனைந்து விடுகின்றான்.

"மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ! இவன் வடிவு........."


என்பது கம்பன் சொல்லோவியம். இங்கே கவிஞனின் உச்சநிலையை (Climax)க் காண்கிறோமல்லவா?

நன்றி:- திரு.ஆ.கந்தையாவின் 'கவிநயம்' (கட்டுரையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மத்தியில் நோய் குறித்து நிலவும் தெளிவின்மையே இங்கு டெங்கு நோய் வேகமாகப் பரவிட முக்கிய காரணம்

அண்மைக் காலமாக எமது நாட்டில் டெங்கு நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்காக இந் நோயைக் கடத்தும் ஈடிஸ் *(Aedes Sp)* நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் தேசிய ரீதியிலும் பிரதேச ரீதியிலும் தீட்டப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்து




வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டுப்பாட்டு முறைகள் எதுவாக இருந்தாலும் அவை உரியமுறையில் செயற்படுத்தப்பட்டு வெற்றியளிக்க வேண்டுமாயின், பொதுமக்களினதும் ஊடகங்களினதும் பங்கு உரியமுறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பான சில அம்சங்களை இங்கு ஆராய்வது சிறப்பானதாகும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் சுகாதார அமைச்சின் கீழ் வரும் பல்வேறு கட்டமைப்புக்கள் காவிக்கட்டுப்பாட்டில் ஒன்றிணைக்கப்படுவதைப் பாய்ச்சல் வரைபு சுருக்கமாக விளங்குகின்றது. இங்கு சிறப்பான அம்சமாக மக்கள் வரையிலான தொடர்புகள் பேணப்படுகின்றன. பல்

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த தெளிவு சமூக மட்டத்தில் பரவலாக எட்டுவது அவசியம்

வேறு காவிக்கட்டுப்பாட்டு முறைகள் உயர்மட்டங்களால் தீர்மானிக்கப்பட்டு உரிய பிரிவுகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இருந்த போதிலும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றிய தெளிவும் அதன் பிரதி பலன்களும் உரியமுறையில் பொதுமக்களைச் சென்றடைகின்றனவா என்ற வினாவுக்கு விடைதெரியவில்லை. நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் காவிக்கட்டுப்பாட்டு முறை பற்றிய தெளிவு பொதுமக்களுக்கு ஏற்படாத வரை - இவ்விடயம் தொடர்பாகப் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்புப் பெறப்படும் வரை- அக்கட்டுப்பாட்டு முறை வெற்றியளிப்பது சவாலானதாகவே அமையும். இந்த இடைவெளியை நிரப்புவதற்கு ஊடகங்களை உரியமுறையில் பயன்படுத்துவது இன்றியமையாததாகும்.

இலங்கையில் பல்வேறு நோய்கள் (மலேரியா, டெங்கு, யானைக்கால், லீஸ்மானையாஸிஸ், யப்பான் மூளைக்காய்ச்சல் போன்றவை) பூச்சிகளினால் காவப்பட்டுப் பரப்பப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரத் திணைக்களம் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பிற்கூடாக (பொதுமைப்பாடான தொடர்பாடல் படத்தில் காட்டப்பட்டுள்ளது) நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் சில நோய்களின் (மலேரியா, டெங்கு) தாக்கம் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதற்குப் பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், பொதுமக்களது பூரண ஒத்துழைப்புக் கிடையாமற் போனதும் இவற்றில் ஒன்றாகும். இதன் காரணமாகப் பிரதேச மட்டங்களில் பல்வேறு பிரிவினரையும் உள்ளடக்கியதாக குடிசார் குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்கள் மூலமாகப் பொதுமக்களின் உதவியுடன் அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி காவிக்கட்டுப்பாட்டில் அவர்களின் பங்கு உறுதிப்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக டெங்கு நோய்க்காவிகளின் பெருக்கத்திற்குப் பொதுமக்களின் செயற்பாடுகள் துணைபோவதனால் அவர்களின் பங்கு உறுதிப்படுத்துவதற்காகச் சட்டரீதியாக அல்லது இறுக்கமான செயற்திட்டங்களை அரசு மேற்கொள்ளலாம். உதாரணமாக டெங்கு நுளம்புகளின் பெருக்கத்திற்குத் துணைபோவோர் சிங்கப்பூரில் சட்டரீதியாகத் தண்டிக்கப்பட்டமையால் டெங்கு நோயின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. இருந்து போதிலும் டெங்கு நோயின் தாக் கம் மீளவும் ஏற்பட்டுள்ளது. இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சம் என்னவெனில் தனியே சுற்றுச் சூழல் சுகாதாரத்தில் கவனம் செலுத் திப் பொது மக்களின் பங்கு உறுதிப்படுத்தப்படுவதால் மட்டும் நோய்த் தாக்கம் இல்லாது போய்விடும் என்று கூறிவிடமுடியாது. பொதுமக்கள் தாம் வாழும் இடங்களை மட்டுமே நுளம்புகள் பெருகாதவாறு பார்த்துக் கொள்ளமுடியும். ஆனால் நுளம்களின் சூழலியல், நடத்தையியல் என்பவற்றை ஒரு குறுகிய வட்டத்துக்குள் உள்வாங்க முடியாது. பொதுமக்களின் உச்சப் பங்களிப்பை உறுதிப்படுத்தும் அதே வேளை காவிக் கட்டுப்பாட்டு முறைகளும் சமாந்தரமாக நடைமுறைப்படுத்தப்படுதல் அவசியமாகும். இதனைக் கருத்திற்கொண்டு தான் பல்வேறு காவிக் கட்டுப்பாட்டு முறைகளை உள்வாங்கி "ஒன்றிணைந்த காவி முகாமைத்துவம்" என்னும் சொற்பதம் பயன்படுத்தப்படுகின்றது.

### கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துதல்

எவ்வகையான காவிக்கட்டுப்பாட்டு முறைகள் அமுல்படுத்தப்படுகின்றன, அவற்றின் தாக்கம், நன்மை, தீமைகள், பயன்படுத்தப்படும் கால எல்லை மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன பற்றிய தெளிவு பொதுமக்களுக்கு ஏற்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத் தெளிவைப் பொதுமக்கள் அடையாதவரை, விளங்கிக் கொள்ளாதவரை காவிக்கட்டுப்பாட்டு முயற்சிகளால் எதிர்பார்க்கப்படும் பயனேதும் கிட்டப் போவதில்லை. பொதுமக்களுக்கு ஓரளவு அறிவும் தெளிவும் ஏற்பட வேண்டுமேயானால் காவிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஊடகங்களை உகந்த முறையில் பயன்படுத்தவேண்டும்.


### காவிக் கட்டுப்பாட்டில் ஊடகங்களின் பங்கு

அண்மைக் காலமாக டெங்கு நோயின் தாக்கம், அந்நோய்காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை போன்ற செய்திகளும் தரவுகளும் ஊடகங்களில் வெளிவந்த வண்ணமுள்ளன. ஆனாலும் நோய்க் காவியைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய ரீதியாகவோ அல்லது பிரதேச ரீதியாகவோ என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன, அவற்றில் பொதுமக்களின் பங்கு என்ன என்பன பற்றிய தகவல்கள் மிகக் குறைவாகவே வெளிவருகின்றன. பொதுவான செய்தி என்னவென்றல் பொதுமக்கள் தமது சூழலைச் சுத்தமாக வைத்திருந்து நுளம்புகள் பெருகுவதைத் தடை செய்ய வேண்டும் என்பதே. இது நல்லது. வரவேற்கத்தக்கது. ஆனால் எவ்வளவு தூரம் இது செயற்படுத்தப்பட்டது, எந்த அளவுக்கு நுளம்புகளின் பெருக்கம் குறைக்கப்பட்டது, எவ் விடங்களில் நுளம்புக் காவிகள் காணப்படுகின்றன. எந்தப் பிரதேச மக்கள் கூடுதல் விழிப்பாக இருக்கவேண்டும், போன்ற தகவல்கள் அல்லது தரவுகள் பொதுமக்களைச் சென்றடைகின்றனவா? என்ற கேள்விகளும் எழுகின்றன. அறிவுறுத்தல்களுக்கு மேலாக அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது உறுதிப்படுத்தப்படல்வேண்டும். இதற்கான ஒரு கட்டமைப்பாகவே குடிசார் குழுக்கள் முதல் உயர் மட்டம் வரை மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் சாதாரண பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு ஊடகங்கள் உறுதுணையாக இருத்தல் அவசியமாகும்.

மேற்கொள்ளப்படவுள்ள காவிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்கள், தரவுகளை ஊடகங்கள் வழங்குவது அவசியமாகும். ஊடகங்களின் பங்களிப்பின்றி மேற்கொள்ளப்பட்ட காவிக் கட்டுப்பாட்டு முயற்சியொன்று ஊடகம் ஒன்றில் வெளிவந்த தவறான செய்தி வெளிப்படுத்தலினால் கைவிடப்பட்டதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

இந்தியாவில் 1970களில் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு மலடாக்கப்பட்ட ஆண் நுளம்புகள் சூழலில் விடப்படுவதற்காகப் பெரும் எண்ணிக்கையில் வளர்க்கப்பட்டன. விஞ்ஞானரீதியில் நன்கு திட்டமிடப்பட்டு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவுடன் இம் முறய்சி மேற்கொள்ளப்பட்டது. இம் முயற்சியானது இறுதிக் களப் பரிசோதனை நிலையை அடையும் போது பிரதான செய்தி ஊடகம் ஒன்றின் செய்தியாளர் வெளியிட்ட தவறான செய்தியினால் (ஆய்வின் நோக்கம் பற்றியும் இவ்வாய்வுக்கு நிதி உதவி செய்த வெளிநாடு ஒன்றின் உள் நோக்கம் பற்றியும்) அக்காலப்பகுதியில் ஸ்திரமற்ற நிலையில் இருந்த அரசு இம் முயற்சியை ஓர் இரவில் நிறுத்தும்படி ஆணை பிறப்பிக்கும் நிலையை ஏற்படுத்தியது. இதன் காரணமாக நன்மை பயக்க இருந்த அத்திட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டது. ஆனால் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் இக் காவிக் கட்டுப்பாட்டு முறை பற்றியும் அதன் நோக்கங்கள், நன்மைகள் பற்றிய தெளிவான வெளிப்படுத்தலை இம் முயற்சியில் சம்பந்தப்பட்டவர்கள் ஊடகங்கள் மூலம் மக்களுக்குத் தெரிவிக்கத் தவறியமையாகும்.

அண்மையில் கூட ( 2009 ஜூன் முதலாம் திகதி) இலங்கையில் வெளிவந்த இணையத்தளச்செய்தியொன்றில் கொழும்பை அண்டிய பகுதியில் பலதேசிய நிறுவனம் ஒன்றினால் மரபணு மாற்றப்பட்ட நுளம்புகள் விடப்பட்டதாகவும் அவை சாதாரண நுளம்புகளிலும் பார்க்கப் பருமனில் பெரியவையாகவும் பூச்சிக்கொல்லிகளுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டவை என்றும் இது நோய்ப் பரம்பலில் பாதகமான விளைவை ஏற்படுத்தும் என்ற சாரப்பட தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிறுவனத்தின் அத்தகைய நோக்கத்தில் சந்தேகமும் வெளியிடப்பட்டிருந்தது. இச்செய்தியின் நம்ப




1. பிரதிப்பணிப்பாளர் நாயகம் (பொது சுகாதார சேவைகள்). 2. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் 3. மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர். 4. சுகாதார வைத்திய அதிகாரி. 5. பொதுச் சுகாதார பரிசோதகர். 6. மலேரியா தடை இயக்கம். 7. பிராந்திய தொற்று நோயியல் பிரிவு. 8. காவி கட்டுப்பாட்டு பிரிவு. 9. தேசிய தொற்றுநோயியல் பிரிவு. 10. ஆராய்ச்சி நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும்.

கத்தன்மை உறுதி செய்யப்படாததுடன் இச் செய்தி தொடர்பாக உரிய அரச திணைக் களம் மக்களுக்கு ஏதாவது விளக்கத்தை வழங்கியதா என்பதும் தெரியவரவில்லை. பொதுவாக இச்செய்தியை நோக்கும்போது ஒரு சில அம்சங்களைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

i) விடப்பட்ட நுளம்பு இனம் எது என இனங்காணப்படாமல் எவ்வாறு பூச்சிக் கொல்லிகளுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டவை என அறியப்பட்டது என்பது பற்றிய தெளிவின்மை.

ii) இந்த நுளம்பு பருமனில் பெரியது எனக் குறிப்பிடும் போது இயற்கையில் மிகப் பெரிய நுளம்பு இனங்கள் உண்டு. குறிப்பாக *Toxorhynchites sp* வகையைச் சார்ந்த நுளம்புகள் மிகப் பெரியனவும் மரப் பொந்துகளில் (மூங்கில் காடுகள்) இனம் பெருக்கும் தன்மையும் கொண்டவை. இவை குருதியை உள்ளெடுப்பதில்லை. மாறாக இவற்றின் குடம்பிகள் ஏனைய நுளம்புகளின் குடம்பிகளை, குறிப்பாக டெங்கு நுளம்புக் குடம்பிகளை உணவாக உட்கொண்டு சிறந்த உயிரியல் கட்டுப்பாட்டு அங்கிகளாகச் செயற்படுகின்றன. குறிப்பிட்ட நுளம்பு மக்கள் மத்தியில் எதிரியாகக் கணிக்கப்பட அச்செய்தி காரணமாக அமையலாம். எனவே நன்கு உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் உரியமுறையில் பொதுமக்களைச் சென்றடைதல் அவசியமாகும்.

தற்போது இலங்கையில் டெங்கு நுளம்புக்கட்டுப்பாட்டில் குடம்பிகளை அழிப்பதற்காகக் குடம்பிகள் வளரக்கூடிய இடங்கள் எனச் சந்தேகிக்கப்படும் நீர் தேங்கும் இடங்களில் *Bacillus thuringiensis israelensis (Bti)* என்ற பக்ரீறியாவின் ரொக்சின்கள் விசிறப்பட உள்ளதாகவும், அதற்கான பூர்வாங்க மதிப்பீடுகளைக் கியூபா நாட்டு ஆய்வாளர்கள் மேற்கொண்டனர் என்ற செய்திகளும் வருகின்றன. அதேவேளை இக் குறிப்பிட்ட காவிக் கட்டுப்பாட்டு முறை பற்றி வாதப்பிரதிவாதங்கள் வந்த வண்ணமுள்ளன. ஒரு சில வாரங்களுக்கு முன்னர் பத்திரிகைச் செய்தி ஒன்றில் Bti தொடர்பான சில அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்தப் பின்னணி




யில் Bti ரொக்சின்கள் (Toxins) யாழ். குடாநாட்டில் பயன்படுத்தப்படுமாயின் இது தொடர்பான தகவல்கள் (உற்பத்தி, பாவனை முறை, நன்மைகள், விசிறப்படும் இடங்கள், காலங்கள்) மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுதல் அவசியமானதாகும். இது மக்கள் மத்தியில் ஏற்படும் சந்தேகங்களை நீக்குவதுடன், அமுல்படுத்தப்படும் நடவடிக்கை வெற்றி பெறுவதற்கு உறுதுணையாகவும் அமையும். அதேவேளை, ஊடகங்களும் செய்திகளை உரிய ஆதாரத்துடன் நன்கு பகுப்பாய்வு செய்து வெளியிடும்போது அவற்றின் நம்பகத் தன்மை உறுதி செய்யப்படுவதுடன் காவிக் கட்டுப்பாட்டு முறையே வெற்றிகரமாக மேற்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

எனவே எந்தக் காவிக் கட்டுப்பாட்டு முறையும் மக்களின் நன்மைக்காகவே, அவர்களின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும். ஊடகங்களும் தகவல்களை உறுதிப்படுத்தப்பட்ட சரியான விளக்கத்துடன் வெளியிட்டு உதவவேண்டும்.

சிறந்த திட்டமிடலுடனும், வெளிப்படுத்தலுடனும் கூடிய திட்டங்கள் மக்களினதும் ஊடகங்களினதும் ஆதரவுடன் நிச்சயம் நோக்கத்தை நிறைவேற்றும். ✱

கலாநிதி எஸ்.என்.சுரேந்திரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியற்றுறை, விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் பெறுமதி

★ சிந்திக்கச் செலவிடும் நேரம்
- உன் அறிவிற்கான அத்திவாரம்

★ அன்பு செலுத்த செலவிடும் நேரம்
- ஆத்மாவுக்காக இசைக்கும் சங்கீதம்

★ சிரிக்கச் செலவிடும் நேரம்
- உனக்கான ஔடதம்

★ விளையாட்டுக்காக நீ எடுக்கும் நேரம்
- உடலுக்கு இடும் உரம்

★ வழிபாட்டில் கழிக்கும் காலம்
- இருளகற்றும் ஒளி

★ சேவைக்கென செலவழிக்கும் நேரம்
- உன்னை ஏனையோர் அடையாளம் கண்டு கொள்ள உதவும் பிரகாரம்.

ச.ஜெயகௌரி, தரம் 8 C
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -25

1. திருக்குறளை எழுதியவர் யார்?
2. நெதர்லாந்து எப்போது குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டது?
3. ஆங்கிலக் கால்வாயை விமானத்தின் மூலம் முதல் முதலாகப் பறந்து கடந்தவரின் பெயர் என்ன?
4. இந்தியாவில் முதல் அணுஉலை நீர் மூழ்கிக் கப்பல் எப்போது சேவையில் இணைக்கப்பட்டது?
5. கிரிக்கெட்டில் பயன்படுத்தப்படும் துடுப்பாட்ட மட்டை எந்த மரத்தினால் செய்யப்படுகின்றது?

விடை தெரியுமா?

தெரிந்தால் 12.08.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -23
சரியான விடைகள்

(1) வீரமாமுனிவர்.
(2) சாமுவேல் ஜோன்சன்.
(3) ஆர்.வைஷ்ணவி.
(4) வுக்கி பலக்கிக்கிகே
(5) கி.மு.102 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி.

### பரிசுபெறுவோர்

01. சோ.துவாரஹன், தரம் - 5E, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
02. தி.மதுஷா, மதுரம் பாலர் பாடசாலை, பருத்தித்துறை.
03. ஓ.நிதுஷன், தரம் - 8C, யா/இந்துக் கல்லூரி.

## உதயன் 'சிறுவர்கதிர்' பரிசளிப்பு நிகழ்வின் போது.....



உதயன் 'சிறுவர்கதிர்' பரிசளிப்பு நிகழ்வு கடந்த 12.07.2009 ஞாயிற்றுக்கிழமையன்று உதயன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூத்த பத்திரிகையாளரும் உதயன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவருமான எஸ்.பெருமாள் உரையாற்றுவதையும், யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தனிடம் தி.ரேனுஜன், ச.கஜரூபன், சி.அனோஜன், சி.அகன்ஜா ஆகியோர் பரிசுபெறுவதையும், இ.நிருத்திகாவுக்கு யாழ்.வலய ஆரம்பப் பிரிவு உதவிப் பணிப்பாளர் ம.விமலநாதன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். [படங்கள்:லக்ஸ்மன்]










ஏற்கனவே அந்த இளம் பச்சை நிறப் புகையைச் சுவாசித்ததால் தாம் சுயநினை விழந்து மந்திரக்கிழவியின் சொற்படி செயற் பட்ட சம்பவங்கள் இந்திரவர்மனினதும் சந்திர வர்மனினதும் மனதில் தோன்றி நிழலாடின. எனவே மீண்டும் கிழவியின் பிடிக்குள் சிக்கிவிட அவர்கள் விரும்பவில்லை.

"எல்லோரும் மூச்சை நன்றாக இழுத்துப் பிடித்து வைத்திருங்கள். எவரும் எம்மை நெருங்கிவரும் இளம்பச்சைப் புகையைச் சுவாசிக்க வேண்டாம்" என்று இந்திரவர்மன் எல்லோருக்கும் கட்டளையிட்டான். அவன் சொற்படியே சந்திரவர்மன் மணிமொழி உள்ளிட்ட அனைவரும் மூச்சை நன்றாக உள் இழுத்துச் சுவாசிப்பதை நிறுத்தினர். இளம் பச்சை நிறப் புகை அரச வம்சத்து வாரிசுகள் எல்லோரையும் சூழ்ந்து கொண்டது. அவர்களுக்கு மூச்சை நீண்ட நேரம் அடக்கி வைத்திருப்பது இயல்லாததாக இருந்தது. வேறுவழியின்றிச் சுவாசிக்க முனை கையில் அவர்கள் ஒவ்வொருவராக மந்திரக் கிழவியின் சொற்படி கேட்டு நடக்கும் பொம்மைகளாக மாறத் தொடங்கினர்.



இறுதியில் சந்திரவர்மனும் இந்திரவர்மனும் கூட இளம் பச்சை நிறப் புகைக்கு பணிந்து மீண்டும் மாயக்கிழவியின் சொற்கேட்டு நடக்கலாயினர். "சிறு பயல்களே! என்னிடமா வாலாட்டினீர்கள்! எல்லோரும் விரைந்து சென்று பலிபீடத்தில் உங்கள் கழுத்தை அழுத்திவையுங்கள். உங்கள் எல்லோரையும் பலிகொடுத்து என்றும் இளமையோடு இருக்கும் சிரஞ்சீவி வரத்தை இன்னும் சில நொடிகளில் நான் அடையப்போகிறேன். அதை யாராலும் தடுக்க முடியாது" என்று கூறினாள் மந்திரக்கிழவி. அவள் சொல்லுக்குக் கட்டுண்டு இயந்திரங்கள்போல பலிபீடத்தை நோக்கி ஆயிரத்தியொரு அரசகுமாரர்களும் நகரத் தொடங்கினர். தான் மீண்டும் இளமையாவது பற்றிய கனவுகளில் மந்திரக்கிழவி மூழ்கத் தொடங்கினாள். [தொடரும்]


## மாணவர் தூரிகை



கஜீபனி,
தரம் - 3 D,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



ந.விதுஷெலி, தரம் - 9,
யா/வண்ணை நாவலர் மகா வித்தி.



கி.வேணுஜா,
நாவலர் முன்பள்ளி, வேலணை.

## பீஷ்மர்

சந்தனு என்ற ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு 'கங்கை' என்று ஒரு மனைவியும் 'காங்கேயன்' என்று ஒரு மகனும் இருந்தனர். காங்கேயன் பெரிய பலசாலியாகவும் சிறந்த அறிவாளியாகவும் விளங்கினான். சந்தனு அவன் மீது மிகவும் அன்பு வைத்திருந்தான். காங்கேயன் நன்னடத்தை உடையவன். ஆகையால், அவனிடம் குடிமக்களும் அன்புடையவர்களாக இருந்தனர். சத்தியவதி என்கிற ஒரு பெண்ணை மணந்து கொள்ள சந்தனு விருப்பப் பட்டான். அந்தப்பெண்ணின் தந்தையிடம் அவன் தானே நேரில் போய் பெண் கேட்டான். பெண்ணின் தந்தை மகாராஜவே என் பெண்ணிற்குப் பிறக்கும் பிள்ளைக்குப் பட்டம் கட்டுவதானால் நான் பெண் தருகிறேன். இது என்னுடைய விருப்பம். நான் இதைக் கேட்பது பற்றி என்னை மன்னிக்க வேண்டும். என்று கேட்டான். நீ கேட்டது நியாயம்தான் தன் மகளின் இன்பதுன்பங்களைக் கவனிக்க வேண்டியது தந்தையின் கடமையல்லவா? ஆகையினால் நீ கேட்டாய். இருக்கட்டும் நான் பிறகு வருகிறேன் என்று அரண்மனைக்குப் போனான் சந்தனு. என்ன செய்வது? தனக்கு பிறகு தன்மகன் கங்கேயனுக்கு அல்லவா அவன் பட்டம் கட்ட வேண்டும்? குடிமக்களும் அவனைத் தானே விரும்புவார்கள்? இப்படி இருப்பதால் என்ன செய்யலாம் என்று சந்தனுவும் பலவாறாக யோசித்தான். இறுதியில் 'இது கூடாத செயல்; தகாத செயல்' என்று தீர்மானித்தான். அதனால் கவலையும் கொண்டான்.



சந்தனு இப்படி மனக்கவலை கொண்டிருப்பது காங்கேயனுக்குத் தெரிந்தது. அவன் நடந்த விவரங்களைக் கேட்டு அறிந்தான். தந்தையின் கவலையைப் போக்க எண்ணினான் உடனே சத்யவதியின் தந்தையிடம் போனான். சந்தனு மகாராஜாவே வந்ததாக எண்ணி அவன் காங்கேயனை மரியாதையாக வரவேற்றான். காங்கேயன் அவனைப் பார்த்து 'எனக்கு ராஜ்ஜியம் வேண்டாம். உன் மகளின் பிள்ளைக்கே அது சொந்தம் இது நிச்சயம். என தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது மகனாகிய என் கடமையல்லவா? ஆகையால் நான் என்னுடைய உரிமையை விட்டுக் கொடுக்கிறேன்' என்றான்.

சந்தனு மகாராஜா பெரிய நீதிமான்; காங்கேயன் அவரது பிள்ளையல்லவா? ஆதலால் தம்முடைய கடமையைச் செய்கிறார் இப்படி ஒரு தியாகம் செய்ய இந்த உலகத்திலே எவன் துணிவான்? என்று எண்ணி பெண்ணின் தந்தை மகிழ்ச்சியடைந்தான். காங்கேயனைப் பார்த்து,"ஐயா! நீர் உமக்குரிய அரசுரிமையை விட்டு விட்டீர் இனி எனக்கு முழுமையான நம்பிக்கை உண்டு. ஆனால் நாளைக்கு உமது மகனோ அல்லது பேரப்பிள்ளைகளோ எப்படி விட்டு விடுவார்கள்?" என்று கேட்டான். காங்கேயன் என்ன செய்வான்? சற்று நேரம் யோசனை செய்தான். "தந்தையின் விருப்பத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்ற வேண்டுமே; இல்லாவிட்டால் என் கடமையைச் செய்யத் தவறியதாகிவிடுமே" என்று எண்ணி, "நான் கல்யாணமே செய்து கொள்ளப்போவதில்லை. என் ஆயுள் முழுவதும் பிரமச்சாரியாகவே இருப்பேன்! இது சத்தியம்! சத்தியம்!" என்று பிரதிக்ஞை செய்தான். காங்கேயனுடைய இந்தப் பிரதிக்ஞையைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் புகழ்ந்தார்கள். சந்தனு மகாராஜா எவன் செய்வான் இப்படிப்பட்ட தியாகம்? இவனைப் பிள்ளையாகப் பெற்ற புண்ணியமே புண்ணியம்!" என்று சொல்லி மகனை கட்டித்தழுவிக் கொண்டார்.

"காங்கேயன் தந்தையை வணங்கி நான் என்ன செய்துவிட்டேன். நான் என் கடமையைத்தான் செய்தேன்" என்று சொன்னான். காங்கேயன் ஒருவராலும் செய்யமுடியாத சத்தியத்தைச் செய்தானல்லவா? அதனால் அவனுக்குப் "பீஷ்மர்" என்று பெயர் உண்டாயிற்று. பிறகு சத்தியவதியைச் சந்தனு மகாராஜா மணந்து கொண்டான்.

சி.மிதிலா, தரம்-9 E, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்



(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..........................................
தரம் :-..........................................
பாடசாலை :-..........................................
..........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.......................... ..........................................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




emami
# அம்லா ப்ளஸ்
ஹேர்பல் ஹெயர் ஒயில்

இமாமி அம்லா ப்ளஸ் பாரம்பரியமாக குறிப்பிடத்தக்க ஊட்டமளிக்கும் மற்றும் உறுதியான குணங்களுடைய மூலிகைப் பொருட்களின் விசேட கலவையைக் கொண்டுள்ளது.

இமாமி அம்லா ப்ளஸ் விசேட குணங்களை கொண்டுள்ள நெல்லி, மருதாணி, கற்றாளை, வாதுமை எண்ணெய் (Almond oil) ஆகிய சிறப்பு பதார்தங்களை கலவை செய்து உற்பத்தி செய்யப்படுகிறது. இக் கேச எதலம் இயற்கை ஊட்டப் பொருளாக செயற்படுவதுடன் முழுமையான உயிரோட்டம், ஆரோக்கியம், பிளவுபடுத்தலுக்கு உட்படாத வலிமையான பளபளப்பான கேசத்தை விருத்தி செய்கிறது.

பிரதான உள்ளீடுகளின் செயல்பாடு:


- நெல்லி (Amla): கேசத்தின் வேர்களைப் பலப்படுத்தி பேணுகிறது.
- மருதாணி (Henna): கேசத்தை வலுப்படுத்தி கருமையாக்கி இயற்கை வளர்ச்சியை விருத்தி செய்கிறது.
- கற்றாளை (Aloe vera): தலைமுடி நரைப்பதை தடுத்து ஈரத்தன்மையை சிறப்பாக பராமரிக்க உதவுகின்றது.
- பாதாம் எண்ணெய் (Almond oil): புரதம் நிறைந்துள்ள இது தலைமுடிக்கு ஆரோக்கியமான பளபளப்பை தருகிறது.

பாவிக்கும் முறை:

சுமார் 1 முதல் 2 தேக்கரண்டி அளவு (10. மி. லீ) இமாமி அம்லா ப்ளஸ் தலையில் பூசி தலையின் மேல் பாகத்தில் மெதுவாக வட்டமான அசைவுகளுடன் மசாஜ் செய்து நன்றாக தலைமுடியை சீவுங்கள். சிறந்த பயனைப் பெற இமாமி அம்லா பூசிய தலை முடியை குறைந்த பட்சம் இரு மணித்தியாலங்களுக்கு ஷவர் குல்லாய் அல்லது தலைப்பாகையால் மூடிக் கொள்ளுங்கள். பின்னர் தலை முடியை ஷாம்புவினால் கழுவுங்கள்.

ஹார்கோட்ஸ் (பிரைவேட்) லிமிடட்
(கன்சியுமர் டிவிஷன்)
14. புகையிரத நிலைய வீதி, தெஹிவளை
தொ: 011-5432180, 011-5432186

# திரை விமர்சனம்




'சுப்பிரமணியபுரம்' ஜெய், பிரியா, லஷ்சுமிராய், சந்தானம், ரகுமான் ஆகியோரின் நடிப்பில் வெளிவந்துள்ளது 'வாமனன்'.

சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசையில் கிராமத்தில் இருந்து சென்னைக்கு வருகிறார் ஜெய். சென்னையில் தனது நண்பனான சந்தானத்தின் அறையில் தங்கியபடி வாய்ப்புக்கேட்டு அலைகிறார். ஆனால், எல்லா இடங்களிலும் அவருக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. அதையெல்லாம் லட்சியம் செய்யாமல் தன்னுடைய முயற்சியைச் சற்றும் மனம் தளராதவராய் தொடர்ந்தபடி இருக்கிறார் ஜெய். இதனிடையே ஜெய்க்கும் பிரியாவுக்கும் காதல் அரும்புகிறது. ஒரு தொலைக்காட்சி நிலையத்தில் ஜெய்க்கு வேலை கிடைக்கும் சந்தர்ப்பத்தில் லட்சுமிராய் கொல்லப்படுகிறார். அவரைக் கொன்றது ஜெய்தான் என்று எல்லோரும் நம்புகின்றனர். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஓடத் தொடங்குகிறார் ஜெய். இறுதியில் ரகுமானிடம் சென்று அடைக்கலமாகிறார். அதன்பின்தான் லட்சுமிராயைக் கொன்றது ரகுமான்தான் என்ற உண்மை ஜெய்க்குப் புரிகிறது. அதன்பின் எவ்வாறு கொலையாளியைச் சட்டத்தின் முன் நிறுத்தி ஜெய் நிரபராதியாகிறார் என்பதை 'வாமனன்' விறுவிறுப்பாகச் சொல்லியிருக்கிறது.

அதிரடியான திரைப்படத்திலும் யதார்த்தத்தை மீறாத நடிப்பால் எல்லோரையும் கவர்கிறார் ஜெய். அமைதியான வில்லனாக வந்து அதிர வைக்கிறார் ரகுமான். யுவன் சங்கர்ராஜாவின் இசை படத்திற்கு இன்னும் பலம். வழக்கமான கதையை வித்தியாசமாகவும் விறுவிறுப்பாகவும் சொல்கிறது 'வாமனன்' ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**மர்ஹபா பன்னீர்** சுத்தமான ரோஜா பூக்களின் சாறு

- ஒப்பனையை அகற்ற
- கண் எரிச்சல், சிவத்தலைக் குணப்படுத்த
- முகம் மற்றும் உடலுக்கு புத்துணர்ச்சி தரும்
- உணவு வகைகளின் சுவையூட்டி





**மர்ஹபா தேன்** வீடுகளில் இருக்க வேண்டிய நோய் நிவாரணி




- உடல் சக்தியை மீளப்பெற
- தடிமன், இருமல், தொண்டை வலி, ஒவ்வாமை (Allergy) மற்றும் சமிபாட்டைச் சீர்படுத்தும்
- அழகு தேவைகளிற்கு

**மர்ஹபா பாதாம் எண்ணை**

உடல் ஆரோக்கியத்தையும் அழகையும் மேம்படுத்த




- கண்களின் கீழ் கருவளையத்தை நீக்க
- உடல் மற்றும் தலைமுடிக்கு வலிமையூட்ட
- உணவு சுவையூட்டியாக

MARHABA
SINCE 1975
இயற்கை எழிலின் தூய்மை மிகு சாரம்

**மர்ஹபா ஆமணக்கு எண்ணை**

ஔடத குணமடங்கிய இயற்கை நிவாரண எண்ணை

- மிகவும் பாதுகாப்பான மலச்சிக்கல் நிவாரணி
- அதிக வெய்யிலினால் ஏற்படும் தோல் உபாதைகளை நீக்க
- தலைமுடிக்கு பளபளப்பை தருவதற்கு




**மர்ஹபா இஸ்பஹோல் ஹஸ்க்**

மலச்சிக்கல், கொலஸ்ரோல், உடல் பருமனை கட்டுப் படுத்த




- மலச்சிக்கலை நீக்க சிறந்த இயற்கை நார்ப்பொருள்(Fibre)
- வயிற்றிலும் குத்திலும் ஏற்படும் அசுத்தங்களை அகற்றி நிவாரணமளிக்கும்.
- உடலில் தேவையற்ற சீனி, கொழுப்பு சேர்வதைக் கட்டுப்படுத்த




**மர்ஹபா எக்னி கிளீன்**

முகப்பரு மற்றும் கரும்புள்ளிக்கு சிறந்த நிவாரணி

- பருக்கள், கரும்புள்ளிகளை நீக்க
- தழும்பு, சிறுகாயங்களை அகற்றவும்

100% Pure & Natural

ஹார்கோட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கன்சியுமர் டிவிஷன்),
இல.14 புகையிரத நிலைய வீதி, தெஹிவளை தொ: 011-5432180, 011-5432186
* யாழ் விநியோகஸ்தர்: மயூரா அன்பளிப்பகம் 021-2229151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Spoken English & International ESOL

City & Guilds

இந்த இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தால் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்ற City & Guilds இன் Diploma வைப் பெறமுடியும்.

**The International ESOL Diploma Covers all four language skills; Reading, Writing, Listening and Speaking**

**01.08.2009 இல் முதல் முதலாக யாழ்ப்பாணத்தில் இந்தப்பரீட்சைகளை 52 மாணவர்கள் எழுதிஇருக்கிறார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற; சரளமாக எந்த சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச; இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத; எந்த'ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாக படிக்க ஏற்ற ஓர் பாடநெறி.

பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கட்கு சான்றிதழ் வழங்கும், Awards Ceremony, வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச நினைவு மண்டபத்தில் (BMICH) உரிய காலத்தில் நடைபெறும்.

எல்லோருக்கும் ஏற்றதோர் பாடநெறி இரண்டு பரீட்சைகளையும் ஒரே நேரத்தில் எடுக்கவேண்டும் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

## Course Schedule

| | Mon - Tue - Wed - Thu - Fri | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 3 Months (120 hours) | 4 Months (120 hours) |
| Time | 8.00 a.m - 10.00 a.m | 11.00 a.m - 02.00 p.m |
| Commencement | 10th August 2009 | 15th August 2009 |

புதிய வகுப்புக்கள் 10.08.2009 இல் ஆரம்பமாகின்றன.

## BRITISH COLLEGE OF ENGLISH

City & Guilds Approved Center

143, Adiyapatham Road, Thirunelvely. T.P:0602216027

BRITISH COUNCIL

CHEVENING SCHOLARSHIPS

British High Commission Colombo

**Chevening Scholarships Available for Post-Graduate Study in the UK**

Are you established in your chosen profession? Can you demonstrate evidence of leadership potential? Are you committed to working in Sri Lanka? Do you have an IELTS score of 6.5 or over? Are you applying for a course of post-graduate study in the UK for the academic year 2010-2011?

If the answer to these questions is 'yes' then you are invited to apply for a Chevening Scholarship to fund your studies in the UK. The scholarship includes your airfare to the UK, all tuition fees and a monthly maintenance allowance.

Application forms can be obtained from the below link:

http://www.britishcouncil.org/srilank_Hlt207530279a_Hlt207530279_education-uk-british-cheveni_Hlt233424478n_Hlt233424478g-scholarship_Hlt233424481s_Hlt233424481.htm

Completed on-line application forms should be uploaded **before Wednesday 11 November 2009**

A short-list of candidates will be invited for interview in January 2010. Applicants will need to demonstrate that they have the personal qualities to benefit from the scholarship and have a clear idea how it will help them to benefit Sri Lanka upon their return. Short-listed applicants will be contacted in December 2009.

***For further information contact:***

Assistant Manager, Education UK (Chevening)
British Council
49 Alfred House Gardens
Colombo 00300
Sri Lanka.
T +94 11 4521521 (ext 575)
F +94 11 2508087
niroshi.siriwansa@britishcouncil.org

*"The Chevening Scholarship is undoubtedly the most cherished and invaluable experience in my professional career. The linkages established during the tenure of my scholarship contributed immensely towards the success of the ICT legal reforms work, which I helped carryout through ICTA".*

***Jayantha Fernando, Program Director / Legal Advisor, ICT Agency of Sri Lanka (ICTA)***

*"The Chevening was like a special treat for me – It gave me the time which I hadn't given myself to read, reflect, discuss and write on issues I had worked on for many years. The learning was enormous"*

***Chulani Kodikara, Research Associate International Centre for Ethnic Studies (ICES)***

Please note that admissions decisions are taken by individual academic institutions. Scholarship awards are conditional upon a confirmed offer to a course of post-graduate study at a UK institution.

(சி/559946)

## 31ஆம் நாள் நினைவலைகள்



**அமரர் இரத்தினம் வைகுந்தவாசன்**

(களஞ்சியக் காப்பாளர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்)

மண்ணில்:05.11.1952

விண்ணில்:01.07.2009

நீலவிழி நீர்சொரியும் நிலையறிய மாட்டாயோ!
கோலமகள் துணையிழந்து வாடுவதை அறியாயோ!
பாலகர்கள் பாரினிலே படும்துயரைப் பார்க்காயோ!
நாலுதிக்கும் தேடுகின்றோம் நாயகனே வாராயோ!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

47, பிறவுண் வீதி,
கொக்குவில்.
(87482)

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 12 . 1945



உதிர்வு 03 . 08 . 2006

**அமரர் லடிஸ்லாஸ் மேரிபேர்டினட்**

**(ஓய்வு பெற்ற ஆசிரியர், சென்.பற்றிக்ஸ் கல்லூரி)**

மூன்றாண்டு ஓய்ந்தது எம்
பெருமூச்சு ஓயவில்லை - மறக்கமுடியவில்லை உன்
சிரித்த முகத்தினையும் துடுக்கான பேச்சினையும்
மைந்தனாய்த் தனயனாய் துணைவனாய்த்
தந்தையாய், திருமறைத் தொண்டனாய், நல்லாசிரியனாய்
நீ பதித்த தடங்கள் நீங்கா நின்று
அலை அலையாய் மோதி-எம் நெஞ்சத்தைக் கிளறுகின்றதே

எவ்வாண்டு ஆனாலும் ஆறாது எம் பெருங் காயம்
அணையாது நீ பிரிந்த துயரம் தூங்காது உன் நினைவு உன்
மனையாளும் மைந்தரும்
உந்தவரும், பெற்றவளும் உடன் பிறப்புகளும்
நீ சென்ற இத்தினத்தில் உனை நினைந்து
வானவர் மத்தியில் புகழ் பூத்திருக்க
மஞ்சாரம் சொரிந்து நெஞ்சார வாழ்த்தி
கண்ணீர் மல்கி கதறி நிற்கின்றோம்

நாளை (03.08.2009) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

முதலாம் குறுக்குத் தெரு,
பாசையூர், யாழ்ப்பாணம்.
(87473)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளை, தாய், சகோதரர்கள்

## மரண அறிவித்தல்

**செல்லப்பா பாலசிங்கம்**

**(ஓய்வு பெற்ற தபால் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரி)**



கொழும்பு 15, மட்டக்குளியை வதிவிடமாகக் கொண்ட செல்லப்பா பாலசிங்கம் (ஓய்வு பெற்ற தபால் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரி) கடந்த 23.07.2009 அன்று ஒஸ்லோ, நோர்வேயில் காலமானார்.

அன்னார் சுழிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற திரு.திருமதி அருணாசலம் செல்லப்பா தம்பதியரின் அன்பு மகனும் சித்தன்கேணியைச் சேர்ந்த கால்ஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ராஜநாயகியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், வட்டு. இந்துக்கல்லூரி) அன்புக் கணவரும் திருமதி அரியரட்ணம் ராஜலெட்சுமியின் (மானிப்பாய்) அன்புத்தம்பியும் பேராசிரியர் கலாநிதி இளங்கோ, பார்த்திபன், வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலாநிதி சீதாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.08.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Ostre Krematorium, Lille Kapell, Tvetenveien 6,0666 ஒஸ்லோவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
Dr.Ilanko Balasingham, Kjelsaveien 28C,0488 Oslo, Norway
(சி/559962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகளைக் கண்டு தளராத ஜக்ஷனின் வாழ்க்கை மனிதருக்கு ஒரு பாடப் புத்தகம்

1993 இல் மைக்கல் ஜக்ஷனின் பேட்டியை 90 மில்லியன் அமெரிக்கர்கள் இமைக்காமல் தொலைக்காட்சியில்



பார்த்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அமெரிக்க வரலாற்றில் அதிக மக்கள் பார்த்த விளையாட்டுத் தவிர்ந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இது நான்காவது இடத்தைப் பிடித்து இருக்கிறது. அதில் கேட்கப்பட்ட அவனது உடல் நிலை பற்றிய கேள்விகளை எதிர்கொண்டு உள்ளத்தே ஜக்ஷன் திணறியிருக்கக்கிறான். அவன் பாவிக்கும் மருந்துகள், முக மாற்ற பிளாஸ்டிக் சத்திர சிகிச்சைகள், தோலை வெளிற்ற எடுத்த நடவடிக்கைகள், பாலியல் சர்ச்சைகள் பற்றியெல்லாம் கேள்விகளால் அவன் துளைக்கப்பட்டான்.

1993 இல் Jordan Chandler என்ற 13 வயதுச் சிறுவனும் அவனுக்குத் துணையாக தந்தையான Evan Chandler என்பவரும் ஜக்ஷனின் மீது பாலியல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தலாயினர். சிறுவனுடன் ஜக்ஷன் தவறாக நடந்தமைக்கான

விவாகரத்துப் பெற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் இருந்தனர். பிரின்ஸ் மைக்கேல், பரிஸ் மைக்கேல் ஆகியோரே அவர்கள். இரண்டாம் பிரின்ஸ் மைக்கேல் 2002 இல் வாடகைத் தாயின் வயிற்றில் வளர்ந்து பிறந்தான்.

தாய் யாரென்பது வெளியிடப் படவில்லை. செயற்கை வைத்திய முறையில் தனது உயிரணுக்கள் மூலம் உருவாகியதாக ஜக்ஷனால் தெரிவிக்கப்பட்ட குழந்தையை அவன் பேர்லினில் உள்ள ஹோட்டல் அட்லொனில் (Hotel Adlon) நான்காம் மாடியில் நின்றபடி தரையில் கூடியிருந்த தனது ரசிகர்களுக்குக் காட்டினான்.

குழந்தையை அப்படி நீட்டிக் காட்டியதே பெரும் விமரிசனங்களைக் கிளப்பி விட்டது. பின்னர் ஜக்ஷன் மன்னிப்புக் கேட்டாக வேண்டி இருந்தது. இவை தவிர அவ்வப்போ பல பெண்கள் தங்கள் குழந்தைக்கு ஜக்ஷன்தான் தந்தை என உரிமைப் போராட்டம்

ஜக்ஷனின் புகழுடலை தாங்கிய பேழை அங்கே வைக்கப் பட்டிருந்தது.

அவனது இசைத் தொகுப்புக்கள் பாடல்கள் உலாக்களின் தலைப்புக்களே கேட்பவர் மனத்தை அள்ளும் வல்லமை படைத்தவை. அவற்றில் சில இதோ!

"Workin' Day and Night" and "Get on the Floor", "The Lady in My Life", "Human Nature" , "The Girl Is Mine"; "Wanna Be Startin' Somethin'"; "Baby Be Mine" ,"We Are the World"; "Dirty Diana (for love)".[155] "I Just Can't Stop Loving You" , "Man in the Mirror, "Smooth Criminal" "Heal the World" (for children),"Jam", "Remember the Time","In the Closet"(for emotional love), "Will You Be There", "Keep the Faith ",Gone Too Soon"(for Aids )"You Are Not Alone"(for injustice) "Stranger in Moscow", "Cry", "The Lost Children", "Speechless", "Break of Dawn", "Butterflies", "2000 Watts", "Heartbreaker", "Shake Your Body (Down to the Ground)", "Leave Me Alone", "Scream", "Earth Song"and "Invincible".

உலகினைப் பரபரப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்த ஜக்ஷனுக்கு வாழ்க்கை முழுக்க சோதனைகள்தான். அவை அவனைப் பக்குவப் படுத்தவும் அடுத்த பாடலை வெற்றிகரமாக

என அனைத்தும் இருந்தாலும் அனைத்தையும் மிஞ்சி ஜக்ஷன் இசைதான் மிளிர்ந்ததாம்!

அவனது பெயரில் ஆடைகள் பட்டன்கள் தொப்பிகள் திறப்புக் கோர்வைகள் புத்தகப் பைகள் பொம்மைகள் என அனைத்தும் விற்பனைக்கு வந்தன. சூடு கண்டன.

டிக்கெட் கிடைத்து காலங்கள் காத்திருந்து நிகழ்ச்சிக்கு வந்து அது அரங்கேறும் கணம் தாம் கண்ணால் காண்பது ஜக்ஷனே என்பதை நம்ப மறுத்தன கண்கள் எனப் பல ரசிகர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஜக்ஷனின் இறுதி அஞ்சலி நிகழ்வினை நெறிப்படுத்திய வணபிதா ஷாப்ரன் அவர்களே கரைந்து உருகி இருக்கிறார். அவர் தனது உரையில் 1970 முதல் அவனை அறிவேன் என்றும் அவனது மூச்சு செயல் முழுவதும் உலகினில் அன்பும் கருணையும் தவிர வேறில்லை என்றும் எனவேதான் இத்தனை கோடி மக்களை அவனால் வசீகரிக்க முடிந்தது என்றும் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

மரணித்த ஒருவனுக்கான மாதிரி அஞ்சலி உரையாக அவரது உரை அமையவில்லை. உலகம் ஏதோ ஒன்றைப் பெரிதாக இழந்து நிற்பதை அவர் கோடிகாட்டினார். எத்தனை இடர்கள் வந்தாலும் அத்தனையும் தாங்கித் தகர்த்து முன்னேறி மக்களின் அன்பான எதிர்பார்ப்புக்களை உரிய

## துள்ளிசைப் புயல் மைக்கல் ஜக்ஷன் 2

நிகழ்த்தலாயினர். வாழ்க்கை உச்சத்தில் என்றால் சர்ச்சைகள் சகஜம் தானே.

2003 இல் மீண்டும் பாலியல் சர்ச்சை. Gavin Arvizo என்ற 13 வயதுச் சிறுவன் இதில் சம்பந்தப் பட்டிருந்தான். குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் அல்லவா வாங்கவேண்டும். இரண்டு வருட நீதிப் போராட்டம் மீண்டும் அவனை கடுமையான பெத்தடின் போதைக்கு அடிமை கொண்டது. வருமான இழப்பு நிதிப் பிரச்சினைகள் ஒப்பந்தத் தொல்லைகள் எனப் பலவும் விழித்துக் கொண்டன.

வடிவமைக்கவுமே உதவின எனலாம். மில்லியன் கணக்கில் மந்திரத்தால் கட்டுண்ட மக்களின் கனவு நாயகன் அவனென்றால் தொல்லைகள் தேடி வருவதற்கு சொல்லவா வேண்டும்?

1984 இல் அந்த 26 வயதுப் பாடகனின் Victory Tour துடிப்பான நிகழ்ச்சி நீண்ட நாள் கனவாக Kansas City யின் Arrow Head Stadium இல் அரங்கேறத் தயாராகிக் கொண்டிருக்கிறது. நாற்பத்தையாயிரம் இரசிகர்களின் கரகோஷத்தின் மத்தியில் மாலையில் சூரியன் மயங்கும் வேளையில் உச்ச ஸ்தாயியில் வாத்தியங்கள் முழங்க ஏதோ ஒன்றை புதிதாய் தொடங்க

தருணங்களில் நிறைவேற்றி தன்னைத் தானே சுருட்டிக் கொண்டவன் அவனென்றார்.

அவனது தாரக மந்திரமே அன்பு தான். உலகினை அன்பினால் ஆண்டான். அன்பைப் பாடினான். அனைவர் மீதும் அன்பு செலுத்தினான். அனைவரையும் தன்மீது அன்பு கொள்ளவைத்தான். உலக மக்கள் ஒருவரோடு ஒருவர் அன்பு செலுத்த வேண்டிப் பாடினான். அன்பினால் உலகினைக் கொள்ளை கொண்டான்.

அவனது பாதையில் முட்கள் நிறைந்து இருந்தன. தடைகள் வந்தன. காயங்கள் ஏற்பட்டன. நெஞ்சம் உடைந்து கொண்டது. மனது மாய்ந்து கொண்டது. விழுந்த போதெல்லம் எழுந்தான் அதனால் வெற்றிப் பயணம் தொடரத்தான் செய்தது. பயணத்தை நிறுத்தவே இல்லை. – உலகின் உச்சிகதே ஏறினான் என்றார் அந்தக் குருவானவர். நம்பிக்கை தந்தாய்! கொடுமைதனை வென்றாய்! வாழ்ந்து காட்டினாய்! சோதனை கண்டு தளராத உன் வாழ்க்கை ஒரு பாடப் புத்தகம்! கண்டோம்! கற்றோம்! நன்றி மைக்கேல் ஜக்ஷன் நன்றி! நன்றி! நன்றி! என முடித்தார்.

நியூயோர்க்கின் ஸ்ரேப்பிள்ஸ் நிலையத்தில் நிகழ்வு இடம்பெற்றது. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினரே அதில் கலந்து கொண்டனர். மரணத்தை தழுவுவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னரும் அவன் இதே மண்டபத்தில் ஒத்திகையில் ஈடுபட்டு இருந்தான்.

## விழுந்த போதெல்லாம் எழுந்து வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தவர்

ஆதாரங்களை வெளியிட்டனர். விசாரணைகள் தீவிரமடைந்தன. 22 மில்லியன் டொலர் இழப்பீட்டை வழங்க வேண்டியதாயிற்று. எதையும் உறுதிபட நிருபிக்க இயலவில்லை. எனினும் ஜக்ஷன் உடைந்து போனதில் வியப்பேதும் இல்லை. மேலும் போதைக்கு அடிமையாக வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோகம் என்ற சர்ச்சையில் சிக்கிய ஜக்ஷனுக்கு மனத் துணையாக விளங்கிய Lisa Marie Presley என்ற பாடகி 1994 மே மாதம் அவனை மணந்து கொண்டாள். எனினும் அந்த வாழ்க்கை இரண்டு வருடங்களே நீடித்தது.

இசை நிறுவனமான SONY யுடன் சர்ச்சை முதல் தொட்டதற்கெல்லாம் சர்ச்சைகள் முளைத்தன. பணம் புரளும்போது இவற்றுக்கெல்லாம் குறை இருக்காது.

அவனது சரும நோய்க்கு அன்பாகவும் பரிவாகவும் நீண்ட காலம் சிகிச்சை அளித்த Deborah Jeanne Rowe என்ற தாதி 1980 இலிருந்தே அவனது உள்ளம் கவர்ந்து இருந்தாள். 1996இல் அவள் ஜக்ஷனின் இரண்டாவது துணைவியானாள். எனினும் 1999 இல் இருவரும் சேர்ந்தே

பொப் இசை மன்னன் (King of Pop) என்ற பெயரில் Sony BMG அவனது 50வது பிறந்தநாள் பரிசாக வெளியிட்ட இசைத் தொகுப்பு கடந்த ஆண்டில் பிரபல்யமடைந்தது. 2009 ஜுலை 13 இல் லண்டனில் தொடங்கவிருந்த 50 தொடர்களில் பார்வையாளர்களாக ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் சீட்டுக்களுக்கு முண்டியடித்துக் கொண்டிருந்த வேளையில் குறைந்தது 250 மில்லியன் பிரிட்டிஸ் பவுண்டுகளுக்கு குறையாமல் பணம் குவியும் தருணத்தில் வெண்ணெய் பொங்கி வரும்போது தாழி உடைந்த கதையாக இவனது மரணச் செய்தி உலகினை உறைய வைத்திருக்கிறது.

No.100, North Carolwood Drive, Holmby Hills, Los Angeles, USA என்ற விலாசத்தில் மாளிகையில் வசித்து வந்த ஜக்ஷன் கடந்த ஜுன் 25 அன்று சுருண்டு விழுந்தான். மார்பு வலி என்று கூறப்பட்ட போதும் பணக் குகையின் மரணத்தில் மர்மங்கள் இருப்பதாக சர்ச்சைகள் கிளம்பின. இறுதிச் சடங்குகளுக்குப் பொதுமக்கள் கலந்து கொள்ள அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் உலகெங்கும் கண்ணீரில் கரைந்தபடி ஒரு பில்லியன் மக்கள் இறுதி நிகழ்வுகளைக் கண்ணுற்றனர்.

வேண்டும் (Wanna Be Startin' something) என்ற கோஷத்தோடு மேடையில் வெளிப்பட்ட ஜக்ஷன் இரண்டு மணித்தியாலங்கள் போட்ட ஆட்டம் இருக்கிறதே அது ஒன்றே வாழ்க்கை முழுவதற்கும் போதும். காணக் கண் கோடி வேண்டும். இது இனிப் பத்து வருடங்களுக்கு உலகினில் மிஞ்சப்படாத நிகழ்ச்சி என நியூஸ் வீக் சஞ்சிகை அடுத்த வாரம் ஜக்ஷனை அட்டைப் படம் போட்டு தலைப்புக் கட்டுரை வரைந்து விட்டது. தரமான பத்திரிகைகள் கூட மயங்கும் அளவிற்கு அவன் காவிய நாயகன் ஆகிவிட்டான்.

நிகழ்ச்சி நடைபெறும் நகரங்களில் நெரிசலைச் சமாளிக்க இயலவில்லை. பத்திரிகை விற்பனை சூடு பிடித்தது. பத்திரிகைகளில் டிக்கெட்டுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் வெளிவந்தன. தபாலகங்களில் காசுக் கட்டளைகளை பெற மக்கள் முண்டியடித்தனர். புரளி கிளப்பியும் பத்திரிகைகள் பிழைத்துக் கொண்டன.

ஒரு காட்டுத் தீபோல ஜக்ஷன் மோகம் உலகெங்கும் பரவிக் கொண்ட காலம் அது என பத்திரிகைகள் சொல்லிக் கொண்டன. மேடைகளில் லேசர் ஒளி வாண கோலங்கள் மாயா ஜாலங்கள் விண்ணைப் புகை வாண வேடிக்கை

தங்கத் தகடுகள் பதித்த பேழையில் உறங்கும் - ஆடி ஓய்ந்த உடல்! அதனைச் சுமந்து ஊரக் கொடுத்து வைத்த வாகனம் எதனையும் கண்டும் ஏற்க மறுக்கும் கோடானு கோடி இரசிகர்கள், பலதிறக் கலைஞர்கள் எல்லோரும் தேம்பியழ, உறவுகள் கலங்கிநிற்க ஜக்ஷன் விடை பெற்ற காட்சி உலகினில் இனிக் காணக் கிடைக்காதது.

அதுவே உலகினுக்கும் பெருமை. நேற்றிருந்தான் ஒருவன் (நெருநல் உளனொருவன்) இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் உலகு என்றாரே வள்ளுவரும்!* (நிறைவுற்றது)



மு.சிவநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருந்துகள் பறந்து .........

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஒருவன் வேண்டுமென்று நச்சரித்துக் கொண்டிருந்தாள். இவருடைய வலைக்கும் ஆள் பற்றாக்குறையாக இருந்தது.

''தம்பி... இஞ்சாலை உன்னத்தான். இஞ்ச வா....''

பெருமாள் திரும்பிப் பார்த்தான். அவன் முகத்தில் என்னதென்று விரித்துரைக்க முடியாத பாவம். அவன் சவிரிமுத்தர் அருகே வந்தான்.

''தம்பி உன்ரை பேரென்ன...''

''பெருமாளுங்க...''

''எந்த ஊர் மோன உனக்கு...''

''பதுளையிங்க''

''அப்ப வாச்சுப் போச்சு'' என்று மனத்திற்குள் நினைத்தபடி சவிரிமுத்தர் தொடர்ந்தார்.

''அப்பா.... அம்மா... இல்லையோ...?''

''அப்பா செத்துப் போட்டாரு. அம்மா, தங்கச்சி தோட்டத்திலே வேலை செஞ்சிக்கிட்டு இருக்கிறாங்க.''

''ஏன் உனக்குத் தோட்டத்தில வேலை செய்யப் பிடிக்கேல்லையா?''

''...............''

''என்னோட வீட்டுக்கு வாறியா...? உனக்குச் சாப்பாடு தந்து உன்ர வீட்டுக்கும் காசு அனுப்பிறன்''

- தயக்கம்.

''ம்... சொல்லன்''

''சரியிங்க....'' அவன் சம்மதித்து விட்டான்.

பெருமாள் வீட்டுக்கு வந்தபோது சம்மாட்டி சவிரிமுத்து சாதாரண சவிரிமுத்துவாகத்தான் இருந்தார். பெருமாள் வீட்டில் எடுபிடி வேலைகளைக் கவனித்ததுடன் வலையில் பிடித்து விற்றது போக எஞ்சிய மீன்களைக் கருவாடு போடுதல், ஐஸ் போட்டு வைத்தல் போன்ற வேலைகளையும் கூட இருந்து செய்வான்.

அந்தத் தெருப்பிள்ளைகள் எல்லாரும் அவனுக்குச் சிநேகிதர்கள். அவனுடைய வயதுக்கு மூத்த 'அனுபவ' அறிவும், அதனால் அவன் பேசும் பெரிய விடயங்களையும் ஆச்சரியத்துடன் கேட்பார்கள், கூட விளையாடும் சிறுவர்கள். எப்போதாவது அவர்களுக்குள் சண்டை மூழும். அவனைப் பார்த்து ''கள்ளத்தோணி'' என்று பட்டம் சொல்லுவார்கள். ஆனால் அவன் அந்த வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவன்போல உண்மையில் அவனுக்குப் புரியாமல் கூட இருக்கலாம் - பேசாமல் இருப்பான். ஆனால் 'கரிக்கோச்சி' என்று மட்டும் அவனை யாரும் பேசிவிட்டால் போதும் கோபம் தலைக்கேற, மூர்க்கத்துடன் - சொன்னவனை வளைத்துப் பிடித்து முதுகில் ஒரு அறை கொடுக்காமல் அடங்கமாட்டான். பற்களை 'நற நற'வெனக் கடித்துக் கொண்டு பெரிய விழிகளைப் பயங்கரமாக உருட்டுவான். வாயில் வந்த தூசண வார்த்தைகளை எல்லாம் கொட்டிக்கொள்வான்.

சிலவேளைகளில் துண்டு பீடிகளைப் பொறுக்கி வீட்டுக் கொல்லைப்புறத்தில் நின்று குடிப்பதைச் சவிரிமுத்தர் கண்டிருந்தாலும் எதுவும் சொல்வதில்லை. ஏதாவது ஏசினால் ஓடிப் போய்விடுவான் என்ற பயம். அவருக்கு அவனது சுறுசுறுப்பும் பிடித்திருந்தது.

சில நாள்களில் பெருமாள் சவிரிமுத்துவுடன் கடலுக்குப் போகத் தொடங்கிவிட்டான். தோணியில் பெருமாள் கால் வைத்தவேளை 'விடுவலையில்' கயல் மீன் அள்ளிச் சொரிந்தது. சில வருடங்களிலேயே சவிரிமுத்து பல லட்சம் பெறுமதியான 'மிசின்' தோணிகளுக்கும், நைலோன் வலைகளுக்கும் அதிபதியாகி ஊரில் பெரிய சம்மாட்டி ஆகிவிட்டார்.

மலைப்பாறையில் பிறந்து கடல் உவரில் ஊறிய பெருமாளின் உடல் உருண்டு திரண்டு தசைக்கோளங்கள் புடைத்து நிற்கும் பருவத்தை எட்டி விட்டான் பெருமாள். அவன் உழைத்த பத்து வருடங்களிலும் வயிறு நிறையச் சாப்பாடு, ஒரு நாளைக்கு இரண்டு கட்டு பீடி, ஞாயிற்றுக்கிழமைகளில் சினிமா பார்க்கக் காசு... இவைதான் அவன் உழைப்புக்குக் கிடைத்தவை.

பத்து வருடங்களாகத் தாய் சகோதரியைக் காணாமல் மறந்திருந்த பெருமாளுக்குச் சில நாள்களுக்கு முன் திடீரென ஏனோ ஊருக்குப் போக வேண்டுமென்று மனம் பேதலித்தது. வேட்கை கொண்ட மனத்தின் விருப்பத்தைச் சம்மாட்டியாரிடம் வெளியிட்டு, ஐநூறு ரூபா காசு கேட்டான். சுரண்டிப் பிழைத்துச் சொகுசாக அனுபவித்துப் பழக்கப்பட்டுவிட்ட சவிரிமுத்துவுக்கு இது பேரிடியாகிவிட்டது. பெருமாள் செய்யும் வேலையின் பழு, அவனை இழந்தால்... அவன் திரும்பி வராவிட்டாலும்...? அதை நினைத்தும் பார்க்கக்கூட முடியவில்லை. இதனால் பல நாள்களாகக் கடத்தி வந்தார்.

ஒவ்வொரு நாளும் பெருமாளின் ஊமை முணுமுணுப்பு இரைச்சலாகி வெடித்தது. ஒருநாள் ஊதியம் எதுவுமின்றியே வெளியேறி விட்டான்.

அடுத்தநாள் சவிரிமுத்துவின் 'பரம விரோதி' பேதுருவின் 'நைலோன்' வலையில் சேர்ந்துவிட்டான், என்ற செய்தியைச் சவரிமுத்து அறிந்தபோது அதிர்ந்தே போய்விட்டார்.

- அந்தப் பெருமாள் இப்பொழுது பொலிஸில்.

''என்ன சம்மாட்டியார் கனக்க யோசிச்சுக்கொண்டிருக்கிறீங்க''

அப்பொழுதுதான் வாசல் படியைத் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்த குத்தகைக்காரன் யோனின் உரத்த குரலைக் கேட்டதும் சிந்தனையில் இருந்து சவிரிமுத்து விழித்துக் கொண்டார்.

''ஓ... குத்தகைக்காரரோ.... வா வா நீரும் கொஞ்சம் எடும்.'' ஈசிச்சேருக்கு அடியிலிருந்த கள்ளை எடுத்து இன்னொரு கோப்பைக்குள் ஊற்றி அதைக் குத்தகைக்காரரிடம் நீட்டினார்.

''என்ன விடயம் குத்தகை... இந்த மத்தியான நேரத்தில'' சவிரிமுத்து வினாவினார்.

''ஒண்ணுமில்ல சம்மட்டியார்... நேற்று சுவாமியார் கூட்பிட்டு இந்த முறை பெருநாள் நல்ல முறையில கொண்டாட வேணும் எண்டு சொன்னார்.

''ஓ... அதுக்கென்ன... சிறப்பாகச் செய்வம்...''

சொல்லிக்கொண்டே சவிரிமுத்து கோப்பை முழுவதையும் காலி செய்து விட்டு, மறுபடியும் கோப்பையை நிரப்பினார்.

குத்தகைக்காரர் மீண்டும் தொடர்ந்தார்.

''இந்தமுறை வழமைபோல கோயில் சோடினைகள், வெடி, மத்தாப்பு எல்லாம் உங்க பொறுப்பு...'' குத்தகைக்காரர் இப்போ; தானே போத்தலை எடுத்து நிரப்பிக் கொண்டார்.

''அதுக்கென்ன இந்தமுறை வாற ஒரு கிழமை உழைப்பை அப்படியே ஒதுக்கிவிடுறன்.''

கோப்பையை நிரப்புவதும் வெறுமையாக்குவதுமாய் சில நிமிடங்கள். சவிரிமுத்துவுக்குச் சற்று ஏறிவிட்டது. குத்தகைக்காரர் நிதானத்துடன் பேசினார்.

''ஒரு விடயம் கேள்விப்பட்டியளோ... உங்களை விட்டுப்போட்டு பேதுருவட வலைக்குப்போன அவன்தான்... பெருமாள்... அவனைக் கள்ளத்தோணியெண்டு பெட்டிசம் போட்டுப் பொலிசட்டைப் பிடிச்சுக் கொடுத்துப் போட்டாங்களாம் ஆரோ....''

''ஓம் ஓம்... நானும் வழியில பாத்தன், பாவம் பெருமாள். நல்ல பெடியன்.'' சவிரிமுத்து அரை மயக்கத்துடன் அனுதாப வார்த்தைகளைக் கொட்டினார்.

''அப்ப நான் வரப்போறன் சம்மாட்டி'' என்று கூறிக்கொண்டே குத்தகைக்காரர் எழுந்து மெதுவாக நடந்தார்.

சவிரிமுத்து ஒரு நமட்டுச் சிரிப்புடன் அண்ணாந்து பார்த்தார். பருந்துகள் எதையோ தேடிப்பறந்து கொண்டிருந்தன.

***(நன்றி 'வலை' சிறுகதைத் தொகுதி)***

## சொற்சிலம்பம் - போட்டி இல:72

| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | | | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | ■ | 14 |
| ■ | | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |
| 22 | | | | | | ■ | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1. பாவனை பண்ணல்/ நடித்தல்.
2. இரும்பில் பிடிப்பது.
3. ஒரு பண் வகை/ இராகம்.
4. உடலுக்குக் கேடு விளைவிக்கும் ஒரு பழக்கம்.
5. கவிதை/ பதிகம்.
6. இந்த ஆயுதத்தைப் பிரயோகிப்பதில் பேர் போனவன் விஜயன்.
9. பல்வேறு வகை ரகம்.
12. நிறுவனம்
14. வெள்ளையடிக்கவும் உதவும்/ தாம்பூலத்திலும் சேர்க்கப்படும்.
15. முல்லைக்கு தேர் கொடுத்த வள்ளல்.
16. நினைக்க.
17. உங்களுடையது.
18. இலையைத் தாங்கி நிற்பது.
19. காட்டுமிருகம்/சிவபூசையிலும் நடுவில் புகுந்துவிடுமாமே!
21. வீதம் கணக்கிடுவதுடன் பொருந்தும்/ நூறு என்பதைக் குறிக்க முன்னால் சேர்த்துக் கொள்வது.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*

*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 72**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 12.08.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல. 72 இல் வெற்றிபெறுவோர்களது விபரம் 16.08.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

### இடமிருந்து வலம்

1. பந்தோபஸ்து/காவல்.
5. பாவம் செய்தவன்.
7. சேரும்/ இணையும்.
8. உதவி செய்யாமல் விடுதல்.
10. போதனை செய்தல்.
11. சண்டை
13. தங்களுடையது.
15. தாய் ஊட்டுவது.
16. இலக்கம்/ கண் எனத் தகுந்ததில் இதுவும் ஒன்று.
17. கொடையாளன்.
19. திரௌபதி கண்ணனை உதவிக்கு அழைத்தது இப்படி.
20. இது ஒரு குரங்கு.
21. தஞ்சம் எனப் புகுவது.
22. பெருக்கவும் கூட்டவும் உதவும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலனோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 70 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**
(1)கதிர்காமம் (6) வடு (7)தடு (8)ஆடு (9)சம்பல் (11)அழகு (12)ஈகம் (13)அவசரம் (16) அந்தரி (17)பாதம் (19)சதாம் (20)சிவப்பு (21) திதி (22)அலம்பு.

**மேலிருந்து கீழ்**
(1)கவசம் (2)திடும் (3)காதல் (4)மடு (5)கடுகு (8)ஆழம் (10)பர்வதம் (11)அகம்பாவம் (12)ஈர (13)அந்தாதி (14)சரி (15)அம்பு (16)அசதி (18) தப்பு (20) சில.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 70 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷடசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** செல்வன் ஞா. அன்ரனி தர்ஷிக்
4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை, மானிப்பாய்

**2 ஆம் பரிசு** பி. துவாரகன்
செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** திருமதி இ. சண்முகலிங்கம்.
வில்வந் தோட்டம், வதிரி, கரவெட்டி.

பரிசுக்கு உரியோராகத் தேர்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **தி. கஸ்தூரி**
மிருசுவில் நலன்புரி நிலையம்,
மிருசுவில்.

(2) **திருமதி நா. இராசேந்திரம்**
1/4 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(3) **எஸ். என். ஜே. மரியாம்பிள்ளை**
645/1, கடற்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

(4) **செல்வி ஸ்ரீ. துஷாரா,**
15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்

(5) **திருமதி ஆர். பத்மநாதன்**
பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுப் பழக்கத்தால் தமது வாழ்க்கையைத் தொலைப்போர் குடும்பத்தினருக்கும் உதவாது தாமும் நிர்க்கதியாகின்றனர்

மதுப்பழக்கத்தால் மனிதர்கள் தமது வாழ்க்கையைத் தொலைப்பதுடன் தம்மை அண்டி வாழும் குடும்பத்தவர்கள் மற்றும் உறவினர்களுக்கும் பயனற்றோராகப் போய்விட நேர்கிறது என்கிறார் யாழ்.போதனா வைத்தியசாலையில் பொது வைத்திய நிபுணராகப் பணிபுரியும் டாக்டர் திருமதி எஸ்.உதயகுமாரன். அவருடனான பேட்டி இங்கு தரப்படுகின்றது.

*கேள்வி:* எந்த வயதினர் கூடுதலாக மதுப் பாவனைக்கு உட்படுகின்றனர்?

*பதில்:* கூடுதலாகப் பாடசாலையில் இருந்து விலகி வேலையற்று இருக்கும்போது அவரவரின் மனநிலை காரணமாகவும், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவும் மதுப் பாவனைக்கு அடிமையாகும் நிலை ஏற்படுகின்றது. சூழ்நிலையைப் பொறுத்து இத்தகைய நிலை படிப்படியாக அதிகரித்துக் கொண்டு போகின்றது.


டாக்டர் திருமதி எஸ்.உதயகுமாரன்

*கே:* மது பானம் பாவிப் பவர் எவ்வாறு அதற்கு அடிமையாகின்றார்?

*ப:* தொடக்கத்தில் விசேட கொண்டாட்டங்களில் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்த ஆரம்பித்துப் பின் இது ஓர் உற்சாக நிலையைக் கொடுப்பதால் அடிக்கடி இதனை நாடும் நிலை ஏற்பட்டு, சக நண்பர்களின் உந்துதலாலும், மனதைக் கட்டுப்படுத்த இயலாது போகும் நிலையிலும் மதுப் பழக்கத் துக்கு அடிமையாகின்றார்கள்.

*கே:* இவ்வாறு மதுப்பழக்கத்துக்கு அடிமையாவதற்குரிய காரணிகள் உண்டா?

*ப:* குடிவகைக்கு அடிமையான பெற்றோர்களின் பிள்ளைகளிடம் குடிவகைக்கு அடிமையாகும் நிலை மற்றையோரை விடக் கூடுதலாக உள்ளது.

மனத்தாக்கங்கள், மனக்கவலைகளைத் தவிர்க்க எனக் காரணம் கூறி ஆரம்பத்தில் சிறிது சிறிதாகத் தொடங்கிப் பின்னர் தொடர்ந்து குடிவகைக்கு அடிமையாகி விடுவர். மனநோய் உள்ளவரிடம் இவ்வாறு குடிவகைக்கு அடிமையாவது கூடுதலாகக் காணப்படுகின்றது.

அத்துடன் மதுவகைகள் எதுவித கட்டுப்பாடும் இன்றி இலகுவாகக் கிடைக்கக்கூடியதால் இது நிலைமையை மேலும் அதிகரித்து விடுகின்றது.

*கே:* இங்கு கிடைக்கும் மதுபான வகைக்கும் வெளிநாட்டு மதுபான வகைக்கும் வித்தியாசம் உண்டா?

*ப:* வெளிநாட்டு மதுபான வகைகளில் உடம்பிற்கு தீமை விளைவிக்கக் கூடிய 'அற்ககோலின்' அளவு குறைவாகவே உள்ளது. இதனால் அளவாகப்பாவிப்பவர்களுக்கு அவை பெரிய அளவில் தீங்கு விளைவிப்பதில்லை.

இங்கு கிடைக்கும் கசிப்பு, கள்ளு, சாராயம் என்பவற்றில் 'அற்ககோலி'ன் வீதம் அதிக மாக இருப்பதால் அவை கூடிய தீங்கு விளை விப்பதாகவே உள்ளன.

*கே:* இவை எவ்வாறு உடம்பில் தீமையை ஏற்படுத்துகின்றன?

*ப:* தீங்கு பலவிதமாக ஏற்படுகின்றது. தொடர்ச்சியாக மதுபானம் பாவிப்பவர் சில காலத்தின் பின் அதற்கே முதன்மை கொடுத்து சாப்பாட்டு முறைமையை அலட்சியம் செய்கிறார். இதனால் போசாக்கின்மையும் விற்றமின் குறைபாடுகளும் ஏற்படுகின்றன.

இவை நரம்புத் தொகுதியைப் பாதிப்படையச் செய்வது மட்டுமன்றி இருதயப்பாதிப்பு, தசைத்தொகுதிகளின் பாதிப்பு என்ற வகையான பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றன. கூடிய பாதிப்பு ஈரலில் ஏற்படுவதால் பலவித உபாதைகளால் நோயாளி கஷ்டப்படுவார்.

*கே:* குடிபாவனையால் ஈரல் பாதிப்புக்கு ஆளாகும் ஒருவர் எத்தகைய நிலையில் வைத்தியசாலைக்கு வருகிறார்?

*ப:* ஈரல் பாதிப்புறுவதால், உடற்திரவம் வயிற்றினுள் தேங்கி வயிறு வீக்கமடை தல், கால் வீக்கமடைதல் என்பன ஏற்படும். கடைசி நிலையில் நோயாளி இருக்க, படுக்கமுடியாமல், மூச்செடுக்க முடியாமல் கஷ்டப்படுவார்.

## இளவயதினர் வாக்குமாறாட்டம், தன்னிலை மறத்தல் ஆகிய பாதிப்புக்களால் பரிதாபத்துக்குரிய அவல நிலைக்கு....!

இந்நிலையை தொடக்கத்தில் ஓரளவு மருந்து மூலம் கட்டுப்படுத்தலாம். நாளடைவில் எத்தகைய மருந்துகளாலும் கட்டுப்படுத்த முடியாமல் போகும். இந்நிலையில் ஈரல் மாற்றுச் சத்திரசிகிச்சையே வழி. மிக நுணுக்கமான, செலவு அதிகமான சத்திர சிகிச்சை வசதி இங்கு இல்லை. வெளிநாடுகளிலேயே உள்ளது.

இதைவிட ஈரல் பாதிப்புற்று இரைப்பையில் இரத்த நாளங்கள் வெடிக்கும் நிலையும் ஏற்படுவதுண்டு.

*கே:* இவற்றைவிட வேறுவிதமான ஈரல் பாதிப்பும் உண்டா?

*ப:* குடிவகை அளவினைப் பொறுத்தும், நோயாளியின் உடல் நிலைமையைப் பொறுத்தும் ஈரல் பாதிப்பு ஏற்படும். ஆரம்பத்தில் ஈரல் அழற்சி ஏற்படும். இது கிட்டத்தட்ட செங்கமாரி வருத்தம் போலத் தென்படும். கண் மஞ்சள் நிற மாதல், சலம் கடும் மஞ்சளாகப் போதல், வலது மேல் வயிற்றில் நோவு, சத்தி எடுத்தல் என்பன இதன் அறிகுறிகள். இதன் பின்பும் மதுபானம் பாவித்தல் தொடருமாயின் ஈரல் வீங்கத் தொடங்கும். அத்துடன் ஈரலின் தொழிற்பாடும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கும். கடைசியில் ஈரல் கலங்கள் எரிந்து சுருங்கத் தொடங்கிவிடும். இதன் பின்னர் வயிறு மற்றும் உடல் வீக்கம், இரத்த வாந்தி என்பன ஏற்படும்.

*கே:* இரத்தவாந்தி எப்படி ஏற்படுகின்றது? இத்தகைய நோயாளிகளுக்கு என்ன நடக்கும்?

*ப:* இரத்தவாந்தி என்பது இரைப்பையினுள் இரத்த நாளங்கள் வெடிப்பதால் ஏற்படுகின்றது. வைத்தியசாலைக்கு வருபவர்கள் மிகவும் கடும் இரத்தப்போக்கினால் அவதியுற்றே வருகின்றனர். கூடியளவு இரத்தம் கட்டி கட்டியாக திடீரென வாந்தியெடுப்பது நோயாளிக்கும் உறவினருக்கும் மிகவும் பயங்கரமான அனுபவமே. இவ்வாறு இரத்தம் வெளியேறிய உடன் இவர் இரத்தமின்றி மிகவும் வெளிறிப்போய் பலவீனமான நிலையை அடைவார். அப்போது உடலில் இரத்த அழுத்தம் குறைந்து சிறுநீரகத் தொழிற்பாடு குறையத் தொடங்கும்.

*கே:* இவ்வாறு இரத்தவாந்தி எடுக்கும் நோயாளிகள் எத்தகைய விதத்தில் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்?

*ப:* அவர்களது இதயத் துடிப்பு, குருதியமுக்கம், சிறுநீரக மற்றும் மூளைத் தொழிற்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன. அத்துடன் இரத்தம் ஏற்றப்பட்டு இரத்தம் மேலும் கசிவதைக் கட்டுப்படுத்த மருந்து ஏற்றப்படுகின்றது. ஊசி மூலம் இரைப்பையிலுள்ள இரத்தக்குழாய் சுருங்கச் செய்யப்பட இரத்தக் கசிவு நின்றுவிடும்.

*கே:* இவ்வாறு இரத்த வாந்தி எடுப்பதனால் வேறு பாதிப்புகளும் ஏற்படுமா?

*ப:* இரத்தவாந்தி மிகக் கூடுதலாகவும் கட்டுப்படுத்த முடியாமலும் இருப்பின் நோயாளியின் சிறுநீரகத் தொழிற்பாடு குறையத் தொடங்கி உடலில் கழிவுப்பொருள்கள் தேங்கத் தொடங்கும். மூளையின் செயற்பாடு குறையத் தொடங்கி மீண்டும் மீண்டும் வலிப்பு ஏற்படுவதுடன் நோயாளி மயக்க நிலைக்குச் சென்றுவிடுகிறார்.

*கே:* மது பாவனையினால் ஈரல் பாதிப்புற்று அறிவிழக்கும் நிலை (Coma) முற்றும் குணமாக்கக் கூடியதா?

*ப:* அது ஈரல் பாதிப்புத் தன்மை எந்த அளவானது என்பதைப் பொறுத்தது. ஈரல் பாதிப்புத் தன்மை மிகவும் கூடியதாயிருப்பின் அறிவு திரும்பாலேயே நோயாளி மரணிக்க நேரிடலாம்.

*கே:* மதுபாவனை எவ்வாறு நரம்பு மண்டலத்தைப் பாதிக்கின்றது?

*ப:* கூடிய மது அருந்தும்போது இரத்தத்தில் சீனியின் அளவுகுறைவதனால் ஒரு நிலையில் நோயாளிக்கு அறிவு மயக்கம், வலிப்பு என்பன ஏற்படும். அந்த நேரத்தில் உடனடியாகச் சிகிச்சையளிப்பின் அவர் பழைய நிலைக்குத் திரும்புவார். அல்லாதுவிடில் மீண்டும் மீண்டும் வலிப்பு ஏற்பட உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படலாம்.

குடிபோதையில் விழுபவர்களுக்கு மூளையில் இரத்தக் கசிவு ஏற்படலாம்; இதனால் நோயாளிக்கு அறிவு மயக்கம், வலிப்பு என்பன ஏற்படலாம். இவ்வாறு இரத்தக்கசிவு இருப்பின் மண்டைஓட்டில் துழை போட்டு இந்த இரத்தக் கசிவு வெளியே எடுக்கப்படுகின்றது. இரத்தக் கசிவானது மூளையின் உட்பகுதியில் இருக்குமாயின் அதை எடுக்கமுடியாமல் போகும் நிலையில் உயிரிழப்பு நிகழலாம்.

சிலவேளை பாரிசவாத நோய் வந்தவர் போலாகி ஒருபக்க கை, கால் செயல் இழத்த நிலை ஏற்படும். சிலருக்குப் பின் மூளை பாதிக்கப்படுவதால் மிகவும் தள்ளாட்ட நிலை, எதுவும் செய்யமுடியாத நிலை ஏற்படும். எதற்கும் இன்னொருவரில் தங்கியிருக்கும் நிலை ஏற்படும்.

*கே:* இவ்வாறு மதுபாவனைக்குட்டவர்களின் மனநிலை எவ்வாறு பாதிக்கப்படுகின்றது?

*ப:* தொடர்ச்சியான மதுபாவனைப் பழக்கம் உள்ளவருக்கு மது இன்றி இருக்க முடியாத நிலை ஏற்படும். அதாவது இரத்தத்தில் சேர்ந்த மதுசார அளவு குறையத் தொடங்க அவருக்கு வியர்வை, நடுக்கம், ஒருபத்தற்ற நிலை, மன அமைதியின்மை ஏற்படுகின்றது. இதனால் அவர் மீண்டும் மதுவை நாடுகிறார்.

தொடர் மது பாவனையாளருக்கு, சாதாரணமாக 75 வயதிற்கு மேல் வரும் வாக்கு மாறாட்டம், மறதி, தன்னிலை மறத்தல் என் பன மிக இளவயதிலேயே ஏற்பட்டுவிடும். அதே போன்று வேலை இழத்தல், பணமின்மை போன்ற காரணங்களால் சமூகவிரோதச் செயல்களான களவு, கொலை, கொள்ளைகளிலும் ஈடுபடத் தூண்டுகிறது.

*கே:* இவ்வாறான நிலைகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

*ப:* பொது மக்களுக்கு மதுப்பாவனை, அதன் பாதக விளைவுகள், தாக்கங்கள் என்பன பற்றி அறிவூட்டப்படவேண்டும். மதுபான வகை மிக எளிதில் கிடைப்பதைத் தடை செய்யவேண்டும். ★

நேர்காணல்: பஞ்சவர்ணன்

ஜே.எல்.மொரிசன் சன்ஸ் என்ட் ஜோன்ஸ் (சிலோன்) லிமிடெட் என்பது சர்வதேச அளவில் புகழ்பெற்ற பல விற்பனைப் பண்டங்களை இலங்கையில் அறிமுகப்படுத்த உதவிய கூட்டு நிறுவனமாகும். இவற்றில் வீட்டு உபகரணங்கள், தனிநபர் பராமரிப்புப் பொருட்கள், அழகு சாதனங்கள், பிள்ளைகளுக்கான பண்டங்கள் மற்றும் உணவு வகைகள், ஒளியூட்டல் கருவிகள் போன்றவை அடங்கும். இந்த நிறுவனம் பலதுறைகளிலும் கால்பதித்து வலுவுடன் திகழ்வதால், பிரபலமான உற்பத்திகளை பரந்தளவில் சந்தைப்படுத்தக் கூடியதாகக் காணப்படுகிறது.

தற்போது வடக்கில் சந்தைகள் திறக்கப்படுவதால், யாழ்ப்பாண குடாநாட்டில் வசிக்கும் தகைமையுள்ள தனிநபர்களுக்கு கீழ்வரும் தொழில்வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

வடக்கின் அபிவிருத்திக்கான பாதையில் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள

துறைசார்ந்த தலைவர்கள் (நிறைவேற்றுத்தர களநிலை விற்பனை அதிகாரிகள்)

தொழில் விபரம்
நிர்ணயிக்கப்பட்ட சில்லறை சந்தையில் வாடிக்கையாளர் மத்தியில் கம்பனியின் பரந்த அளவிலான பொருள் வகைகளின் விற்பனையை ஊக்குவித்தலும், தொடர்ச்சியான அடிப்படையில் விற்பனை இலக்குகளை அடைதலும்.

தேவைகள்
சிரேஷ்ட விற்பனைப் பிரதிநிதியாகவோ, மேற்பார்வை தரத்திலோ மூன்றாண்டு அனுபவத்துடன் வேகமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருள் சார்ந்த பின்னணியில் பரிச்சயமுள்ளவராக இருத்தல். போட்டித்தன்மையை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இயல்பிலேயே விற்பனையில் ஆர்வமுள்ளவராகவும், தலைமைத்துவ ஆற்றல் மிக்கவராகவும் குழுவாக இயங்கக் கூடியவராக காணப்படுதல். சிறந்த கல்வித்தகைமையுடனும், தம்மை வெளிப்படுத்தும் ஆற்றலுடனும் 32 வயதுக்கு கீழ்ப்பட்டவராக இருத்தல். சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நல்ல தேர்ச்சியும் ஆங்கிலத்தில் புலமையும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும். நீங்கள் சந்தையில் நீண்ட நேரம் செலவழித்து கூடுதலாக பயணம் செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுவதால், வாகன அனுமதிப் பத்திரம் வைத்திருப்பதும் அவசியமாகிறது.

கம்பனி விற்பனைப் பிரதிநிதிகள்

தொழில் விபரம்
நிர்ணயிக்கப்பட்ட சில்லறை சந்தையில் வாடிக்கையாளர் மத்தியில் கம்பனியின் பரந்த அளவிலான பொருள் வகைகளின் விற்பனையை ஊக்குவித்தலும், தொடர்ச்சியான அடிப்படையில் விற்பனை இலக்குகளை அடைதலும்.

தேவைகள்
கம்பனி விற்பனைப் பிரதிநிதியாகவோ, பிராந்திய விற்பனைப் பிரதிநிதியாகவோ தமக்கு நிர்ணயிக்கப்படும் விற்பனை இலக்குகளை அடையும் அபிலாஷையுடன் வேகமாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவமுள்ள துடிப்பான, சுயமாக இயங்கக்கூடிய தனிநபர்கள். வெற்றி மனப்பான்மையுடன் இயங்கும் குழுவில் சிறப்பாக பங்களிப்பு வழங்கி, விநியோகத்தருடன் நெருங்கி பணியாற்றுவதன் மூலம் பிரதேசத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். ஜீசீஈ சாதாரண தர தகைமைகளுடன், ஆங்கிலத்தில் தேர்ச்சியுடன் 30 வயதிற்கு கீழ்ப்பட்டவராக காணப்பட வேண்டும். நாட்டின் எந்தப் பாகத்திலும் வேலை செய்யக்கூடியவராக இருப்பதும் அவசியம்.

பயிலுனர் கம்பனி விற்பனைப் பிரதிநிதிகள்

பள்ளிப்படிப்பை பூர்த்தி செய்து சந்தைப்படுத்தல் தொழிலில் நாட்டமும், ஆக்கபூர்வமான அணுகுமுறையும் கொண்டவர்களில் நாம் ஆர்வம் கொண்டுள்ளோம். நாட்டின் எந்தவொரு பாகத்திலும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட ஆர்வமுடையரவாக இருத்தல் அவசியம். ஜீசீஈ சாதாரண தரத்தில் ஆங்கில, கணித பாடங்கள் அடங்கலாக குறைந்தபட்சம் ஐந்து திறமை சித்தி, ஜீசீஈ உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகள், விளையாட்டில் ஈடுபாடு ஆகியவை மேலதிக தகைமைகளாகும். சகல விண்ணப்பதாரிகளும் சிறந்த தொடர்பாடல் ஆற்றல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

துரிதமாக முன்னேறக்கூடிய சிறந்ததொரு தொழில் பின்னணியும், வாய்ப்புக்களும் அடங்கலாக பதவிக்குப் பொருத்தமான கொடுப்பனவுகளும் வழங்கப்படும். உங்களது முழுமையான சுயவிபரக் கோவையுடன், உங்களைப் பற்றிய தகவல் அறியக்கூடிய உறவினர் அல்லாத இரண்டு பேரின் விபரங்களோடு விளம்பரம் வெளியான ஏழு நாட்களுக்குள் தொடர்பு கொள்ளவும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும். யாழ்ப்பாண குடாநாட்டு விண்ணப்பதாரிகள் யாழ் முகவரிக்கும், ஆர்வமுள்ள ஏனைய விண்ணப்பதாரிகள் எமது களனி அலுவலகத்திற்கும் கிடைக்கக்கூடிய வகையில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

Morison's Gripe Mixture, Valmelix, Morning Pride Shaving Cream, Morison's Lacto Calamine, Morison's Baby, KIWI, Brylcreem, GoodKnight, NIVEA, Britannia Biscuits, Garnier, Milna, Wintogeno, Canderel, Hansaplast, Today's, Storck, Sagara Jack Mackerel, Sayura Mackerel, Clensol

J.L. Morison Son & Jones (Ceylon) PLC

மனிதவள முகாமையாளர்
ஜே.எல்.மொரிசன் சன்ஸ் என்ட் ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
620, பியகம வீதி, பெத்தியாகொட, களனி.
தொலைநகல்: 2915782
மின்னஞ்சல்: consumer@jlmorisons.com

விஜயரட்ணம் சிவசுதன்,
ரட்ணம் பார்மஸி என்ட் குரோசரி,
384, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழ் இலக்கியவாதிக்குப் பிரிட்டிஷ் அரசு மானியம் வழங்கிக் கௌரவித்தது

**ஒகஸ்ட் 1920**

வட்டுக்கோட்டை ஆறுமுக உபாத்தியாருக்கு 250 ரூபா மானியம் கிடைத்தது

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த எம்.ஆறுமுக உபாத்தியாயருக்கு அவரது இலக்கிய ஆசிரியப் பணிகளைப் பாராட்டி அப்போதைய பிரித்தானிய அரசு 1920ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 250 ரூபா மானியம் வழங்கியது.

நாற்பதாண்டு கால இலக்கிய ஆசிரியப்பணி புரிந்த ஆறுமுக உபாத்தியாயர் பாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் உட்பட ஆலயங்களில் புராணபடனம் செய்யும் பணியிலீடுபட்டதுடன் பிரசங் கங்களும் செய்துள்ளார்.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே....!**

இவர் எட்டு நூல்களையும் இயற்றியுள்ளார்.

29.07.1920 அன்று வெளியான இந்துசாதனம் பத்திரிகையில் இவரைப் பற்றிய குறிப்பு பிரசுரமாகியுள்ளது.

வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுள்ள வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழறிஞர் சரித்திரம் என்ற நூலில் ஆறுமுக உபாத்தியாயரைப் பற்றிய குறிப்பைக் காணவில்லை. சித்தன்கேணியைச் சேர்ந்த ஆறுமுகப்பாவலர் பற்றி உள்ளது. ஆனால் ஆறுமுகப் பாவலர் 1918ஆம் ஆண்டு காலமானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆறுமுகப்பாவலரின் இலக்கியப்பணிகள் பற்றி பெரிதாக எதுவும் காணப்படவில்லை. ஆறுமுக பாவலரும் ஆறுமுக உபாத்தியாயரும் ஒன்றா, வேறு வேறா என்பது தெரியவில்லை.

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூறுவிலை கோரல் தார் விநியோகம்

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை அலுவலகத்திற்கு தார் கொண்டு வந்து விநியோகிப்பதற்கான கூறுவிலை இத்தால் கோரப்படுகின்றது. 200/லீற்றர்(80/100) கொள்ளளவுடைய தார் பரல் கொண்டு வந்து விநியோகிப்பதற்கு விரும்புவோர் ஒன்றிற்கான தங்களது கூறுவிலையினை 2009.08.07 ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
2009.07.31 (சி860103)

## முன்பள்ளி விளையாட்டு விழா

நல்லூர் முத்தமிழ் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்வியங்காடு இ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

செல்வி சியாமளாதேவி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினர் க.கிங்ஸ்லி கணேசன், யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவன யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.என்.மதிவதனன், கல்வியங்காடு இ.த.க. பாடசாலை அதிபர் திருமதி செ.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (201)

சிவமயம்

## த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தில் சிறப்பு ஆடித் தள்ளுபடி

★சிறுமியர்களுக்கான { பஞ்சாபி வகைகள், சோலி செற் வகைகள்

★பெரியவர்களுக்கான { பஞ்சாபி வகைகள், பிளவுஸ் வகைகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள், தனி ஸ்கேட் வகைகள், தனி பிளவுஸ் வகைகள், சாறி வகைகள்

★பெரியவர் சிறுவர்களுக்கான { சேட் வகைகள், ரவுசர் வகைகள், T.சேட் வகைகள், சோட்ஸ் வகைகள்

மேலும் கல்யாணப்பட்டுப் புடைவை, வேட்டிகள், நவீன டிசைன் சாறிகள், பல வர்ண பிளவுஸ் பீஸ் வகைகள் மற்றும் அனைத்தையும் சிறப்பு ஆடித் தள்ளுபடி விலைக் கழிவில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம். (சி/559978)

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

A LIFE - TIME CHANCE

# STUDY MEDICINE

இரண்டாவது கற்கை அணி ஜூலை 21 ஆம் திகதி பெலாரஸ் வந்து சேர்ந்தது



ஜயன்த சதாநாயகன் கஜேந்திரன், றோயல் கல்லூரி, கொழும்பு. | மத்துமகே டொன் முதித்த மதுஷன் அபேநாயக்க, D.S சேனாநாயக்க கல்லூரி, கொழும்பு. | மொறின் டயானா ஜோசப், மெதடிஸ் மகளிர் உயர் பாடசாலை, யாழ்ப்பாணம். | ஜோர்டன்னா லேஜினியா, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். | பீட்டர் ஆன் ஜெனட் லக்ஷனா, புனித சேவியர் கல்லூரி, மன்னார். | சூரிய ஆராச்சிகே திணிந்து மதுரங்க, ஆனந்தா கல்லூரி, கொழும்பு | சூரிய ஆராச்சிகே விக்ரமரத்ன ஜோதி அருஷா, ராஹுல வித்தியாலயம், மாத்தறை.

MBBS / MD Degree's - recognised by Medical Council's in Sri Lanka, Maldives, USA, UK, Australia WHO & worldwide.

**LITHUANIA** (Schengen & E.U.)
**MD**
Doctor of Medicine
KAUNAS UNIVERSITY OF MEDICINE
6 வருடம் (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் வருடாந்தம் 5500 யூரோ
Engineering, Management Degrees also Available From KAUNAS TECHNOLOGICAL UNIVERSITY

**BELARUS** (Eastern Europe)
**MD**
Doctor of Medicine
VITEBSK STATE MEDICAL UNIVERSITY
6 வருடம் (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் வருடத்துக்கு 3800 டொலர்

**NEPAL**
**MBBS**
Bachelor of Medicine / Bachelor of Surgery
KATHMANDU UNIVERSITY
4½ வருடம் + உள்ளகப் பயிற்சி (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் கிட்டத்தட்ட 750000

Colombo Ads - 077 744 24 25

**PATHE ACADEMY** The People's Academy...
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

For Admissions contact
0773017883 (Tamil)
Vavuniya – Contact
Dr. Ramadas
Medi Clinic.
Tel: 024-2222582.

Overseas Student Placement Department
111-1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06. Tel : 2586418
www.patheacademy.org

## காணி விற்பனைக்கு

பாதாள வைரவர் கோயிலடி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் 4 பரப்புக் காணி "காந்தி இல்லம்" என்னும் பெயருடைய வீட்டுடன் விற்பனைக்குண்டு. விருப்பமுடையவர்கள் மேற்படி விலாசத்தில் இருக்கும் கு.கேதீஸ்வரியுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். (87422)

## விற்பனைக்கு

நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் மூன்று பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0602008577, 0776146434
(87469)

# தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களால் ஜனாதிபதி அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதத்தின் தமிழாக்கம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி
ද්‍රවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණ
TAMIL UNITED LIBERATION FRONT

Telephone: (9411) 2347721
FAX: (9411) 2347721
30/1B, Alwis Place,
Colombo-03. Srilanka.
11.05.2009

மேன்மை தங்கிய மஹிந்த ராஜபக்ஷ,
ஜனாதிபதி,
அலரி மாளிகை,
கொழும்பு-03

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு,

**பாதுகாப்பு வலயத்துக்குள் நடப்பவை உலகை அதிர வைக்கும்**

விடுதலைப் புலிகள் ஒன்றரை லட்சம் மக்களை பணயக் கைதிகளாகத் தடுத்து வைத்திருக்கும் முள்ளிவாய்க்கால் சூனியப் பிரதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் எனக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் பெரும் வேதனையையும் தருகிறது. அவர்கள் தற்போது அனுபவிக்கும் நரக வேதனையை அவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது பட்ட துன்பங்களிலும் பார்க்க மிகக் கூடுதலானதாகும். அவர்களுக்குக் கிடைக்கும் உணவு அவர்களுடைய தேவைகளுக்குப் போதுமானதல்ல. அந்தநிலை குறைந்தளவு உணவுப் பண்டம் வருவதாலா அல்லது விடுதலைப் புலிகள் தம்பங்கை முன்கூட்டியே எடுத்து விடுவதாலா, இல்லாமல் இரண்டும் காரணமாக இருக்கலாம். அதன் பயனரக தாய்மாரும், வயோதிபர்களும் போதிய சத்துணவின்றி வாடுகின்றனர். இந்த நாள்களில் நீண்ட வரிசையில் தம் பங்கு கஞ்சிக்காகக் காத்து நிற்கின்றனர். தாய்ப்பால் ஊட்டும் சக்தி இழந்த தாய்மார்கள் தம் பிள்ளைகளுக்கு புட்டிப் பாலுக்காகப் பல நாள்களாகக் காத்திருக்கின்றனர். பயத்துடனும், பீதியுடனும் வாழும் மக்கள் கூடுதலான நேரத்தை பங்கருக்குள்ளேயே செலவிடுகின்றனர்.

இக்கொடுமைக்கு மேலாக வெசாக் பண்டிகைக்கு மறுதினம் மாலை 5.00 மணிக்கு ஆரம்பித்த ஷெல் தாக்குதல் மறுநாள் காலை 7.00 மணிக்கு அதாவது இன்று முடிவுக்கு வந்தது. இன்று மாலை 5.00 மணிவரை 378 சடலங்களுடன் 1122 படுகாயமுற்றோரும் காணப்பட்டனர். பல குடும்பங்கள் முற்றாக தம் பங்கருக்குள்ளே முடக்கப்பட்டு விட்டனர் எனவும் அறிய வருகிறது. படுகாயமுற்ற பலர் வைத்திய சேவை எதுவுமின்றி கவனிப்பாரற்று மடிந்தும் உள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர்களின் எண்ணிக்கை 378 மட்டும்தானா? அல்லது விடுதலைப் புலிகள் தவிர்த்து வேறு சில ஊடகங்கள் கூறுவதுபோல் ஆயிரக்கணக்கானோரா என்பதல்ல பிரச்சினை. ஒரு நாளில் மிகக் கூடிய மரணங்கள் ஏற்பட்டது யுத்தம் ஆரம்பமானதன் பின்பு இந்நிகழ்வில் தான். விடுதலைப் புலிகளை ஒழிக்க உதவிய மக்களின் எதிர்பார்ப்புக்கும் ஏமாற்றமாக முடிந்தது. அத்துடன் பாதுகாப்பாக இடம்பெயர்ந்தவர்கள் வரவேற்கப்படுவார்கள் என்றும் அவர்கள் நன்றாகக் கவனிக்கப்படுவார்கள் என்றும் அரசு கொடுத்த உத்தரவாதத்தை நம்பிய சர்வதேச சமூகத்துக்கும் பெரும் ஏமாற்றமாக அமைந்தது.



முள்ளிவாய்க்கால் நிலைமை நாளுக்குநாள் கட்டுமீறி வருகின்றது. நாளுக்குநாள் பாதிப்புக்குள்ளாவோரின் எண்ணிக்கை கூடிக்கொண்டு வந்து இன்று அது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. தயவுசெய்து உடனடியாக ஷெல் அடிப்பதையும், துப்பாக்கிச் சூட்டையும் நிறுத்துமாறு பணிக்கவும். விடுதலைப் புலிகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் உங்கள் படையை நிறுத்தி வைக்க உங்களால் முடியும்.

விடுதலைப் புலிகள் தற்போது முற்று முழுதாக பொது மக்களுடன் கலந்துள்ளமையால் அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் பல பொதுமக்களைக் கொல்வதோடு, அதேவேளை பலர் காயமடையவும் செய்யும். கவனயீனமாக நடப்பதால் விடுதலைப் புலிகள் எதையும் இழந்து விடப்போவதில்லை. ஆனால் அரசு இழக்க பல உண்டு. அரசின் நாணயம் உட்பட நான் மீண்டும் தங்களுக்கு வலியுறுத்தி கூறுவது யாதெனில் அவர்கள் மக்களோடு கலந்துள்ளமையால் தங்களுக்குள்ள ஒரே வழி விடுதலைப் புலிகளைத் தாக்குவதை நிறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் உதவியோ அன்றி நீங்கள் விரும்பும் வேறு யார்உதவியோ பெற்று அகப்பட்டுள்ள மக்களை விடுவிக்கும் வரை காலத்தைக் கடத்துவதே. ஐ.நா.சபையின் உதவியை நாடுவதில் எவ்விதத்திலும் தட்டுக் கிடையாது.

வன்னி மக்கள் மீது நான் அக்கறை காட்டுவதால் என்னைத் தப்பாக எண்ணக்கூடாது. நான் நன்கு தெரிந்து என் மீது அதிக பாசம் கொண்டுள்ள மக்கள் அநேகர் இறந்தும், கடுமையாக காயமடைந்தும் தம் கால், கைகளை இழந்தும் உள்ளனர். நான் உங்களுக்கு 10.04.2009 இல் எழுதிய ஒரு கடிதத்தின் ஒரு பகுதியை கீழே தருகிறேன். யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் புலிகள் அப்பாவிப் பொதுமக்களுடன் கலந்து நின்று அவர்களை மனித கேடயமாகப் பாவிப்பதால் ஆபத்துக்குள்ளாவோரின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது....நாம் விடுதலைப் புலிகளை யுத்தக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு இயங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஆனால் அரச படைகளால் அது முடியும். நாளுக்கு நாள் நிலைமை பயங்கரமானதாகவும் மோசமடைந்து கொண்டிருக்கிறது. ஆகவே உங்கள் தலையீடு மேலும் தாமதிக்கலாகாது. ஒரு நாள் உண்மைநிலை உலகறியும் காலம் வரும்போது முழு உலகும் அரசையும் மக்களையும் கண்டித்து நிற்கும். சம்பந்தப்பட்ட அத்தனை பேரும் இதுவரை கூறி வந்ததுபோல் எமது முழு அக்கறையும் மக்கள் மீதே.

பி.கு:- பெருந்தொகையான காயமுற்றோர் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமையால் வைத்தியர்களால் அனைவருக்கும் வைத்தியம் பார்க்க முடியவில்லை. பல காயமுற்றவர்களுக்கு 24 மணித்தியாலங்களாக எதுவித சேவையும் வழங்கப்படவில்லை. வைத்தியசாலை ஊழியர்களில் அரைவாசியினரின் வீடுகளும் தாக்கப்பட்டமையால் கடமைக்கு வரவில்லை.

நன்றி.

வீ.ஆனந்த சங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி.

**உங்களுக்குக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்களிப்பீர் உதய சூரியனுக்கே!**
**அகிம்சையின் அடையாளம் உதயசூரியன்.**

இவ்வாறான கோரிக்கைகள் எவராவது முன் வைத்தனரா?

# தமிழர் விடுதலைக் கூட்டணி ✕


# வீ. ஆனந்தசங்கரி ✕

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study in UK

**University of Salford**
A Greater Manchester University
www.salford.ac.uk

**SPETEMEBER 2009**



Study in Manchester with one of the UK's most enterprising traditional universities, Ranked Top 10 for Teaching Quality, Top 1/3 for Research,and now short-listed for the World's Top #500 Universities ranking due later this year.

The University has a wide range of outstanding undergraduate courses, the vast majority of which include a paid placement year, too.

## Courses and subject areas include:

- Aeronautical Engineering
- Biology
- Law
- Life Sciences
- Computing & IT
- Civil Engineering
- Music
- Quantity Surveying
- Built Environment
- Business & Management
- Graphic Design
- Hospitality and Tourism Management
- Construction Management
- Finance & Accounting

**DIRECT ENTRY MAY BE AVAILABLE FOR SOME COURSES FOR THOSE WITH HND,ABE, OR EQUIVALENT QUALIFICATIONS**

MSc's with paid placement option (2 yr route): Managing IT; Project Mgt; Events Mgt and International Tourism Management.
Also Bachelor programmes with placements.

**Scholarships available (up to £ 2000 per year)**

*** Our Services are absolutely free**

எமது அனைத்து சேவைகளும் இலவசம்.
கல்லூரி மற்றும் பல்கலைக்கழக
கட்டணங்கள் மட்டுமே.

**Meet the KMS team (from Colombo) on Wednesday 10.00 am – 04.00 pm at KMS Jaffna Branch.**

**KMS**
KNOWLEDGE MANAGEMENT SYSTEMS
Leading educational consultants and training providers

**KMS- Jaffna Branch - No 140, Temple Road, Jaffna. P.K.Suhanthan MSc - UK - 0777209446**

329, GALLE ROAD, MEEWELLA BUILDING FIRST FLOOR, SOUTHERN WING,COLOMBO-04, SRI LANKA.
Tel: +94 11 2555243, +94 11 2555245 Fax: +94 11 2555244 www.britishstudylink.com

KMS – London Office - 1st Floor, 315, High Street North Manor Park, London – E12 6SL
Tel: 0044208-470-2221, Fax: 0044208-470-1117 Mobile: 00447905038050 (Chief Education Advisor)



# தங்கம் உள்ளே பணம் வெளியே



அதிகூடிய முற்பணம் குறைந்த வட்டி

**தங்கப்பவுணுக்கான முற்பணம்**
24 கரட் தங்கத்துக்கு ரூ. 20,000/-
22 கரட் தங்கத்துக்கு ரூ. 17,500/-

வரிசை இல்லை. முத்திரை வரி இல்லை. ஆவணப்படுத்தல் தொல்லைகளும் இல்லை.

விரைவாக மீட்கலாம். தவணைக்கட்டண வசதி. முழுமையான இரகசியத்தன்மை.

மேலதிகப்பற்று/தனிநபர் கடன்/கடனட்டைகளை விட குறைந்த வட்டி

தெரிவு செய்யப்பட்ட வங்கிக்கிளைகளில் சனி, ஞாயிறு தினங்களிலும் இச்சேவையை பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு:
அழையுங்கள் 2456920

செலான் தங்க நகை அடகுச் சேவை

உங்களுக்கு அவசரமாக பணம் தேவைப்படும் போது
மிகவும் விரைவான தீர்வு செலான் அடகுச் சேவை மட்டுமே!


**செலான் வங்கியிடமிருந்து உங்கள் வைப்புகளுக்கு**
**அதி உயர் வட்டி**

அது மட்டுமன்றி சேமிப்பு மற்றும் ஏனைய வைப்புகளுக்கும் உங்களுக்கு வெகுமதிகள் காத்திருக்கின்றன

MERIT செலான் டிக்கிரி செலான் NRFC

புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் வழிநடத்தலில் புதுயுகத்தை நோக்கி... செலான் வங்கி


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் பத்மநாதன் வீஷ்மானந்தர்

(ஐங்கரன் இசைக்குழு இயக்குநர்)

### வீஸ்மா வருவாயோ

அகவை மூன்றாகி ஓடியது
அகல் விளக்கின் நினை வின்னும் கூடியது
மகனைப் பிரிந்து விட்ட தாயைப் போல் - எங்கள்
மனமே எரிகிறது நீதியின் மேலாய்

உலகின் உன்போன்று கலைஞன் இல்லை
உறவே ஏன் இன்று எம்மோடு இல்லை
கலையின் முகம் காட்டும் கண்ணாடியே - நீ
கலைஞர் எமக் கெல்லாம் வழி காட்டியே

விழியில் நீர் வற்றிப் போனதுன்னால்
''வீஷ்மா வருவாயோ'' மீண்டும் எம் முன்னால்
அழியாக் கலைஞானப் பெரும் சுடரே
ஆசை வருவதற்கு நாம் உன்னுடனே.

புதுப் பொலிவுடன் இளம் கலைஞருடன்
மீண்டும் ஐங்கரன் இசைக்குழுவாய் வலம் வருவோம்.

74, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

ஐங்கரன் இசைக்குழுக் கலைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WORK PERMIT

**NORWAY, ITALY, AUSTRALIA, CANADA**

ஆகிய நாடுகளிற்கான வேலைவாய்ப்பு சம்பந்தமான ஆலோசனைகளுக்கு.

**Ram - 071 4353000**

## WANTED

**VACANCIES EXIST AT NEW UTHAYAN PUBLICATIONS (PVT.) LTD**

*FOR THE FOLLOWING:*

1. Clerk - To work from 12 Noon to 9 p.m.
2. Clerk - Part Time - To work 4p.m. to 9 p.m.
3. Proof Reader - With working experience in a newspaper instituition prefered.
4. Collection Officer

*Qualifications Required*

i. G.C.E. (A/L)
ii) Computer knowledge with Graphic designing/Photo shop
iii) Should be below 35 years except for Collection Officer. Above 35 too would be considered.
iv) Knowledge of English/Sinhala

**Those who possess the above qualifications may apply before 12.08.2009 to:**

**Manager**
*New Uthayan publications Pvt.Ltd.*
*No 361, Kasthuriar Road, Jaffna.*
*Tel & fax 0219933, 9944 & 3837*

### மணமகள் தேவை

Jaffna Hindu, 34 வயது, சுவாதி நட்சத்திரம், M.Sc- Micro Biology, Senior Research Scientific officer, UK Citizen மணப்பெண்ணிற்கு மணமகன் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை, மூன்று சுற்றுக்கிரக பாவம் 20. இது ஒரு திருமண சேவை (www.thaalee. com) profile No. 3840 T.P:

### மணமகள் தேவை

வேலணை இந்து, 33 வயது, விசாக நட்சத்திரம், Own Business, UK Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. 1இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரக பாவம் 30. இது ஒரு திருமண சேவை. (www.thaalee. com) profile No. 5302 T.P: 2520619

### மணமகள் தேவை

Jaffna Hindu, 27 வயது, மிருகசீரிட நட்சத்திரம், B.Sc., Softwear consultent, Australia Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. மூன்று சுற்றுக் கிரகபாவம் 10. இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) profile No 5125 T.P: 2523127

### மணமகள் தேவை

Jaffna Hindu, 36 வயது, சதய நட்சத்திரம், Phd computer Science Researcher, Australia Citizen, vegetarian மணமகனுக்கு படித்த அழகிய பெண் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்றுக் கிரகபாவம் 14. இது ஒரு திருமண சேவை. (www. thaalee.com) profile No. 3806 T.P: 2520619

### மணமகள் தேவை

Jaffna Hindu, 36 வயது, விசாக நட்சத்திரம், CIMA Fully Qualified Accountant, UK PR மணமகனுக்கு பெண் தேவை. 12இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 18. இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) profile No. 2795 T.P: 2523127

### மணமகள் தேவை

Jaffna Roman catholic, 30 வயது, B.Sc. controll Officer at CIBC, Canada citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை, இது ஒரு திருமண சேவை. (www.thaalee.com) profile No. 6400 T.P: 2520619

## நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவினை மறுநாளைக்குப் பிற்போடல்

04.08.2009 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருந்த நல்லைக் குமரன் மலர் வெளி யீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் மறுநாளான 05.08.2009 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

வெளியீட்டு விழாவில் பங்கேற்று முதல்நாள் பிரதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஒப்புதலளித்த பெருமக்கள் அனைவரும் 05.08.2009 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திற்குத் தவறாது சமுகமளித்து முதல் நாள் பிரதியைப் பெற்றுக் கொள்ளுமாறு விநயமாக வேண்டுகின்றோம்.

சிரமத்திற்காக வருந்துகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
(சி/560121)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னுத்துரை பூமணி



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை பூமணி 31.07.2009 வெள்ளிக்கிழமை இரவு 12 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்- ஆச்சிமுத்து தம்பயினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகர் பொன்னுத்துரையின் (ஓவசியர், பெருந்தெருக்கள் திணைக்களம்) அன்பு மனைவியும் பொ. சந்திரலிங்கம் (பிரபல சோதிடர்); திருமதி தி.ரதி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி ச.ரஜனி (ஜனசக்தி இன்சூரன்ஸ், கொழும்பு), Dr.பொ. திருவுடையான்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தி.வாசுகி(லண்டன்), தி.நித்தியன் (லண்டன்), தி.திவ்வியன் (லண்டன்), ச.நித்தியராம் நாராயணன் (லண்டன்), ச.துளசிராம் நாராயணன்(லண்டன்), ச.சங்கரராம் நாராயணன்(A/L மாணவன், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி இ.செல்லம்மா, திருமதி சி.ஞானபூஷணம், காலஞ்சென்றவர்களான திருமதி அ.திரவியம், ச.சண்முகேஸ்வரன் (இளைப்பாறிய அத்தியட்சகர், கடல் கடந்த தொலைத் தொடர்பு,கொழும்பு) மற்றும் பேராசிரியர் சபாஜெயராசா (தலைவர்,கொழும்பு தமிழ்ச் சங்கம்), திருமதி சோ.சாரதாதேவி (கனடா), ச.சிவநேசன் (கட்டட ஒப்பந்தகாரர், உரிமையாளர், அரியதிரவியம் காட்வெயர் ஸ்ரோர்ஸ், இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(02.08.2009) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை, மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.சந்திரலிங்கம் (மகன்)
பிரபல சோதிடர்,கொழும்பு,
உரிமையாளர்: கண்ணன் கிரஷர், இணுவில்.

514/64, றொக்ஸ்ஸி காடின்,
கொழும்பு-06
தொ.பே: 0114926165 (87507)

### பொன்னம்பலம் தியாகராசா

*(முன்னாள் பணியாளர், இ.போ.சபை)*



அரியாலையைப் பிறப்பிடமாகவும், இல.35, இலந்தைக்குளம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தியாகராசா நேற்று (01.08.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் குணவதியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.35, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (87510)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு

திருமதி
**நடேசு பராசக்தி**



பிறப்பு 18 . 04 . 1941
இறப்பு 03 . 07 . 2009

நீங்கள் நடந்த பாதைகளில்
உங்களின் நிழல்கள் நடமாடுவதை
போல ஓர் உணர்வு
எங்கு சென்றீர்களோ
நாம் உங்கள் நினைவுகளுடன்
உறக்கமின்றி உமை நினைத்து
ஒரு மாதம் மறைந்து விட்டதம்மா
எங்கள் உயிருள்ளவரை
உங்களை மறக்கமுடியுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு
அச்சுவேலி. (சி/560113)

கணவர்,
பிள்ளைகள்.

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக 02

சுழிபுரம் கலைமகள் சனசமூகநிலையமும், கலைமகள் முன்பள்ளிபெற்றோர் சங்கமும் இணைந்து நடத்தும் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் லோ.கம்லதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச சபையின் நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204-28)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கடவத்தை நகர எல்லைக்குள் கண்டி வீதியை ஒரு பக்க எல்லையாகக் கொண்ட 26 பேர்ச்சஸ் சதுரக் காணி உடன் விற்பனைக்குண்டு. ஒரு பேர்ச்சஸ் காணியின் விலை 7 இலட்சம் ரூபா.
தொடர்புகளுக்கு: 0777 444500


STUDY IN LONDON
100% Guarantee
ONLY WITH O/L
NO NEED ENGLISH
NO INTERVIEW
தேவையான Document ஒழுங்குகள்
மூன்றே வாரத்தில் விசாவுக் கான ஒழுங்குகள்
பணநீதியான ஒழுங்குகள் (Sponsor)
Intake Aug /Sep
Government Registered colleges only
Sports Management
Business Management
Hospitality Management
Banking and finance
Gem/Jewelry/Arts
Engineering
Building constrution
Computing
Clothing Technology
Cricket coaching
UCAS
Classes conducted by: Dr. Surandraraj M. Anzeer Bsc. UK
Separate classes for girls
INDIVIDUAL CLASSES ONLY
HND,BBA,B.com,BBM,,BA,MA,BEng,LLB,MBBS, MA,MSc,MBA,PhD Tel: 0114 554910 , 07712 50 789 ISO CERTIFIED INSTITUTION

INTERNATIONAL CITY COLLEGE
ENGLISH CLASSES
IELTS SPOKEN DIPLOMA
வெளிநாட்டிலோ, உள்நாட்டிலோ, மேற்படிப்பிற்காகவோ வேலைவாய்ப்புக்காகவோ போக உள்ள மாணவ மாணவிகளுக்கு வயது எல்லையின்றி, பிரசித்தி பெற்ற ஆசிரிய ஆசிரியைகளால் மிகக் குறுகிய காலத்திற்குள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு Visit us: www.icclanka.com
No: 07,W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06, Sri Lanka Tel: 0114 594 104
Opposite To HNB & Sarvanabavan Hotal | 10 METERS FROM GALLE ROAD
UK USA MALAYSIA SINGAPORE INDIA
தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 077 2 955 977
LAWYERS: Mr. M.Zahir Mr. S.Denes Miss . Subasiny
COMMISSIONER FOR COMPANY SECRETARY

யோகட் கப், ஐஸ் கிரீம் கப்,
பேப்பர் கப் பிரிண்ட்டுகளுக்கு.......
அரிசி, பருப்பு, சீனி, தானியவகைகள் பாதுகாப்பாக பொதி செய்யக்கூடிய Poly Sack Bag, பொலித்தீன் Bags,
Hotels / Resturant க்கு தேவையான Lunch Box, Bowls, Drinking Cups மற்றும் அனைத்துப் பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
Specialists in Lunch Boxes & Rice Bags
சகல விதமான பொதிகளுக்கும் தீர்வு.....
RAMS TRADING
மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு
பிரின்ட் செய்த / பிரின்ட் செய்யப்படாத சகலவிதமான ஆடர்களும் பெற்றுக்கொள்ளப்படும்
L.G. 35, Peoples Park Complex, Pettah, Colombo 11. Tel: 2335532, Fax: 2335532




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நல்லைக்குமரன் மலர்' செவ்வாயன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய பெருந்திருவிழாக் காலங்களில் வருடந்தோறும் வெளியிடப்பட்டுவரும் 'நல்லைக்குமரன் மலர்' வெளியீடு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், மாநகர ஆணையாளருமாகிய மு. செ.சரவணபவ தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் மலராசிரியர் ந.விஜயசுந்தரம் நூலை வெளியிட முதற்பிரதியை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அறங்காவலர் சபைப் பிரதிநிதி பெற்றுக் கொள்வார். மலரின் வெளியீட்டு விழாவில் முந்நூறு ரூபாவுக்குக் குறையாத அன்பளிப்பை வழங்கி நல்லைக்குமரன் மலரின் முதல் நாள் பிரதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிகழ்வில் அரச சேவையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்தும் சமூகப் பணியில் முழுமையாக அர்ப்பணித்தும் காலத்தின் தேவையறிந்து சிறப்பாகச் சேவையாற்றிவரும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷைப் பாராட்டி ''யாழ்.விருது'' வழங்கப்படவுள்ளது. (201-111)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.2


நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''மெய்ஞானம் காட்டும் விஞ்ஞானம்'' என்னும் தலைப்பில் சு.விஸ்வநாதனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயஅனுசரணையில் நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் தெய்வீக இசையரங்குநிகழ்வு நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில்இடம்பெற்று வருகின்றது.

நிகழ்வு வரிசையில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30மணிக்குஇசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. பாட்டு - திருமதி செல்வம் நாகராசா, வயலின் - செல்வி ஜனனி நல்லைநாதன், மிருதங்கம் - வி.ரமணா, கெஞ்சிரா - செல்வன் கே.நந்தகுமார். (201)


ஏழாம் திருவிழா

இன்னல்படும் மக்களின் துயரைப் போக்கிட வா முருகா!

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

அண்ணா தொழிலகம்

இணுவில்.



லங்கா அலுமினியம்
இன்டஸ்ரீஸ் PLC

இயற்கையான நிறம், வெண்கலம் பூசப்பட்ட, பவுடர் பூசப்பட்ட (160 நிறங்களில்) அதிஉயர் அலுமினிய கதவுகள், யன்னல்கள், பிரிவினை பகுதிகள் (Partition) கடை முன் பக்கத்தில் (Shop Fronts) உருளக்கூடிய (Roller) கதவுகள் தயாரிப்பாளர்களான

நாம்

இப்பொழுது
யாழ்ப்பாணத்தில்

உங்கள் எல்லாவித அலுமினிய தேவைகளுக்கும்,

விற்பனையாளர்

குளோரி அலுமினியம்,
(GLORY ALUMINIUM)
இல: 96 A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு இலக்கம் : 0777- 686021 / 0777- 543751




## நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்



### நம்பியவர்க் கருள்புரியும் நல்லூரா

வள்ளிதெய்வ மாதர்இரு பாகங்கொண்ட முருகா
புள்ளிமயில் வாகனனே புதுமையுள்ள முருகா
உள்ளமதில் உனைநினைக்கத் துன்பம்போகும் முருகா
வள்ளலேநல் லூரிலிடங் கொண்டவனே முருகா

எல்லைஇலா இன்பந்தரும் சண்முகனே முருகா
நல்லைநகர் அமர்ந்தசிவ பாலகனே முருகா
தொல்லைதரு வினையகல அருளுவாயே முருகா
இல்லைஉனை யன்றிவேறு தெய்வம்இங்கு முருகா.

அம்பிகையாள் தந்தபிள்ளை அருள்பொழியும் முருகா
தும்பிமுகன் தம்பியரே தூயதமிழ் முருகா
நம்பியவர்க் கருள்புரியும் நல்லூரானே முருகா
எம்மிறைவா இடர் தீர்க்கும் இனியவனே முருகா.

மட்டுவில் நல்லதம்பி.

### வாசலுக்கு வரவழியைக் காட்டிடையா!

*காலைக் கதிரவன் கதிர்பரப்ப இருளழியும்*
*நீலமயில் வாகனனே நின்னருளால் துயரகலும்*
*ஆலயத்து மணியோசை அகவிருளை நீக்கிவிடும்*
*வேலேந்தும் வித்தகனே விரைந்தமைதி தந்திடுவாய்.*
*ஓலமிட்டு அழுவோர்க்கு ஒளியேற்றி வைத்திடையா!*
*சீலமுடன் பணிவோர்க்கு சிறப்பதனைக் கொடுத்திடையா*
*நாலுதிக்கும் நம்மவர்கள் படுந்துயரைத் தீர்த்திடையா*
*நல்லூரின் வாசலுக்கு வரவழியைக் காட்டிடையா*

அரியாலையூர் வே.ஐ.குமரதாசன்.

### கோடிமுறை கூறிடுவோம்!

வேதனைகள் சோதனைகள்
போதும் முருகா!
சாதனைகள் செய்ய அருள்
தாரும் முருகா!
மாதணைத்து மயில் மீது
வாரும் முருகா!
மாதர் விழி நீர் துடைக்க
வேணும் முருகா!
வேருடனே வேதனைகள்
நீக்கு முருகா!
ஊருடனே வாழ வழி
காட்டு முருகா!
பாடிடுவோம் உந்தன் புகழ்
பால முருகா
கூறிடுவோம் கோடி முறையுன்
நாமம் முருகா!

திருமதி ஜெ.கந்தவேள்
கொக்குவில்.

### கவலையைத் தீர்த்திட வருவாய் முருகா

உன்னை நினைத்திட முருகா - நெஞ்சம்
ஊறி இனிக்குது முருகா - முருகா
கன்னித் தமிழ் தந்த முருகா - எங்கள்
கவலையைத் தீர்த்திட வருவாய் - முருகா
தீராத வினை தீர்க்கும் முருகா - துயர்
சிறைகாத்த தேவர்தம் குறைதீர்த்த - முருகா
சீரோங்கும் நல்லைப் பதிவாழ் - முருகா
நல்லருள் தந்தெம்மைக் காத்திடும் முருகா

தொல்புரத்தூர் - க.லோகேஸ்வரன்.

### அருள்மழை வேண்டிப் பாடுங்கள்

வண்ணத் தமிழ் தலைவனைப் பாடுங்கள்
வளநகர் நல்லைக் குமரனைப் பாடுங்கள்
வரம்தர வீதியுலாவரும் வேலனைப் பாடுங்கள்
வன்னியில் 'பிரிந்தவர் சேர்ந்திடப் பாடுங்கள்
வருமிடர் தீர அருள் மழை பொழியப் பாடுங்கள்

க.கனகராசா
ஈழநல்லூர்.

### உலா வருகிறான் கதிர்வேலன்

*ஊரெங்கும் மணியோசையாய்*
*உள்ளத்தில் மகிழ்ச்சிவெள்ளமாய்*
*நல்லையிலே கந்தன் உலாவருகிறான்*
*வறுமையின் பிடிபோக்கி - நல்*
*வாழ்வில் தீப ஒளி ஏற்றி*
*நல்லையிலே திருக்குமரன் உலாவருகிறான்*
*சந்தனத்தின் தென்றலிலே*
*அடியவர்கள் குறை தீர்த்து*
*நல்லையிலே கதிர்வேலன் உலாவருகிறான்*

வல்வை மு.ஆ.சுமன்
யா/சிதம்பரக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SALES

Telesonic Table Fans, Stand Fans, Box Fans, Industrial Fans, Ceiling Fans, Wall Fans, Orbit Fans, Ovens, Kettle, Gas Cookers, Mixer Grinders, Blenders, Home Speakers, Irons, Rice Cookers, DVD Players for whole sale & Retail.

Contact Riz wan- 0777 814117, 077 3952516.
Izzy Enterprise (Pvt) Ltd., 155/7, Prince Street, Colombo-11.

(87409)


## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவு

அன்னை மடியில் ★ 06 ★ 11 ★ 1983

ஆண்டவன் அடியில் ★ 02 ★ 08 ★ 2008



## செல்வன் பீற்றர் நிறஞ்சன்

பீற்றர் சரோஸ் அன்புப் புதல்வனாக
பிறந்தாய் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றிலே
மிருசுவில் என்னுமிடத்திலே பிறந்து
மிக மிக பாசமாக வளர்ந்தீரே ராஜா.
ஆறு வயதினில் சம்பத்திரிசியார் கல்லூரியில்
ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தாய் மகனே!
படிப்பை முடித்து பாங்குடனே வளர்ந்தாய்.
பிறநாடு செல்ல மகனே துணிந்தாய் நீ
பட்ட கஷ்டங்கள் எத்தனை எத்தனை!
பாசமுள்ள உறவுகளிடம் உன் துயரம் கூறினாய்
பயணத்தைத் தோற்றுவிட்டாய் செல்வமே மகனே!
பரமனிடம் சென்று ஆண்டு ஒன்று ஆனதே
பதறுகின்றோம்! கதறுகின்றோம்! கண்ணீர் வடிக்கின்றோம்!
பார்க்குமிடமெல்லாம் உன் உருவம் காண்கின்றோம்
உடலால் எமை விட்டு நீ பிரிந்தாலும்
உள்ளங்களில் உறைந்து விட்டாய் எம் புதல்வா
இறைவனின் இன்ப சந்நிதானத்தில் - நீ
இளைப்பாற எந்நாளும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
16, பற்றிமா அவனியூ, மிருசுவில்.


## ஐங்கரன் திருமண சேவை
### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 36வயது, Work permit, visa இல் உள்ளவர். திருவோண நட்சத்திரம். தற்போது கொழும்பில் உள்ளார். தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தொடர்பு : 0771165081 (87496)

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் UK Citizen 29, 32 B.Com. 34 B.Sc. 36, 39 வயது, கனடா Citizen, 31, 35, 40 வயது, பிரான்ஸ் Citizen, 30 வயது, ஜேர்மன் Citizen, 33 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். பதிவுக் கட்டணம் இல்லை. 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு.
லண்டன் ஐங்கரன் தொடர்பு:- 00447535384166, 00447508275863 Fax No : 00442086810701, 00442086720673

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் 35 வயது M.Sc, 34 வயது B.Sc.29 வயது B.Com, 26 வயது B.Sc, கனடா Citizen, 32 வயது M.Sc. 28, வயது B.Sc, அவுஸ்திரேலியா Citizen, 28 வயது Doctor ஆகிய மணமகள்மார் உள்ளனர். தகுந்த பட்டதாரி மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர்.
லண்டன் ஐங்கரன் தொடர்பு:- 00447535384166, 00447508275863 Fax No : 00442086810701, 00442086720673

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட கண்டி வீதிக்கும், கொழும்புத்துறை பிரதான வீதிக்கும் இடைப்பட்ட ஆனந்தன் வடலி வீதி (செபமாலை மாதா கோயிலுக்கு அருகில்) 4 பரப்பு வெற்றுக்காணி உண்டு
தொடர்புகளுக்கு: சத்திய தேவி ஸ்ரீஸ்கந்தராசா, 077 0657483.
69, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

## மணமக்கள் தேவை

லண்டனில் P.R உள்ள, 1978 ஆம் ஆண்டு, கிரபாவம் 5 இல் உள்ள மணமகனுக்கும், 1984 ஆம் ஆண்டு, 8 இல் செவ்வாய், கிரகபாவம் 34 இல் உள்ள மணமகளுக்கும் டாக்டர் அல்லது எஞ்சினியர் மணமக்கள் தேவை.
(87468) தொடர்பு:- 0771619518

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## SALES

Shopping Bags, Grocery Bags, Tulip Bags, Colour, Polythene, Printed Polythene, Lunch Sheet, P.P., LDP. For Whole Sale & Retail.
Izzy Enterprise (Pvt) Ltd., No.67, Dam Street, Colombo- 12.
060 2144677.
Mob- 0777 677952.
(87408)

## HND - மருத்துவ டிப்ளோமா

தாதியம்
ஸ்ரீலங்கா
மருந்தகம்
உடற்கூறுசிகிச்சை
எக்ஸ்-ரே தொழில்நுட்பம்

FREE English Coures

PATHE HAND கற்கைநெறிகள் ஆங்கிலத்தில் நடத்தப்படுகின்றன. உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டிருப்பது. இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்புக்கும் இது உத்தரவாதமளிக்கின்றது.
ஐக்கிய ராச்சியம், மலேஷியா, இந்தியா, பெலாரஸ், அவுஸ்திரேலிய நாடுகளில் பட்டம் பெறலாம்

PATHE ACADEMY


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பொன்னையா

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி பழைய தபாற்கந்தோர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னையா கடந்த (28.07.2009)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை -இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை- இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், சிவநாதன் (ஜேர்மனி), மனோகரி (டென்மார்க்), காலஞ்சென்ற புஸ்பாதேவி (முன்னாள், விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழக மொழியியல்துறை), தபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் , புவனேஸ்வரி, குகதாசன் (டென்மார்க்), சிறிதரன் (இயந்திரவியல், அத்தியட்சகர், மின்சாரசபை,சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நதுர்ஜா, ஜனார்த்தனி, அபர்ணா, புஸ்பாகர், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2009) ஞாயிறு காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னகம்,
பழைய தபாற் கந்தோர் வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (560105)

தகவல்:
குடும்பத்தினர்.


## ESOFT

The Leader in Professionl ICT Education

சொல்பவர்கள் சொல்லட்டும்
எம்மவர்கள் நிரூபித்துள்ளார்கள்
நாமே No.1 என்பதை.

## BCS

British Computer Society - UK

E-Soft ல் BCS கற்பவர்களே இலங்கை ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முதற்பரிசுகளை பெறுபவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

Special Offers
20% Discount for University / Techical College Students
15% Discount for other Students




2008ஆம் ஆண்டு நிகழ்ந்த BCS பட்டமளிப்பு விழாவில் 11 சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன அவற்றுள் 10 விருதுகளை ESOFT மாணவர்கள் வென்றார்கள் என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றோம்...



Top Candidate Certificate Level, Top Candidate Diploma Level, Top Candidate PGD Level
BCS Convocation 2008 ESOFT Students

Top Candidate Certificate Level, Top Candidate Diploma Level, Top Candidate PGD Level, Top Candidate PGD Level
BCS Convocation 2007 ESOFT Students

Worldwide Winners
BCS Convocation 2006




Local Market

2007-2008 ஆண்டின் படி இலங்கையில் 80% மாணவர்கள் BCS கற்கை நெறிக்கு Esoft ஐ தெரிவு செய்கிறார்கள். இது சர்வதேச ரீதியில் 45% ஆகும்.




Global Market

## BIT

BIT கற்கை நெறிக்கு தொடர்ச்சியாக இலங்கையின் No.1 நிறுவனமாகத் திகழும் ESOFT நிறுவனத்தின் யாழ் கிளையில் புதிய பிரிவுகள் ஆரம்பம். உங்கள் பதிவுகளை எமது யாழ் கிளையில் மேற்கொள்ளவும்

2009-ஆம் ஆண்டு நிகழ்ந்த கொழும்பு பல்கலைக்கழக BIT பட்டமளிப்பு விழாவில் 138 மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். அவர்களில் 72 மாணவர்கள் எமது நிறுவனத்தில் கல்வி கற்றவர்கள் என்பதை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்......



The Gold Medalist in 2009 BIT Convocation
The Gold Medalist in 2008 BIT Convocation
First Class Degree Holder 2007 BIT Convocation

மாணவர்களே...! BIT கற்கைநெறிக்கு இலங்கையின் No1 நிறுவனத்தில் இணைவதற்கு உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
Hotline 077-3099308

## HND IN COMPUTING

edexcel-UK

Sun Certification for Java
Network Administration Linux
MCITP / MCTS Microsoft
CCNA Cisco
ICT, GIT
ICDL International Computing Driving Licence
Dip in Auto CAD
Dip in Computerized Accounting
ESOFT Kids

ESOFT
இலங்கை அரசாலும் அங்கீகரிக்கப்பட்டு ISO 9001 : 2008 தரச் சான்றிதல் பெற்ற கணனி நிறுவனம்.

Head Office
158 1/1, Galle Road, Colombo 4.
T.P- 011-2553883

Jaffna Branch
114, Navalar Road, Jaffna
T.P- 0212224142


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இத்தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதில் பங்குபற்றுக!

தமிழர் தாயகப் பகுதியில் இரு முக்கிய தேர்தல்களின் வாக்களிப்பு இன்னும் ஒரு வாரத்தில் - அடுத்த எட்டாம் திகதி - இடம்பெறப் போகின்றது.

தேர்தல் என்னவோ இரண்டே இரண்டு உள்ளூராட்சிச் சபைகளுக்குத்தான். யாழ்.மாநகரசபைக்கும் வவுனியா நகரசபைக்கும் - இரண்டு சிறிய தேர்தல்கள் என்றாலும் இன்றைய கட்டத்தில் தமிழினத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்ற முக்கிய விவகாரமாக அவை மாறியிருப்பதுதான் விசேடமாகக் கவனிக்கத்தக்கதாகும்.

தமிழர் தரப்பின் உரிமைக்காக கடந்த மூன்று தசாப்தகாலமாக முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தைக் கடந்த மே மாதம் நடுப்பகுதியுடன் வெற்றிகரமாகத் தோற்கடித்து, தனது ஆணையை இலங்கைத் தீவின் ஒவ்வொரு அங்குலத்திலும் உறுதியாக நிலைநாட்டி விட்டதாக அறிவித்த கொழும்பு அரசு, அதன் தொடராக, அந்த யுத்த முடிவின் கையோடு, இந்தத் தேர்தல்களையும் அவசர அவசரமாக அறிவித்து முன்னெடுக்கின்றது.

ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் கருத்து நிலைப்பாடு என்னவென்பதை - 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற மாதிரி - அளவீடு செய்யும் அமிலச் சோதனையாக இந்தத் தேர்தலை அர்த்தப்படுத்துவதில் சகல தரப்புகளும் இப்போதே முனைந்து தீவிரமாக நிற்பது வெளிப்படை.

எனவே, தமது இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக யாழ்.மாநகர சபைப் பிரதேசத்திலும், வவுனியா நகரசபைப் பிரதேசத்திலும் உள்ள மக்கள் - குறிப்பாகத் தமிழ் மக்கள் - இத் தேர்தலிலும் வாக்களித்தாலும் கூட -

ஒட்டுமொத்தமாகக் கட்சிகளுக்கும் அணிகளுக்கும் கிடைக்கும் வாக்குகளின் அடிப்படையில் ஒட்டுமொத்த தமிழினத்தின் நிலைப்பாடு இதுதான் என வரையறை செய்யும் நிலைமை இப்போதே தயாராகிவிட்டது என்பது தான் உண்மை.

இந்த வகையில் பார்த்தால் இந்த இரு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் வாக்களிக்கும் தமிழ் மக்கள், அந்த சபைகளுக்கான தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றார்கள் என்பதைவிட, ஒட்டுமொத்த இலங்கைத் தமிழினத்தின் தலையெழுத்தையே நிர்ணயிக்கின்றனர் என்று கூறுவதே சரியானதாக இருக்கும்.

இந்த வாக்களிப்பில் பங்குபற்றித் தமது கருத்து நிலைப்பாட்டை நெறிப்படுத்துவதன் மூலம், தமிழினத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது தொடர்பான முக்கிய நாணயக் கயிற்றைப் பற்றிப் பிடித்து அந்தப் பாதையை வகுப்பதில் முக்கிய பங்காளிகளாகத் தாங்கள் செயற்படுகின்றார்கள் என்பதை சம்பந்தப்பட்ட தமிழ் வாக்காளர்கள் உணர்ந்திருக்கின்றார்களா என்பதே கேள்வியாகும்.

இந்தத் தேர்தல் தொடர்பாக மாற்றுக்கொள்கைக்கான மையமும் மனித உரிமைக்கான இல்லமும் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பு மற்றும் புள்ளிவிவரத் திரட்டு தருகின்ற தகவல்கள் இவ்விடயத்தில் தமது பொறுப் புணர்வை யாழ்.நகரசபைப் பிரதேசத்தின் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் இன்னும் புரிந்துகொள்ளவேயில்லை என்பதைத்தான் உணர்த்தி நிற்கின்றன.

அந்தப் புள்ளிவிவரங்களின்படி - யாழ்.மாநகரசபை வாக்காளர்களில் 44.7 வீதத்தினர் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவேயில்லையாம்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர்களின் ஒட்டுமொத்த நிலைப்பாடாக யாழ்.மாநகரசபைத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தப்படலாம் என்ற நிலையில் நாம் அங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் ஆக 13.4 வீதத்தினருக்கே தேசிய அரசியலில் ஈடுபாடு உள்ளது என்றும் 42.9 சதவீதமானோருக்கு இலங்கை அரசியலில் ஈடுபாடேயில்லை என்றும் கூறப்படுகின்றது.

இத்தகைய தேசிய அரசியலில் ஈடுபாடேயில்லாத 42.9 வீத வாக்காளர்களைக் கொண்டுள்ள வாக்காளர் தொகையின் முடிவுதான் ஒட்டுமொத்த இனப்பிரச் சினை விடயத்தில்-தேசியப் பிணக்கு சம்பந்தப்பட்ட சமாச்சாரத்தில் - தமிழினத்தின் ஒரே நிலைப்பாடாக அர்த்தப்படுத்தப்படும் துர்ப்பாக்கியம் இங்கு நேர்ந்திருக்கின்றது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலுக்கு முனைப்பாக - முழுமும்முரமாக - தீவிரமாகத் தேர்தல் பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் யாழ்.மாநகரசபை வாக்காளர்களில் 79.3 வீதத்தினர் - அதாவது ஐந்தில் நான்கு பங்கினர் - இந்தத் தேர்தல் பிரசாரத்துடனேயே சம்பந்தப்படுவதில்லையாம்....!

இதேசமயம், இது தமிழர்களின் எதிர்கால நலன் தொடர்பான வாழ்வா, சாவா என்ற பிரச்சினையைத் தீர்மானிக்கும் தேர்தலாக முன்னிறுத்தப்பட்டுள்ள போதிலும் இந்த வாக்காளர்களில் 27.5 வீதத்தினர் - கணிசமான தொகையினர் - தனிப்பட்ட நலன்களைப் பெறும் நோக்கத்துடன் இந்த வாக்களிப்பில் பங்குபற்றப் போகின்றார்களாம். சமூக நன்மையைக் கருத்திலெடுத்து அதனடிப்படையில் இந்தத் தேர்தலை அணுகப் போகின்றவர்கள் ஆக 51.7 வீதத்தினர் மட்டும்தானாம்.

இந்தப் புள்ளி விவரங்களும் தகவல்களும் வரலாற்றுத் திருப்புமுனையில் தடுமாறிக்கொண்டிருக்கும் தமிழினத்தின் எதிர்காலப் போக்குக் குறித்து நடைபெறும் முக்கிய தேர்தல் ஒன்றின் வாக்களிப்பில் அந்த முக்கியத்துவத்தை கடப்பாட்டை-பொறுப் புணர்வை-உணராமல் தமிழ் மக்கள் பங்குபற்றப் போகின்றனர் என்ற விரக்தி நிலையையே நம் மத்தியில் உருவாக்கி நிற்கின்றன.

# வாக்காளர் அட்டை அபகரிக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு நீதியான தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகம்

## இப்படிச் சொல்கிறார் கூட்டமைப்பு எம்.பி.

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை அபகரிக்கும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளன. இதனால் இங்கு நீதியான தேர்தல் நடைபெறுமா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

மாநகரசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் அபகரிக்கப்படுவது தொடர்பாக நேற்று ரெலோ அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில் மற்றும் முதன்மை வேட்பாளர் மு.றெமிடியஸ், வேட்பாளர்கள் எஸ்.கனகரத்தினம், ரி.உதயகுமார், த.துரைமணி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

செய்தியாளர் மாநாட்டில்சுரேஷ்எம்.பி. மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தீவுப் பகுதியில் இருந்து பஸ்கள் மூலம் அங்குள்ள மக்களை அழைத்து வந்து வாக்காளிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொழும்புத்துறை, அரியாலை போன்ற சில பகுதிகளில் இருந்து 7 ஆயிரத்து 500 க்கும் அதிகமான வாக்குச் சீட்டுகள் பறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீடுகளில் இருப்பவர் யார் இல்லாதவர் யார் என்ற விவரங்களைக் கேட்டு பணம் கொடுத்து சம்பந்தப்பட்ட வாக்குச் சீட்டுக்களை பெற்று மிகப் பெரிய மோசடி இடம்பெறவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

தங்களது பெயரை பயன்படுத்தி வாக்காளர் அட்டைகள் சேகரிக்கப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார். தேர்தலில் மிகப் பெரிய மோசடி இடம்பெறப் போகின்றது. யாழ். உதவித் தேர்தல் ஆணையாளருக்கும் இது தெரியும். நாங்களும் தகவல் கொடுத்துள்ளோம்.

எனவே 8 ஆம் திகதி மிகவும் மோசமான தேர்தல் இடம்பெறலாம் என அச்சமுறுகிறோம். மாநகர சபைக்கான ஒரு லட்சத்து 4 ஆயிரம் வாக்காளர்களில் 40 வீதமான வர்கள் இல்லை. இவர்களின் வாக்குகள் பயன்படுத்தப்படவுள்ளன. இதற்காக தீவுப் பகுதியில் இருந்து வாக்காளர்கள் கொண்டுவரப் படவுள்ளனர்.

வன்னியில் 80 வீதமான பகுதிகளில் கண்ணி வெடிகள் இல்லை. ஒட்டுசுட்டான், ஓமந்தை, புளியங்குளம், கனகராஜன் குளம் போன்ற பகுதிகளில் இடம் பெயர்ந்த மக்களைக் குடியேற்ற முடியும். யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற இடங்களைச் சேர்ந்த மக்கள் சிறிய எண்ணிக்கையினரே உள்ளனர். இந்த இடங்களில் இவர்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இந்தியாவிடம் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

இலங்கை அரசு கண்ணிவெடிகளை அகற்றத் தவறினால் இந்தியப் படைகள் அவற்றை அகற்றுமாறு கேட்டிருந்தோம். இந்தியா கொடுத்த அழுத்தம் காரணமாக மக்கள் அழைத்து வரப்படவுள்ளனர். ஆனால் சிலர் தமது முயற்சியால் மக்கள் விடுவிக்கப்படுவதாக கூறுகின்றனர்.

180 நாள்களுக்குள் மக்கள் குடியேற்றப்படுவார்கள் என்ற உறுதியை அரசு வழங்கியுள்ளது. கொடுத்த வாக்குறுதியை மீறும் போது உரிய நடவக்கை எடுக்கப்படும். இந்தத் தவிர்க்க முடியாத நிலையில் தான் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர் .

இந்த மக்களை அகதிகளாக்கியது, இடம்பெயர வைத்தது, கடல் தடைச் சட்டம், வீதிகள் மூடப்பட்டமை எல்லாமே இந்த அரசால் மேற்கொள்ளப் பட்டவைகளே.

அரசின் இந்த நடவடிக்கைகள் புலிகளைப் பாதிக்கவில்லை. மக்களையும் அவர்களின் பொருளாதாரத்தையும் அழிக்கும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே -என்றார் (50 -111)

# கல்வி அமைச்சர் கல்வியியற் கல்லூரிக்கு நாளை விஜயம்

யாழ்ப்பாணம், ஓக. 2

கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த , திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அன்று கல்லூரிக்கு கணனிகள் அன்பளிப்புச் செய்வதுடன் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையா டலையும் மேற்கொள்ளவுள்ளார்.

அவருடன் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் விஜயம் செய்கிறார். (1)

# நுண்கலைப் பீடத்தில் மீள் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் நுண்கலைப் பட்டப் படிப்பை பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயின்று தமது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யத் தவறிய மாணவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கும் முகமாக நடத்தப்படும் மீள் பரீட்சைகள் (முதலாம் இரண்டாம் அரையாண்டுகள்) எதிர் வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதுவரை பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்காத மாணவர்கள் உடனடியா 021 222 3091 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விவரங்களை வழங்குமாறு யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் அறிவித்துள்ளார்.

# நீர்வேலியிலிருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் கட்டுடை கிராமத்துக்கு இன்று விநியோகம்

## அமைச்சர் அதாவுல்லா ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம், ஓக.2

நீர்வேலி பொக்கணையில் இருந்து கட்டுடைக்கு குழாய் மூலம் நீர்வழங்கும் பாரிய திட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கட்டுடைச் சந்தியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.பொ.வ. மா.க. முதலியார் தலைமையில் இப்பாரிய திட்டத்தில் கட்டுடை கிராமத்துக்கான நீர்வேலி விநியோக ஆரம்ப நிகழ்வு இன்று இடம்பெறும்.

இந்த நிகழ்வில் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைச்சர் அல்ஹாஜ் அதாவுல்லா நீர்விநியோகத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ், நீர்விநியோக வடிகால் அமைச்சு பொது முகாமையாளர் வி. பாரதிதாசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகு, வலி. தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் பு.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கருத்திட்டத்துக்கு அமைவாக முதற்கட்டமாக கட்டுடை மக்களுக்கு இன்று நீர்விநியோகம் வழங்கப்படுகின்றது.

அதற்கூடாக II ஆவது கட்டமாக நவாலி வடக்கு அரசடி வரைக்கும் இத்திட்டத்தினை விஸ்தரிக்கவும் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நீர்வேலி பொக்கணை - கந்தரோடைப் பகுதி - கட்டுடை வழியாக முதற்கட்டமாக கட்டுடைப் பகுதி மக்கள் தண்ணீரை பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(1-302-204))

# வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அராலி - வேலணை கடற்பாதையைப் புனரமைத்துத் தருக

## அரச அதிபரிடம் வலி.மேற்குப் பிரதேசசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 2

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அராலி - வேலணை கடற்பாதையினை புனரமைக்குமாறு வலி.மேற்கு பிரதேசசபை யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகப் பிரதேசசபை அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தீவகத்தையும் வலிகாமத்தையும் இணைக்கும் பிரதான பாதை அராலி - வேலணை கடற்பாதையாகும். இப்பாதை புனரமைப்புக் குறித்து கடந்த காலத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் முக்கியமாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேற்படி பாதை புனரமைப்புத் தொடர்பாக கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வேலணை பிரதேச சபைச் செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர், தீவகப் பொதுமக்கள் ஒன்றியத்தினர், யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனத்தினர், பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் 50 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் இதனை மீண்டும் வலியுறுத்தி 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்து தருமாறு பலகோரிக்கைகளை பொது அமைப்புக்கள் விடுத்த வண்ணம் உள்ளன.

இப்பாதை புனரமைப்புச் செய்யப்பட்டால் வலிகாமம் மற்றும் தீவகப் பகுதி மக்களின் உற்பத்தி, சந்தைப்படுத்தல், பிரதேச அபிவிருத்தி என்பன முழுமைபெறும் என்பதும் முக்கிய விடயமாகும்.

எனவே இப்பாரிய அபிவிருத்தித் திட்டம் முழுமை பெற அதனை முன்மொழிந்து பிரதேச அபிவிருத்திக்கு உதவுமாறு தங்களை தயவுடன் கேட்டுக் கொள்கிறோம் - என்று உள்ளது.

(50-9)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 18 | 03.08.2009 திங்கட்கிழமை |
| திதி: | திரயோதசி பி.இ. 02.45 வரை |
| நட்சத்திரம்: | மூலம் காலை 06.55 வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றிரவு நடை பெற்ற வசந்தோதயம் இசை நிகழ்ச்சியையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் உள்ள அவரது அலுவலக வாசஸ்தலத்தில் வைத்து வியாழக் கிழமை இரவு 8 மணியளவில் கைது செய்யப்பட்டார் என்று வெள்ளவத்தையில் உள்ள அவரது மனைவிக்கு பொலிஸார் அறிவித் துள்ளனர் என்று அறியவந்து.

வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட வேதநாயகன் உடனடியாக கொழும் புக்கு அழைத்து வரப்பட்டார். மீண்டும் வெள்ளிக்கிழமை வவுனியாவுக்கு அழைத்துச் செல் லப்பட்டார்.

இவர் வகித்து வந்த பொறுப்புகள் யாவற் றையும் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள அதிகாரியிடம் கையளித்து பின்னர் மீண்டும் கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட வேதநாயகன் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

அளவெட்டியை சொந்த இடமாகக் கொண்ட வேதநாயகன் யாழ்ப் பணத்தில் பல பிரதேச செயலகங்களில் பிரதேச செய லராகப் பணியாற்றி, கிளிநொச்சி மேலதிக அரச அதிபராக கடமையாற்றி 2004 ஆம் ஆண்டு அரச அதிபராக பதவி உயர்வு பெற்றார்.

கிளிநொச்சி செயலகம் இடம்பெயர்ந்த தைத் தொடர்ந்து வவுனியாவில் தற்காலிகமாக கிளிநொச்சி செயலகத்தை அமைத் துச் செயற்படுத்தி வந்தார்.

புலனாய்வுப் பிரிவினர் இவரை விசாரணைக்காக அழைத்துச் சென்ற போது அவர் தமது விடுதியில் தனிமையில் இருந்ததாகவும் இவரது பொறுப்பில் இருந்த இவரது உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அரச அலுவலகம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்பன இவரது அலுவலகத்தில் அதிகா ரிகளினால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் ஏன் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பது தொடர்பான தகவல் கள் எதுவும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. (அ-1)

## பொட்டு அம்மான்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் வழங்கிய தகவல்களின் பேரில், வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள தொடர் மாடி ஒன்றில் ஆறாவது மாடியைப் பொலி ஸார் சோதனை செய்தனர் என்றும் -

எனினும் இராணுவத்தினர் அங்கு செல்வதற்கு முன்னரே புலி உறுப் பினர்கள் தப்பி விட்டனர் என்றும் -

தப்பியவர்களில் ஒருவர் பொட்டு அம்மான் என்றும் ஆனால் அவர் குருவி என்றே அழைக்கப்பட்டார் என்றும் தகவல்கள் கூறுவதாக இணை யத்தளம் தனது செய்தி யில் குறிப்பிட்டுள்ளது.

(அ-1)


மலிவு விலையில்......

திருமண அழைப்பிதழ்கள்

ADORNA CARDS

www.andradesigns.com

விசேட விலைக்கழிவு 10%



புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய

திருமண அழைப்பிதழ்களை

எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்

நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்

ANDRA DIGITAL IMAGE

# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)

# 68, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

இணையத்தள முகவரி : www.andradesigns.com



லாவா வைத்திய நிலையம்

90/7, பொற்பதி வீதி, கொக்குவில்.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சேவையில்

- பொது வைத்தியம்
- குழந்தை வைத்தியம்
- தோல் வைத்தியம்
- பெண் நோயியல் வைத்தியம்
- உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்
- இரத்த, சல பரிசோதனைகள்.


## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தனது நீண்ட கட்டுரை ஒன்றில் எதிர்வு கூறியுள்ளார்.

இந்தியப் படையினர் இலங்கையில் இருந்தபோது அதனது புலனாய் வுத்துறையின் தலைவராகச் செயற்பட்டவர் கேணல் ஹரிகரன்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கீழான சிறிலங்கா அரசு, நாட்டின் சுதந் திரத்திற்கான போர் என்ற கூச்சலுடனேயே விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டைக்குத் தான் சென்றதாகக் கூறியது.

மக்கள் அவர்கள் பேசும் மொழியின் அடிப்படையில் பாகுபடுத்தப்படாது வாழும் ஒரு நாடு பற்றிய கனவு குறித்தும் அது பேசியது.

இப்போது, பெரும் தொகையான ஆள்களையும் பொருள்களையும் அழி யக் கொடுத்து போரை முடித்துவிட்ட பிறகு, அங்கு மேற்கிளம்பிவரும் சமூக - அரசியல் சூழல் அந்தக் கனவு நனவாகும் என்ற நம்பிக்கையைப் பிரதி பலிக்கவில்லை. அந்தக் கனவு கனவாகவே போய்விடக்கூடும்.

இப்போது ஒன்று தெளிவாகிவிட்டது. இலங்கை அரசியலில் வழக்கற் றுப் போய்க்கொண்டிருக்கிற சொற்களின் பட்டியலில் 'சமஷ்டி' போன்றே 'அதி காரப் பகிர்வு' என்ற சொல்லும் தூக்கி வீசப்பட்டுவிடும். அந்தப் பட்டி யலில் 'சிறுபான்மையினர்' என்ற சொல்லும் விரைவில் சேர்ந்து கொள்ளக்கூடும்.

## தடயங்கள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்ஆலய நிர்வாக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

கொள்ளைச் சம்பவம் குறித்து அறியப்படுவதாவது:-

சம்பவதினம் இரவு மூளாய் முருகன் கோயிலுக்குள் புகுந்த பத்துக்கும் மேற் பட்டவர்கள் கொண்ட குழு ஒன்று அந்த ஆலயத்துக்கும் அருகில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் உள்ள சிறிய கதவை உடைத்து பிள்ளையார் கோயிலுக் குள் சென்றுள்ளது.

முருகன் கோயிலில் திருப்பணி வேலை களுக்கு வைக்கப்பட்டிருந்த மண் வெட்டி, பிக்கான், இரும்புக்கம்பிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பிள்ளையார் கோயில் கதவுகளை கொள்ளை கோஷ்டி திறந்துள் ளதாக அறியப்படுகிறது.

எனினும் பிள்ளையார் கோயில் கதவுகள் உடைக்கப்பட்ட அடையாளங் கள் காணப் படவில்லைஎன்றும் கதவில் சேதங்கள் எதுவும் இல்லை என்றும் நேரில் பார்த்த வர்கள்தெரிவித்தனர். புதுவிதமான ' தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தியே' கதவுகள் திறக்கப்பட்டுள்ளனஎன்று பொலிஸார் கருதுகின்றனர்.

ஆலயத்தின் மூலஸ்தானத்துக்குள் நுழைந்த திருடர் அங்குள்ள மணிகள் சத்தம் எழுப்புவதை தடுக்க பட்டுச் சீலை களால் அவற்றை கட்டியுள்ளனர்.

### மூலஸ்தான மூர்த்தியைப் புரட்டி...

மூலஸ்தான மூர்த்தியைப் புரட்டி வீழ்த்தி விட்டு அடியில் இருந்த தங்கத் தகடுகளை கொள்ளையிட்டுள்ளனர்.

ஆலயத்தின் சகல அறைகளும் திறக்கப்பட்டு சல்லடை போட்டு துருவித் துருவி ஆராயப்பட்டதற்கான தடயங்கள் காணப் படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டன.

ஆலயத்துக்குச் சொந்தமான தங்க, வெள்ளி நகைகள் மற்றும் குருக்களின் வீட்டு நகைகள் என்று 150 பவுண் நகைகளை கொள்ளையர்கள் சூறையாடி உள்ளனர்.

கொள்ளையிட்ட பொருள்களின் மதிப்பீடு 2 கோடிக்கு அதிகம் என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

தங்க அங்கிகள், தங்கக் குடைகள், வெள்ளி அங்கி, குடைகள், மூல விக்கிரகத்துக்குகீழ் உள்ள தங்கத் தகடுகள் கொள்ளை போன பொருள் களின் முக்கியமானவை ஆகும்.

சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் ஆலயத்துக்கு பின்னால் உள்ள வயலில் இருந்து மூலஸ்தான விக்கிரகங்களுக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த செப்புத் தகடுகளை மீட்டுள்ள னர். வயலில் உள்ள கிணற்றில் இருந்து ஆலயக் குருக் களின் சால்வையையும் அதில் முடிந்து வைக்கப் பட்டிருந்த 3 ஆயிரம் ரூபா பணத்தையும்'பேர்ஸ்' என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

படையினரும் பொலிஸாரும் நேற்று அந்தப் பகுதியிலும் அயல் பகுதிகளிலும் தேடுதல்களை நடத்தினர்.

பெரிய அளவில்திட்டமிடப்பட்டுபெரும் ஆளணி உதவியுடன்இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ள தால்சூத்திர தாரிகளை கண்டுபிடிக்க முடியும் என பொலிஸார் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர். வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்களுடன் யாழ்ப்பாணத்தில் இருந் தும் விசேட பொலிஸ் குழு சென்றுள் ளது.

பிள்ளையார் கோயி லுக்கு அருகில் திருப் பணி வேலைகள் இடம்பெறும் முரு கன் கோயில் மூல மூர்த்தி யும் புரட்டப்பட்டு அங் கிருந்த செப்புத் தகடுக ளும் அபகரிக் கப்பட் டுள்ளன. வட்டுக் கோட்டைப் பொலி ஸார் தொடர்ந்து விசார ணைகளை மேற் கொண்டு வருகின் றனர்.

(அ-1)


இறுதிக் கருத்தரங்கு

இன்று A/L தமிழ்

1 - 4

எதிர்பார்ப்பு நிறைவேறும்

Science Hall

கன்னாதிட்டி, யாழ்.



SHAMROCK

சச்சமோட்டை,யாழ்

A/L 2010

Paper Class

'அரசியல் மூலதத்துவங்கள்'

Mr.s.ஸ்ரனிஸ்லாஸ்

B.A,Dip.in.Ed

இன்று (02.08.2009)

sun 10 am


## இன்று தொடக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப் பாணத்திலிருந்து கொழும்பு வரையான ஒருவ ழிப் பாதைக் கட்டணம் 475 ரூபா ஆகும். இதற் குரிய ரிக்கெட் பயண ஆரம்பத்தில் வழங்கப்படும்.

ஏற்கனவே பயண பாதுகாப்பு அனுமதியினைப் பெற்றவர்கள் அதன் மூலப் பிரதியுடன் தினமும் காலை 7 மணிக்கு யாழ்ப்பா ணம் ரயில் நிலையத் திற்கு பயண ஏற்பாடுகளுடன் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள். பயண அனுமதியின் மேலதிகப் போட்டோப் பிரதி ஒன்றினையும் ஒவ்வொரு பயணியும் கொண்டு வருதல் வேண்டும்.

இன்று 2 ஆம் திகதி பல்கலைக்கழக மாண வர்கள் 90 பேரும், 3 ஆம் திகதி கப்பலில் பய ணிப்பதற்கு பதிவு செய்த 110 பிரயாணிகளும் அனுப்பப்படுவார்கள்.

தினமும் 200 பயணிகள் மட்டுமே பய ணம் செய்ய இயலும் என்பதனால் நாளை தொடக்கம் பய ணிப்பவர்கள் பயணம் செய்வதற்கு முதல் தினம் நண்பகல் 12 மணிக்கு முன்பதாக மாவட்ட புனர் வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பதிவுகளை நேர டியாக மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுகின்றார்கள்.

அதேவேளை யாழ்ப்பாணத்திற்கு மீளத் திரும் புபவர்கள் தமது பாதுகாப்பு அனுமதி போட்டோப் பிரதியுடன் மீள யாழ்ப்பா ணத்திற்கு பயணிக்க முடியும். வவுனியாவில் இருந்து திரும்பும் பேருந் துகள் வவுனியா - கண்டி வீதி இரம்யா இல்லத் தின் முன்பாக இருந்து புறப்படும் - என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவையில் பயணம் மேற்கொள் பவர்க ளிடம் கட்டணமாக 150 ரூபா அறவிடப்படும்.

இதேவேளை- கொழும்பில் இருந்து யாழ்ப் பாணத்துக்கும் ஒரு வழிப்பயணம் செய்வதற்கு இது வரை எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது.

எனினும் சில தினங்களில் அது குறித்த அறி விப்பும் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


மாபெரும் புவியியல் மாதிரி பரீட்சை

A/L 2009

- முழுமையாக எதிர்பார்ப்பு வினாக்கள்
- யாழ். கொழும்பு வளவாளர்களால் தயாரிக்கப்பட்டது
- மாதிரி பரீட்சை திருத்தி விடைகளுக்கு விளக்கமளிக்கப்படும்

நேர அட்டவணை: புவியியல் I - 05.08.2009 காலை 9 - 12; புவியியல் II - 06.08.2009 காலை 9 - 12; புவியியல் III - 07.08.2009 காலை 9 - 12

இடம்:- யாழ். Science Hall

பரீட்சை + கலந்துரையாடல் கட்டணம் 300 மட்டுமே

பதிவுகள் யாவும் 03.08.2009 மாலை 6 மணிக்கு முன்னதாக Science Hall இல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.



மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்...

MW 1: Intel Atom 1.6 GHz Processor, Intel D 945 GCLF Motherboard, 120 GB SATA Hard Disk, Kingston 1 GB RAM, Samsung DVD Rom, ATX Black Casing, 15'' LCD Monitor, Keyboard, Optical Mouse, Multimedia Speaker, Power Tree UPS 650 V — 37000/-

MW 2: Intel Pentium 2.8 GHz Processor, Asrock G31 M-S Motherboard, 120 GB SATA Hard Disk, Kingston 1 GB RAM, LG DVD Writer • ATX Black Casing, 15'' LCD Monitor, Keyboard • Optical Mouse, Multimedia Speaker, Power Tree UPS 650 V — 41000/-

MW 3: Intel 2.2 GHz Dual Core Processor, Asrock G31 M-S Motherboard, 160 GB SATA Hard Disk, Kingston 1 GB RAM, LG DVD Writer, ATX Black Casing, 17'' LCD Monitor, Keyboard, Optical Mouse, Multimedia Speaker, Power Tree UPS 650 V — 47000/-

MW 4: Intel 2.5 GHz Dual core Processor, Asus P5 KPL-AM G31 Motherboard, 250 GB SATA Hard Disk, Kingston 1 GB RAM, Asus Lightscribe DVD Writer, ATX Black Casing, 17'' LCD Monitor • Keyboard, Optical Mouse • Multimedia Speaker, Power Tree UPS 650 V — 49000/-

MW 5: Intel 2.5 GHz Dual Core Processor, Intel DG31 PR Motherboard • 250 GB SATA Hard Disk, Kingston 1 GB RAM • Samsung DVD Writer, ATX Black Casing • 19'' LCD Monitor, Keyboard • Optical Mouse, Multimedia Speaker, Power Tree UPS 650 V — 53000/-

MW 6: Intel 2.8 GHz Core 2 Duo Processor, Intel DG31 PR Motherboard, 320 GB SATA Hard Disk, Kingston 1 GB RAM, LG DVD Writer • ATX Black Casing, 19'' LCD Monitor • Keyboard • Optical Mouse, Multimedia Speaker • Power Tree UPS 650 V — 59500/-

FREE: Web Camera, Bluetooth, Card Reader (All in One)

* Stock Available * Warranty Value 1-3 years

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.

141B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/பக்ஸ்: 021 222 6554

(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)



யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

FedEx Express

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

உள்நாடு, வெளிநாடு களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்

குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் ரெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ் முன்பாக)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

TCN EXPRESS

வாடிக்கையாளரின் நலன்கருதி 10% - 25 % விசேட கழிவு

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.